www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**பிடிசறுக்கும் பீரிஸ்!**

ஆங்கிலத்தில் ஒன்று; அறிந்தவர்க்கு இன்னொன்று
ஏங்கியழும் எம்மவர்க்கு இன்னுமொன்று - ஓங்கு புகழ்
பேராசான் பேச்சில் பிடிசறுக்கு தையையோ
போர்தானோ? போமோ பொதி!

ஈழமோகம்

இதழ் 79 | ஒகஸ்ட் 24 - செப்டம்பர் 06, 1995 | விலை 7.00




# யுத்தம்வேண்டாம்!

சமாதானத் தீர்வுக்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டபின் அதன் மீதான கலந்துரையாடல்கள் நடாத்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருக்கும் அதேவேளை, ஒப்பரேசன் லீப்-2க்கான தயாரிப்புகளும் துரிதமாக நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது. சமாதானத்துக்கான முயற்சிகள் ஒருபோதும் யுத்தத்தை நடாத்திக் கொண்டே சாதிக்கப்பட முடியாதவை என்பதும், அவை என்றென்றைக்கும் சமாதானத்துக்கான வாய்ப்புக்களை இல்லாமல் செய்து விடுமென்றும் சில தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்திடம் எடுத்துக் கூறியுள்ள போதும், இந்த நடவடிக்கைக்கான முஸ்தீபுகளை அரசாங்கம் மேற்கொள்வதாகத் தெரியவருகிறது.

இன்னொரு பாரிய தாக்குதலை நடாத்துவதற்கு பதில் அரசாங்கம், முன்வைத்த சமாதான தீர்வுக்கான ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளில் தீவிரமாகவும் வேகமாகவும் இறங்குவதே நாட்டில் சமாதான முயற்சிகள் வெற்றிபெற உள்ள சிறந்த வழி என்று அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

யுத்த முயற்சியைக் கைவிட்டுவிட்டு, சமாதான நடைமுறைப்படுத்தலுக்கான முயற்சியை மேலும் தீவிரப்படுத்துமாறு வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் பெயராலும், நாட்டின் அனைத்து மக்களின் நலனின் பெயராலும் எழுகிழ கோரிக்கைக்கு செவிசாயுங்கள்!

யுத்தம் வேண்டாம்!!

சமாதான முயற்சிகளை இதய சுத்தியுடன் தொடருங்கள்!!!

யுத்தம் வேண்டாம்! யுத்தம் வேண்டாம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பிரிவினை தவிர்ப்பு வழி முறைகள்

அரசாங்கத்தினால் முன் வைக்கப்பட்டுள்ள அரசியல் யோசனைகளினூடாக நாடு பிளவுபட இடமுள்ளதாகச் சிலர் செய்யும் பிரச்சாரம் காரணமாக மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய குழப்பத்தை அகற்று முகமாக எப் பிராந்தியமுமே பிரிந்து செல்லும் உரிமை அற்றதான சரத்தொன்றை அரசியலமைப்பில் சேர்ப்பதில் அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் லங்கா சம சமாஜக் கட்சியினால் முன் வைக்கப்பட்டுள்ள யோசனையொன்றின் படி இத் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளதெனவும் அதற்குச் சமனான யோசனையொன்றை ஐக்கிய தேசியக் கட்சியும் முன் வைத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ஏதாவது மாகாணமொன்றோ அல்லது பல மாகாணங்களோ பிரிந்து செல்லக் கோரினால், அக் கோரிக்கை முழு நாட்டினதும் மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றின் 2/3 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றால் மட்டுமே சாத்தியமாகலாம் அல்லது அவ்வாறான கோரிக்கைகள் எதனையும் செய்ய முடியாதபடி சில அம்சங்கள் புதிய அரசியலமைப்பில் சேர்க்கப்படும்.

அதற்குப் புறம்பாக ஏதாவதொரு மாகாணம் ஏனைய மாகாணங்களை விடச் சலுகைகள் பெறும் நிலைமையைத் தவிர்ப்பதற்காகவும் சட்டவாக்கங்கள் அறிமுகப்படுத்தப்படுமெனவும் அரசாங்கத் தகவல் வட்டாரங்கள் மேலும் குறிப்பிடுகின்றன.

யுக்திய - 1995-08-13

## Mr.CLEAN செய்யும் படுகொலைகள்?

கடந்த சில மாதங்களாக அவ்வப்போது நாட்டின் ஆறுகளிலும் வாவிகளிலும் கிடைக்கிற சடலங்களின் பின்னணியில் இருப்பவர் ''யானை அரசன்'' என்று சொல்லப்படுகிறது. கடந்த பயங்கரக் கால கட்டத்தினுள் படுகொலைக் குற்றச்சாட்டுக்கள் பலவற்றிற்கு உள்ளான தனது தேர்தல் அதிகாரப் பிரதேசங்களினுள் வதை முகாம்களை வைத்திருந்த இந்த அரசன் தற்போதைய கட்சியின் ''தூய்மையான கனவானு''மாவார்.

இவ் அரசியல்வாதியினால் செய்யப்பட்டுள்ள இப் படுகொலை நடவடிக்கைகள் பொதுசனத் தொடர்பு சாதனங்களில் வெளிவருவதை இதுவரை தடுத்து வைத்திருப்பது அரசாங்கக் கட்சியுடன் தொடர்பான மலையகப் பிரதேச அமைச்சரொருவராவார். இப் படுகொலைகளைச் செய்துள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மூவர் இதுவரை அரசாங்கத்தின் இராணுவத்தந்திரோபாய வழி முறைகளை நடைமுறைப்படுத்தும் வடபகுதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் இத் தகவல்கள் தொடர்பாக நன்கு அறிந்துள்ள பொ.ஐ.மு.தலைமைக்கும் நடவடிக்கையொன்றை எடுக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

இப் படுகொலைகள் தொடர்பாக அநேக தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளது. கடந்த தினமொன்றின் இரவு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன் இளைஞரொருவரைக் கடத்திச்செல்ல முயற்சி எடுக்கப்பட்டதுடன் ஆகும். மேற்கூறிய இளைஞரின் தந்தை சட்டத்தரணியொருவராதலால் இக் கடத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்காதிருக்கப் பாதுகாப்புப் பிரிவுகளுக்கு முடியவில்லை.

இந்த அரசியல்வாதியும் இராணுவ அதிகாரிகளைப் பிரதானமாகக் கொண்ட குழுவும் ஆகக் குறைந்தது ஒரு வாரத்தினுள் மூன்று பேரையாவது கொன்று போட்டுள்ளனர். தமக்கு இதுவரை அவசியமான அரசியல் ஒத்துழைப்பிற்காக இங்கு கூறப்பட்ட ''தூய்மையான கனவானுக்கு'' எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்காதிருக்கவும் பொ.ஐ.மு.தலைமை உடன்பட்டுள்ளது.

ஆனாலும் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கு இத் தகவல்கள் வெளிவந்திருக்கிறது. ஆனால் முன்பு கூறிய மலையகப் பிரதேச அமைச்சர் அது தொடர்பாக தகவல்கள் வெளிவராமல் இருப்பதற்கு சிற் சில நடவடிக்கைகளை எடுப்பதாக படுகொலையாளர்களிற்கு வாக்குறுதியளித்துள்ளார். இம் மலையக அரசியல்வாதியினாலேயே கடந்த தனது வெளிநாட்டுப் பயணத்திற்கு முந்திய தினமொன்றில் அப் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் படுகொலை செய்யப்பட்டு பிரதேச வாவியொன்றில் மூழ்கடிக்கப் பட்டார்.

எவ்வாறெனினும் மேலும் ''தூய்மையான கனவானிற்கு'' அவகாசம் கிடைக்காதபடி இத் தகவல்கள் விரைவாக மக்கள் மத்தியில் அனுப்பப்பட வேண்டுமெனக் கடந்த சில தினங்களிற்கு முன் கூடிய பொ.ஐ.மு.க் குழுவொன்றினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஹிறு - 1995-08-13




வெள்ளைத் தாமரை (சுது நெலும்) இயக்கத்திற்கு எதிராகக் குருதித்துளி சொட்டும் தாமரைப்பூ கொண்ட சுவரொட்டியொன்றைத் தயாரித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அமெரிக்கப் பிரஜையான கென்னத் முல்லர் சில வாரங்களுக்கு முன் இந் நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டார்.

தற்போது அவ்வாறான சுவரொட்டியொன்று பரவலாகப் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. ''முஹுணட்ட சுது நெலும் பெல்லட்ட தலி பிஹிய'' (முகத்திற்கு வெள்ளைத் தாமரை, கழுத்திற்குச் சவரக் கத்தி) என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டுள்ள அச் சுவரொட்டியின் வெளியீட்டாளர் நவ சம சமாஜக் கட்சியின் செயலாளர் விக்ரமபாகு கருணாரத்ன ஆவார். அதன் பிரதியொன்று யுக்தியவிற்குக் கிடைத்துத் தற்போது அப் பிரதி யுக்திய காரியலயத்தினுள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

என்ன கூறுகிறீர்கள்? விக்கிரமபாகுவையும் வெளியேற்றுகிறீர்களா? இல்லையா?

யுக்திய - 1995-08-13

## யுத்தத்தின் ஒரு பகுதியே சமாதானம்!

சமாதானப் பிரயத்தனம் முறிவடைந்ததும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க அரசு இரகசிய நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரித்துள்ளதெனவும் அரசின் அரசியல் தீர்வுத் திட்டம் யுத்தமயக் குறிக்கோளின் ஒரு பகுதியெனவும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் வசந்தராஜா ஜெனீவாவில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் சுய நிர்ண உரிமை கோரி ஒகஸ்ட் 14ஆந் திகதி ஜெனீவா நகரில் நடைபெற்ற மாபெரும் ஊர்வலத்தின் பின் பத்திரிகையாளர் மகாநாடொன்றில் வசந்தராஜா இக்கருத்தைத் தெரிவித்துள்ளார். இவ் ஊர்வலத்தில் தமிழ் மக்கள் பத்தாயிரம் பேரளவில் கலந்து கொண்டதாகத் தெரியவருகிறது.

லக்பிம - 1995-08-20

## மீள மீளக் கொல்லல்

எவ்வளவு நேரம் வெளியில் நிற்பது?
மஞ்சள் குரோட்டன் இலைகளில் பட்டுத்
தெறிக்கிற வெயிலையும்
இன்று தான் குருத்துவிட்ட
ஆற்று வாழையையும்
திரும்பத் திரும்ப எத்தனை தரம் பார்ப்பது?
சுவருக்கு மேலால் தெரிகிற பிரதான
சாலையில் எத்தனை வாகனங்கள்?
இரைச்சல். புகை.
நீ வருவதாகச் சொன்ன ஆட்டோ தான் எங்கே?

மிக அலுத்துப் போயிற்று என் அன்பே இன்று
எரிச்சலில்
படாரெனக் கதவை இழுத்தடைத்து
அறைக்குள் சென்று வீழ்கிறேன் கட்டிலில்.
எதிரே நிக்கிற நிலைக் கண்ணாடியில்
பழமாய்ச் சிவந்த எனதிரு விழிகளும்

நேற்றிரவென் துயில்
சிதைந்து தான் போயிற்று.
அன்று காலை வருவதாய்
நீயே வந்து சொல்லிப் போன பின்.
எவ்விதம் நான் துயிலுதல் இயலும்?
இரவு முழுக்க என்னென்ன அதிசயங்கள்?
அறைச் சுவர்கள் பூப்பூத்ததும்
பளிங்கு அருவிகள் சலசலத்ததும்
ஜன்னலின் வெண்திரைகள் விலத்தி
ஈர்ப்பறுந்த வெளிகளிடை எனைக்
காவிச் சென்றதும். மற்றும்
எதை எழுத?
எதை விட?

இன்னும்
எங்கு போய்த் தொலைந்தாய் நீ?
கால்கள் தாவாமல்
இருப்புக் கொள்ளாமல்
விடிய விடியவும் விடிந்த பிறகும்
என்ன ஒரு அவஸ்தையிது chel?
கடிகார முட்களோடு நகர்ந்து நகர்ந்து
என் கண்களின் கூர்மை மங்குது பார்
எங்கே ஊர்கிற நூறு ஆட்டோ இரைச்சலில்
நீ வருவது எதுவென நான்
எப்படித் தெரிவது?

மிகத் தொலைவான
அண்மித்த ஒலிகளையெலாம் நான்
இன்று தான் செவிமடுக்கிறேன்
வாசலில் நிக்கிற விலாட்டு மாவிலும்
அயல் வீட்டு மரங்களிலும்
பெயர் தெரியாத இத்தனை குருவிகள்
கீச்சு கீச்சென எழுப்புகிற ஒலிகள்
ஏன் எனக்கு கேளாதிருந்தன?
நீ வருவதெனில் மட்டுமா என்
புலன்களில் துளிர்க்கிறது உயிர்?

நீ வருவதாய்ச் சொன்ன நேரமுங் கடந்து
அதிகமாய் போனது இருமணி நேரம்.
என் புல்லின் நுனியில் தேங்கி மினுங்கிய
கடைசித் துளி நம்பிக்கையும்
உலர்ந்திற்று மெல்ல.
இன்னமும் நீ வரவில்லைத் தான்.
வரவேயில்லைத் தான்.
எங்கே என் அறைக்குள் பூத்த பூக்கள்?
எங்கே என் அறைக்குள் அசைந்த அருவி?
எங்கே எனை மிதக்க விட்ட காற்று?

-என். ஆத்மா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்னும் சில வருடங்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம் வெளியிடப்படவே மாட்டாது'' என்று தோன்றுவதாக இப்பத்தியில் சென்றதடவை குறிப்பிட்டிருந்தோம்.

அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட நேரம் இல்லாததால் திட்டம் வெளியிடப்படவில்லை என அரசாங்க தரப்பு பொறுப்பற்ற விதத்தில் அறிவித்ததும், கடந்த ஓராண்டுக்கு மேலாக இத்திட்டத்தை வெளியிடுவதை இழுத்தடித்ததும் நாம் இவ்வாறு எழுதியதற்கான முக்கிய காரணமாகும்.

நாம் மட்டுமல்ல, அரசாங்கத்தின் பொறுப்பற்ற நடவடிக்கைகளால் சலிப்புற்றிருந்த எல்லோருமே அவ்வாறுதான் கருதினார்கள்.

எப்படியோ, அரசாங்கம் இப்போது தனது திட்டத்தை முன்வைத்துவிட்டது. உண்மையில் இது திட்டம் அல்ல. அத்தகைய ஒரு தீர்வு திட்டத்திற்கான அரசாங்கத்தின் ஆலோசனைகள் தான் இவை.

இந்த ஆலோசனைகள், இதுவரை கால அரசாங்கங்களால் முன்வைக்கப்பட்ட தீர்வு ஆலோசனைகள், எழுதப்பட்ட ஒப்பந்தங்களுடன் ஒப்பிடுகையில் முன்னேறிய அம்சங்களை கொண்டுள்ளது என்பது பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் முக்கிய அரசியல் விமர்சகருமான எஸ்.குகன் அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் '1987ல் கொண்டு வரப்பட்ட 13வது திருத்தச்சட்டத்திலிருந்து குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்த பல அம்சங்களை இந்த யோசனைகள் கொண்டுள்ளன என்றும், பல அம்சங்களில் இலங்கையின் உத்தேச பிராந்தியங்களின் அதிகாரங்கள் இந்திய மாநில சபைகளின் அதிகாரங்களை விட அதிகமாக உள்ளன என்றும், ஆளுனர்கள் 2/3 பெரும்பான்மை பலத்துடன் பிராந்திய சபைகளால் அகற்றப்பட முடியும் என்பது மிகவும் முக்கியமான ஒரு வியடம் என்றும் தெரிவித்துள்ளார்.

உண்மையில், அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள், அவை யோசனைகள் என்ற மட்டத்திலேயே இன்னமும் உள்ளன என்றபோதும், சில முக்கியமான அம்சங்களை கொண்டு தான் இருக்கின்றன. பிராந்திய சபைகளின் சுயாதீனம், முடிக்குரிய காணி மீதான அவற்றின் நியாயாதிக்கம் என்பன இவற்றில் குறிப்பிடத்தகவை. அதேவேளை அரசாங்கம் பல விடயங்களில் தனது முடிவுகளை தெளிவாக முன் வைக்கவில்லை. உதாரணமாக வடக்கு கிழக்கு மாகாணம் மீள எல்லை அமைக்கப்படுவது, முஸ்லீம் மலையக மக்களது நிலை என்பன குறித்து தெளிவாக எந்த விடயங்களும் குறிப்பிடப்படவில்லை. இன்னும் சில விடயங்களைப் பற்றிப் பேசவே இல்லை. குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லீம் மக்களின் தாயகம் என்ற பிரச்சினை, மத்திய அரசாங்கம் ஏன் தொடர்ந்தும் சிங்கள பௌத்த அரசாகவே வேண்டும் போன்ற கேள்விகள் விடையளிக்கப்படாமலேயே உள்ளன.

1987ல், இந்திய - இலங்கை அரசுத் தலைவர்களால் வரையப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம், மாகாண சபைகளை அறிமுகப்படுத்தி, இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு 13வது திருத்தம் ஒன்றையும் கொண்டு வந்தது. தமிழ் முஸ்லீம் மக்கள் மீதான இனஒதுக்கல் காரணமாக எழுந்த தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்ற அடிப்படை உடைப்பில் போடப்பட்டு இலங்கை - இந்திய அரசுகட்கிடையான உறவுகளின் அடிப்படையிலேயே இந்த ஒப்பந்தம் எழுதப்பட்டது. தமிழ் கட்சிகளையோ விடுதலை இயக்கங்களையோ சரியான முறையில் கலந்தாலோசிக்கப்படாமல் தயாரிக்கப்பட்ட இவ்வொப்பந்தம் இங்குள்ள மக்கள் மீது திணிக்கப்பட்டது. பின்னர் ராஜீவ் என்ற தனிநபர் மீது கொண்ட நம்பிக்கையாலும், அவரது தனிப்பட்ட உறுதி மொழிகளாலும் திருப்திப்படுத்தப்பட்ட தமிழ் கட்சிகள்/ இயக்கங்கள் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்தன. ஆயினும், இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவது திட்டமிட்டு 'இழுத்தடிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் பல நடைமுறைக்கு வரவே இல்லை. இறுதியில் பாராளுமன்றம் மிகச் சாதாரண பெரும்பான்மையை பயன்படுத்தியே மாகாண சபைகளை கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கியது!

இன்று இந்த அரசு முன்வைத்துள்ள ஆலோசனைகளும் கூட, வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு காண வேண்டும் என்பதற்கு



அதே விதமான ஒரு வழியை கடைப்பிடித்துள்ளது. மாகாண சபைகளுக்கு பதில் பிராந்திய சபைகள் உருவாக்கப்படவுள்ளன. சில மேலதிக அதிகாரங்கள் இவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன. இலங்கையை ஒரு பிராந்தியங்களின் ஒன்றிய அரசாக அரசியலமைப்பில் மாற்றியமைக்கும் நோக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு எட்டுப் பிராந்தியங்களின் ஒன்றியமாகவும் மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்குமிடையிலான பிணக்குகளை ஆராய அதிகாரப் பரவலாக்கல் ஆணைக்குழு உருவாக்கப்படும் என்றும் இந்த ஆலோசனைகள் கூறுகின்றன. அரசாங்கத்தின் இந்த ஆலோசனைகளின் பலம் பலவீனம் எல்லாம், தமிழ் முஸ்லீம் மக்களின் அபிலாசைகளை முற்று முழுதாக அவை தீர்த்து வைக்குமா என்பதில் தான் தங்கியுள்ளன. இன்று அரசாங்கத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த யோசனைகளில் தெளிவுபடுத்தப்படாமல் இருக்கும் விடயங்கள் தெளிவுபடுத்தப்படும் போதுதான் அவை பற்றி முடிவாகச் சொல்ல முடியும்.

அரசு முன்வைத்துள்ள யோசனைகளில் தெளிவாக முன்வைக்கப்பட்டவைகளை அமுல்படுத்துவதிலும் எந்த நெருக்கடிகளிலுமிருந்தும் அவை குறித்து பின்வாங்காமல் இருப்பதும், தெளிவுபடுத்தப்படாதிருக்கும் விடயங்களை விரைவிலேயே தெளிவுபடுத்துவதும், சொல்லாமலே இருக்கும் விடயங்களைப் பற்றி அறிவிப்பதும் உடனடி அவசியமான விடயங்கள். இழுத்தடிக்கப்படுகின்ற ஒவ்வொரு கணமும், மேலும் மேலும் சந்தேகங்களை வளர்க்கவும், நெருக்கடிகளை வலுப்படுத்தவுமே உதவும். உண்மையில் கடந்த டிசம்பர் மாதத்திலேயே தயார் என்று அரசாங்கம் அறிவித்த இந்தத் தீர்வு யோசனைகளை இதுவரை வெளியிடாமல் அரசாங்கம் தாமதித்ததே இன்றைய பல நெருக்கடிகளுக்கு காரணம் எனலாம். இவற்றை அப்போதே அறிவித்திருந்தால், இப்போது இவற்றில் பல விடயங்கள் தொடர்பான தீர்மானகரமான முடிவுகளுக்கு வந்திருக்க முடியும். ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையைக் கூடத் தவிர்த்திருக்க முடிந்திருக்கும்.

இன்றோ அரசு முன்வைத்துள்ள யோசனைகளை தெற்கின் இனவாத சக்திகள் தீவிரமாக எதிர்க்கின்றன. ஜாதிக சிந்தனை குழு, மக்கள் ஐக்கிய முன்னணி, பௌத்த பீடங்களில் சில, சில மதகுருமார்கள் போன்றோர்- இவர்களுக்கு மக்களிடையேயான ஆதரவு ஒப்பீட்டளவில் சிறியதாயினும் -தீவிர தாக்குதல்களை தொடுத்துள்ளனர். கொழும்பின் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளும் (மாற்று பத்திரிகைகள் அல்ல) தீவிரமாக அரசாங்க யோசனைகளை எதிர்க்கின்றன. போதாததற்கு அரசாங்கத்தினுள் உள்ள கட்சிகளும் தனி நபர்களும் கூட (சிறிமணி அத்துலத் முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ரட்ண சிறி விக்கிரமநாயக்க) இந்த யோசனைகளை எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். இத்தகைய பரவலான சிங்கள இனவாத அடிப்படையிலான எதிர்ப்பை அரசாங்கம் எதிர்கொள்கின்ற விதமும் நம்பிக்கையை சிதைக்கக் கூடியதாகவே அமைகின்றது.

குறிப்பாக, வடக்கு கிழக்கின் மீதான யுத்தம், சமாதான யோசனைகள் மூலம் புலிகளை தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி விடப்போகிறோம் என்பது போன்ற அறிவிப்புக்கள், ஆயுதப் படையினரை தேச பாதுகாவலர்களாகவும், வடக்கு கிழக்கு

**நீங்கள் உங்கள் கடமையை செய்யுங்கள் அவர்கள் தங்கள் கடமையைச் செய்வார்கள்!**



## நாசமறுப்பான்

மக்களுக்கு விடுதலையை வாங்கித்தர வந்தவர்களாகவும் அறிவிப்பது, பிராந்தியங்களின் சுயாதீனத்துவம் பற்றிய கேள்விகட்கு பதிலளிக்கையில், மத்திய அரசாங்கத்தால் பிராந்தியங்களை கட்டுப்படுத்த முடியும் என்று கூறுவது, ஆளுநருக்குள்ள அதிகாரம் பற்றிய கேள்விகளின் போது தடுமாறுவது, சுது நெலும் (வெள்ளைத் தாமரை) இயக்க மூலமாக யுத்தத்தால் கொல்லப்பட்ட படையினர் குடும்பங்களுக்கு உதவி செய்யும் விதத்தில் நாடு பூராவும் நிதி சேகரிக்கும் வேலைகளில் ஈடுபடுவது, வடக்கு கிழக்கில் கொல்லப்படும் மக்கள், தாக்குதல்களை பற்றிய பேச்சுக்களின் போது, அவற்றை தவிர்க்க முடியாத விடயங்களாகக் குறிப்பிடுவது போன்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சமாதான நோக்கத்தை கேள்விக்குள்ளாக்குகின்றன.

மனப்பூர்வமான அர்ப்பணிப்புடனான சமாதானத் தீர்வு முயற்சியிலும் அதிகாரப் பரவலாக்கங்களிலும் இந்த அரசு இறங்கியுள்ள தென்றால், தீர்வு ஆலோசனைகளை புலிகளுக்கு அறிவிக்க மாட்டோம் என்றோ, பௌத்தமதம் இலங்கையின் அரசமதமாகவே இருக்கும் என்றோ, கிழக்கில் வாழும் சிங்கள முஸ்லீம் மக்களுக்கு பாதுகாப்பு தரும் விதத்தில் எல்லைகள் மறுவரைவு செய்யப்படும் என்றோ அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

முடிவு பாதையை நியாயப்படுத்திவிடும் (End Justifices the means) என்று அரசு கருதுவதன் காரணமாக, தனது ஆலோசனைகளை அங்கீகரிக்க வைப்பதற்காக இனவாதிகளைக் கூட திருப்திப்படுத்தும் விதத்தில்



அபிப்பிராயங்களை தெரிவித்து வருகிறது. ஆனால், பாதைகள் முடிவுகளைக்கூட பல சந்தர்ப்பங்களில் மறக்கடித்து விடுகின்றன. குளிக்கப் போய் சேறு பூசிய கதையை யாரும் மறப்பதற்கில்லை. ஒரு குறிப்பிட்ட கருத்துக்காகத் திரட்டப்பட்ட அணியை வேறொன்றுக்காக மாற்றுவது ஒரு போதும் சாத்தியமில்லை. நோக்கமும் நடைமுறையும் ஒன்றுக்கொன்று இயைபடையாத போது விளைவு ஆபத்தானதாகவே அமையும்.

அரசாங்கம் தானே போட்டுக் கொண்டுள்ள வலைக்குள் தானே விழுந்து எதையுமே செய்ய முடியாத ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுவிடும். அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், ஜனாதிபதி திரும்பத் திரும்ப நான் எந்த நெருக்கடியிலும் ஒப்பந்தத்தை கிழித்தெறிய மாட்டேன் என்று கூறினாலும், அந்த நிலைமை உருவாகவே செய்யும். வேண்டுமாயின், ஜனாதிபதி தனது பதவியை விட்டு விட்டு அவரே ஒரு தடவை சொன்னதுபோல, தனது ''பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு ஓடிப் போய் விடுவதன்' மூலம் இந்த ஆலோசனைகளைக் கிழித்தெறியாமல் தவிர்த்துக் கொள்ளலாம்!

சமாதானத் தீர்வு ஆலோசனைகளை வரவேற்கின்ற அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளும் கருதுவது எல்லாம், இனப்பிரச்சினைக்கான அரசியல் ரீதியிலான ஒரு தீர்வை முன்னெடுப்பது என்ற அடிப்படையில் இதை வரவேற்க வேண்டும் என்பதே. கண் மூடித்தனமான இனவாத எதிர்ப்புகளை முறியடிப்பதில் இந்த முற்போக்கு சக்திகள் ஆர்வமுடன் பங்கேற்றும் வருகிறார்கள். ஆனால், அவர்கள் வரவேற்பதற்கும் அப்பால் போய் ஆதரிக்கும் சக்திகளாகவும் மாற வேண்டும் என்றால், அரசாங்கம் தனது நேர்மையான நடைமுறையின் ஊடாக செயற்பட்டு அவர்களை நம்பவைக்க வேண்டும். புலி எதிர்ப்பும், இனவாதத்துக்கு வளைந்து கொடுப்பதும், இராஜ தந்திரம் அல்லது யோசனைகளை ஏற்றுக் கொள்ள வைக்கும் நடைமுறை தந்திரோபாயம் என்ற பெயரால் செய்யப்படும் ஒவ்வொரு கணமும் நிலைமை மேலும் மேலும் மோசமாகி விடுகிறது.

வடக்கு கிழக்குப் பிரச்சினை வெறும் பிராந்திய அதிகாரத்துக்கும் அப்பாற்பட்டு போய்விட்ட பரஸ்பர சந்தேகத்தினை கொண்டு நாளுக்கு நாள் மோசமாகி வருகின்ற ஒரு இனப்பிரச்சினை என்ற உணர்வு அரசாங்கத்திற்கு இருக்குமானால், அரசாங்கம், இன்றைய ஆலோசனைகள் நிரந்தர சமாதான முயற்சிக்கான ஒரு முதற்படி மட்டுமே என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அப்படிப் புரிந்து கொண்டால் மட்டுமே, புலிகளின் ஆயுதமேந்திய நிலையையும் கூட விளங்கிக் கொள்ள முடியும். மாறாக ஆயுதங்களை அவர்கள் கீழே போட்டுவிட்டு பேச வரட்டும் என்று கூறினால், அது வெறும், யதார்த்தம் பற்றிய அக்கறையற்ற கூற்று மட்டுமே! சந்தேகங்கள் களையப்படாத வரை காகிதங்களில் இருக்கும் எழுத்துக்களுக்கு எந்த அர்த்தமும் கிடையாது; நடைமுறை மூலம் உணர்த்தப்படாதவரை, சந்தேகம் மறையப் போவதில்லை.

தமிழ் முஸ்லிம் மக்களின் நீண்டகால நலன்களில் அக்கறை உள்ள எவரும் இந்த ஆலோசனைகளை நிராகரிக்கப் போவதில்லை; கண்மூடித்தனமாக ஆதரிக்கப் போவதும் இல்லை. இந்த ஆலோசனைகள் செயல் வடிவம் பெறுவதற்காக ஒத்துழைப்பதன் மூலமாக, தமிழ் முஸ்லிம் மக்களின் எதிர்கால நலன்களை பாதுகாக்கும் முயற்சிக்கு தமது பங்களிப்பை வழங்க முடியும்.

ஒருகால் அரசிடம் எந்தவிதமான அர்ப்பணிப்போ, சமாதான அக்கறையோ இல்லை என்றால், விரைவிலேயே அது தனது நடைமுறை மூலமாக அம்பலமாகிவிடும். தமிழ் முஸ்லிம் மக்களின் பக்கத்திலிருந்து எத்தகைய ஆக்கபூர்வமான பங்களிப்பும் வரவில்லை என்ற குற்றச்சாட்டை அரசு சுமத்த முடியாமல் போய்விடும். ஆனால், இந்த ஒத்துழைப்பு என்பது, அரசாங்கத்துக்கு வழங்கும் த.வி.கூ.பாணியிலான ஒத்துழைப்பு அல்ல. மாறாக தமிழ் முஸ்லிம் மக்களின் நீண்டகால நலன்களின் அடிப்படையில் அரசு எடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகட்கான ஒத்துழைப்பும், அதன் தடுமாறும், இனவாத சார்புநிலை எடுக்கும் போக்குகட்கு எதிரான உறுதியான எதிர்ப்பு போராட்டமும் கலந்த ஒத்துழைப்பாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் கூட இதை கவனத்தில் எடுப்பது நல்லது. அரசாங்கத்தின் யோசனைகளை நிராகரிப்பதன் மூலமாக புலிகளை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி விடுவது தான் அரசின் நோக்கமென்றால், அதை முறியடிக்கவும் அரசு சொன்னபடி செய்ய நிர்ப்பந்திப்பதுமே அரசியல் சாணக்கிய மிக்க அணுகுமுறை.

புலிகள் கடந்த காலத்தில் விட்ட பல அரசியல் தவறுகளை இம்முறை விடாமல் இருக்க வேண்டுமானால், அவர்கள் அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளை நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பத்தை கொடுத்துப் பார்க்க வேண்டும்.

அரசாங்கம் நேர்மையாக தான் இந்தப் பணியில் ஈடுபடுவதை மெய்ப்பிக்க வேண்டுமானால், சுது நெலும் ஊடாக இறந்த போர்வீரர்கள் குடும்பங்களுக்கு உதவுவதைவிட, போரை நிறுத்திவிடுவது சிறப்பானது.

இன்னொரு யுத்தத்துக்கு ஒப்பிரேசன் லீப் -2க்கு தயாராகும் முயற்சியை விட்டு விட்டு, அரசாங்கம் வைத்துள்ள யோசனைகளை தெளிவாக்குவதிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் இறங்க வேண்டும். அதுவே அது அக்கறைப்படும் இராணுவ வீரர் குடும்பங்கட்கு செய்யும் பெரும் பணியாக அமையும்.

தமிழ் மக்களை புலிகளிடமிருந்து விடுவிக்கும் பணியை சந்திரிகாவிடம் அவர்கள் யாரும் வழங்கவில்லை. கொழும்பிலுள்ள ஒன்றிரண்டு இயக்கங்கள் வேண்டுமானால் அப்படி கேட்டிருக்கலாம். ஜனாதிபதி அவர்கள் தனது கடமையை செய்வாரென்றால், தமிழ் மக்கள் தமது கடமைகளை தாமே செய்து கொள்வார்கள்!

www.tamilarangam.net



# திட்டமிட்டுப் பறிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்கள்!

தம்பிப்பிள்ளை தேவராஜ் (கிழக்குப் பல்கலைக்கழகம்)

இலங்கையில் காலத்துக்குக் காலம் முனைப்படைந்து வந்த சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் ஒரு வெளிப்பாடாகவே தமிழர் பிரதேசங்களில் இடம் பெற்று வருகின்ற சிங்களக் குடியேற்றங்கள் அமைவு பெறுகின்றன. உலகில் வாழும் எந்தவொரு இனமும் தமது தனித்துவத்தினைப் பேணவும் மற்றும் அரசியல், பொருளாதார பண்பியல்புகளை வெளிக்காட்ட அல்லது நிலை நிறுத்தவும், சுயநிர்ணய உரிமை பற்றிச் சிந்திக்கவும் ஒரு தளமாக அமைவது நிலம் அல்லது பிரதேசமாகும். எனவே தமிழர்களின் மூலவளமான நிலத்தினை படிப்படியாக அபகரிப்பதன் மூலம் அவர்களின் தனித்துவமான பண்பியல்புகளைச் சிதைத்து அவர்களின் தாயக மண்ணிலேயே அவர்களை நிலமற்றவர்களாக்கி அரசியல் ரீதியாக புறம் தள்ளும் நடவடிக்கைகளில் சுதந்திரத்திற்கு முன்னரான காலப் பகுதியில் இருந்தே சிங்கள அரசாங்கங்கள் நன்கு திட்டமிடப்பட்ட அரசியல், பொருளாதார வழிமுறைகளினூடாகச் செயற்பட்டு வருகின்றன.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பே அதாவது 1941ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 'பட்டிப் பளை' ஆற்றினை மையமாகக் கொண்டு பெரும் குடியேற்றத் திட்டம் ஒன்றினை அப்போதைய காணி, விவசாய அமைச்சராக இருந்த ''சேனநாயக்கா'' ஆரம்பித்து வைத்தார். இதுவே ''கல்லோயாப் பள்ளத்தாக்குத் திட்டம்'' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இதன் அபிவிருத்தி நிர்மாணப் பணிகளைக் கவனிக்கவென கல்லோயா அபிவிருத்தி அதிகாரசபை என்ற ஒரு தனியான சபையும் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 44 குடியேற்றக் கிராமங்களை உருவாக்கி இக்குடியேற்றக் கிராம விவசாயிகளுக்கு வழங்கவென சுமார் 50,000 ஏக்கர் நிலத்துக்கான நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அபிவிருத்தி வேலைகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இக்குடியேற்றக் கிராமங்களில் சுமார் 35க்கு மேற்பட்டவை தென் இலங்கைச் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டன.

1955ம் ஆண்டுக்கு முன்னர் அம்பாறை என்ற ஒரு மாவட்டம் உருவாக்கப்படவில்லை. அதுவரை மட்டக்களப்பு மாவட்டமானது வடக்கே வெருகல் ஆற்றினையும் தெற்கே குமணை ஆற்றினையும் (கும்புக்கன் ஓயா) எல்லையாகக் கொண்டு காணப்பட்டதுடன் பட்டிப்பளை ஆறானது மாவட்டத்தின் மேற்குப் பகுதியை எல்லையாகவும் கொண்டிருந்தது. கல்லோயாக் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் மேற்குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட பிரதேசம் (தற்போதைய அம்பாறை) உட்பட முழுவதிலும் தமிழர்களதும் தமிழ் பேசும் முஸ்லீம்களதும் ஆதிக்கமே காணப்பட்டது. இதிலும் மாவட்டத்தின் தென்மேற்குப் பிரதேசத்தில் காணப்பட்ட வனவளப் பிரதேசம் தமிழர்களது முழுமையான ஆதிக்கத்துக்கு உட்பட்ட பிரதேசமாகவே இருந்து வந்தது. இப்பிரதேசங்களில் தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக மானாவரி முறையிலான நெற்பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு போன்ற பிறதொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

இந்த ஒரு நிலையிலேயே 1941ம் ஆண்டு கல்லோயாக் குடியேற்றத்திட்டம் ஆரம்பமானது. இவ்வேளையில் குடியேற்றுக் கிராமங்களை உருவாக்கவென தமிழர்களது ஆதிக்கத்துக்கு



உட்பட்டிருந்த வனவளப் பிரதேசம் முழுமையாக அழிக்கப்பட்டு குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு உருவாக்கப்பட்ட குடியேற்றக் கிராமங்களில் 6ம், 7ம், 11ம், 14ம், 15ம், 16ம், 17ம் 25ம் கிராமங்கள் தமிழ் குடியேற்ற வாசிகளுக்கு எனவும் 12ம் 13ம் கிராமங்கள் முஸ்லீம் குடியேற்ற வாசிகளுக்கெனவும் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டன. ஏனைய அனைத்துக் கிராமங்களும் சிங்களவர்களின் குடியேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டன. இவ்வேளையில் தமிழ்த் தலைவர்கள் தமது வன்மையான எதிர்ப்பினை வெளிக்காட்டியபோதும் அப்போது பட்டிருப்புத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ''எதிர்மனசிங்கம்'' இவர் (ஐ.தே.கட்சியைச் சார்ந்தவர்) அவர்கள் தீர்க்கதரிசனம் அற்ற முறையில் சிங்களக் குடியேற்றங்களுக்கு ஆதரவு வழங்கினார்.

இதனைச் சேனநாயக்காவின் அரசாங்கம் தனக்குச் சார்பாக நன்கு கையாண்டு கொண்டது. இவ்வேளையில் 1952ம் ஆண்டு பொதுத்தேர்தலில் பட்டிருப்புத் தொகுதியில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்ட ராசமாணிக்கம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிரான வன்மையான கண்டனங்களைத் தெரிவித்து வந்த அதேவேளை அரசாங்கத்தின் அங்கீகாரம் இன்றியே 35ம், 37ம், 38ம், 39ம், 40ம் கிராமங்களில் தமிழர்களைக் குடியேற்றினார். இக்குடியேற்றவாசிகளை வெளியேற்ற அரசு பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் பாராளுமன்ற உறுப்பினரதும், இப்பிரதேசம் மக்களதும் தீவிர எதிர்ப்பு காரணமாக அதனை அரசாங்கம் கைவிட்டது.

குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப்பட்ட வேளையில் பயிர்ச்செய்கை நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக சேனநாயக்கா சமுத்திரம் அதனோடு இணைந்தவகையில் ''நவகிரி'' குளக் கட்டுத் திட்டமும் உருவாக்கப்பட்டன. நவகிரிக் களத்தினை அமைப்பதற்கான பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்ட வேளையில் தமிழர்களுக்குச் சொந்தமான கோடாரி போட்ட மடு, நல்லம்பை, நெல்லுக்குத்தின காலை போன்ற மானாவாரிப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த சுமார் 600 ஏக்கர் நிலம் அரசினால் சவீகரிக்கப்பட்டது. எனினும் எந்தவிதமான நட்ட ஈடுகளும் நில உடமையாளர்களான தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை.

குடியேற்றக் கிராமங்களை அரசு தமிழர்களுக்கு ஒதுக்கீடு செய்த போது மிகவும் நயவஞ்சகமான முறையில் நடந்து கொண்டது. அதாவது தமிழர்களுக்கென ஒதுக்கப்பட்ட கிராமங்களும் வயல் நிலங்களும் பெரும்பாலும் மணற்பாங்கானதும், கற்றொடர்களைக் கொண்டது மானவைகளாகவே காணப்பட்டன. இதனால் பயிர்ச் செய்கைக்காக இந்நிலங்களைப் பயன்படுத்துவது என்பது மிகவும் குறைவானதாகவே காணப்பட்டது. மேலும் இக் கிராமங்களுக்கான நீர்ப்பாசன வசதிகளும் போதுமானளவு செய்து கொடுக்கப்படவில்லை என்பதுடன் நீர்ப்பாசனக் குளங்கள் சிங்களவர்களின் முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வருகின்றன. மேலும் குடியேற்றக் கிராமங்களை உருவாக்கியபோது சிங்களவர்களுக்கென ஒதுக்கப்பட்ட கிராமங்களுக்கு மின்சார வசதி, பாடசாலை, மருத்துவமனை நூலக வசதி, போக்குவரத்து வசதிகள் என்பன செய்து கொடுக்கப்பட்டன. ஆனால் தமிழ்க் குடியேற்றக் கிராமங்களுக்கு எந்த விதமான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. இந்தப் பாரபட்சமான நடவடிக்கை இன ஒதுக்கல் கொள்கையின் ஒரு வெளிப்பாடு எனத் தமிழ் தலைவர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

இவ்வாறானதோர் சூழ்நிலையில்தான் 1958ம் ஆண்டுக் காலப்பகுதிகளில் தமிழர்களுக்கு எதிரான இனவன்முறைகள் சிங்கள இனவாதிகளால் நன்கு திட்டமிடப்பட்ட வகையில் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்த இனக்கலவரங்களின் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கு, மேற்கு, தென்மேற்குப் பிரதேசங்களில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழர்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேற்றப்பட்டனர். இதன்போது தமிழர்களுக்குச் சொந்தமான வளம்மிக்க வயல் நிலங்களும், ஏனைய பொருளாதார வளங்களும் சிங்களக் காடையர்களால் சூறையாடிக் கொள்ளப்பட்டன. இக்கலவரங்களின் போது பொலிஸ், இராணுவம் என்பன சிங்களக் காடையர்களுக்கு பக்கபலமாகச் செயற்பட்டன. இந்தவகையில் தமிழர்களுக்குச் சொந்தமான ஆத்துவாவட்டை, கரடித்தளவாய், தெற்குவடக்கு வட்டை, பித்தாளவட்டை, பள்ளத்தளவாய், கட்டுமுப்பட்டை, கோணாகொல்லை, கிழக்கத்து வட்டை, இராண மடு, அச்சிராவெளி, பூச்சிக்கூடு, தெண்டம் கொடுத்த வட்டை, மணல்வாத்த வட்டை, குழந்தையன் வட்டை, புளியடிவாவி, சின்னவத்தை, முத்தெட்டுக் கிணறு, கிணற்றடி வட்டை, கட்டரவட்டை, பவுறுவட்டை போன்ற சுமார் 15,000 ஏக்கர்களுக்கும் அதிகமான வயல் நிலங்கள் பறிக்கப்பட்டன.

மேலும் மருதமுனை முஸ்லீம்களுக்குச் சொந்தமான ''ஆலாட வட்டை, ஈசாடவட்டை, விற்பனைக்காடு போன்ற வயற் பிரதேசங்கள் கலகக்காரர்களால் சூறையாடிக் கொள்ளப்பட்டன. மேற்கூறிய 15,000 ஏக்கர்களுக்கும் அதிகமான வயல் நிலங்கள் பெரும்பாலும் மகியூர், எருவில்,, குறுமண்வெளி, மண்டூர், தம்பலவத்தை நாவிதன்வெளி, வெல்லாவெளி, பளுகாமம், கோட்டைக் கல்லாறு, ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிக்குடி, களுதாவளை, போரதீவு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த தமிழர்களுக்குச் சொந்தமானவையாகும். இந்த சட்டரீதியற்ற நடவடிக்கைக்கு எதிராக நிலவுடமையாளர்களான தமிழர்கள் வழக்குத் தொடர்ந்தபோதும் எந்தவித நியாயமான தீர்வினையும் இவர்களால் பெறமுடியவில்லை. இன்று இந்நிலங்கள் அம்பாறை கச்சேரி நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டு சிங்களவர்கள் இந்நிலங்களின் சட்டரீதியான உடமையாளர்களாக மாற்றப்பட்டுள்ளனர். மேலும் கலவரங்களை அடுத்து ஏற்கனவே கல்லோயாக் குடியேற்றத்தின் கீழ் தமிழர்களுக்கென ஒதுக்கப்பட்ட 16ம், 17ம், 25ம் கிராமங்களும் சிங்களக் காடையர்களால் சூறையாடப்பட்டு இன்று இவை முழுமையாகவே சிங்களவர்களுக்கு உடமையாக்கப்பட்டுள்ளதுடன் இதுபோலவே முஸ்லீம்களுக்கென ஒதுக்கப்பட்ட கிராமங்களில் ஒன்றான 13ம் குடியேற்றக் கிராமம் முஸ்லீம்கள் கொண்ட அச்ச உணர்வால் படிப்படியாக விற்றுக் கொண்டதன் மூலம் இன்று சிங்களவர்களின் வசமாகவுள்ளது.

தமிழர்களின் தாயகப் பிரதேசம் இவ்வாறு படிப்படியாக சூறையாடப்பட்டுக் கொண்டிருந்த அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கு, தென் மேற்கு பகுதிகளை உள்ளடக்கியதாக 1955ம் ஆண்டு அம்பாறை என்ற ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று அம்பாறை மாவட்டத்தினை ''திகாமடுல்ல'' என்ற சிங்கள நாமத்துடன் தேர்தல் மாவட்டமாக மாற்றியமைத்துள்ளனர். திகாமடுல்ல பிரதேசத்திலுள்ள ''தீகவாவி'' என்ற புத்த கோயிலை பழைய சமயக் கதை ஒன்றோடு தொடர்புபடுத்தி அதனைப் புனித நகராக்கியதுடன் 1968ம் ஆண்டிற்குப் பின்னர் தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் சொந்தமான பெருமளவு நிலம் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது.

கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் ஒரு நேரடி விளைவாக அம்பாறை மாவட்டத்தில் சிங்களவரின் தொகை திடீரென அதிகரித்திருக்கும் ஒரு நிலைமையினை அவதானிக்கலாம். இத்திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் அம்பாறையிலுள்ள மொத்த சிங்களவர்களின் தொகை 3,000 ஆகும் -ஆனால் குடியேற்றங்களின் விளைவாகப் பெருமளவு சிங்களவர்கள் தென் இலங்கையிலிருந்தும், ஏனைய சிங்களப் பிரதேசங்களில் இருந்தும் கொண்டுவந்து குடியேற்றப்பட்டமையால் இன்று சிங்களவரின் தொகை 1, 46,371 என்ற நிலையை எட்டியுள்ளது. 1981ம் ஆண்டின் சனத்தொகைக் கணிப்பீடுகளின் படி அவதானிக்கும்போது மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் முஸ்லீம்கள் 41,5 வீதமாகவும் சிங்களவர் 37.6 வீதமாகவும் தமிழர்கள் 19.9 வீதமாகவும் காணப்படுகின்றனர். குடியேற்றத்திற்கு முன்னரான காலப்பகுதிகளில் 2ம் நிலையில் காணப்பட்ட தமிழர்கள் இன்று 3ம் நிலைக்குப் பின்தள்ளப்பட்டுள்ளனர். கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் இன்னோர் விளைவாக அவதானிக்கப்படத்தக்கது அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் அரசியல் பிரதிநிதித்துவம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்து 1994ம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலுடன் ஒரு அரசியல் பிரதிநிதித்துவத்தையாவது பெற்றுக் கொள்ள முடியால் போனமையாகும். இந்த நிலையானது அம்பாறை மாவட்டத்தில் வாழும் அனைத்து தமிழர்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வடமாகாண முஸ்லீம்கள் பற்றிய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு கலாநிதி. எஸ்.எச் ஹஸ் புல்லாஹ் அவர்கள் எழுதியிருக்கும் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் வடமாகாண முஸ்லீம் சிறுபான்மையினரும் எனும் கட்டுரையின் முதல் பகுதியை இவ்வாரம் வெளியிடுகிறோம். இந்த ஆய்வுக் கட்டுரையை வடக்கு முஸ்லீம்களின் உரிமைக்கான அமைப்பு (15A, ரோஹினிவீதி, கொழும்பு -6 தொலைபேசி: 586660) நூலாக வெளியிட்டுள்ளது. அவர்களுக்கு நன்றி.


கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

ஆ-ர்

# எம்முடைய தாயகமும் வடக்கே!

எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்





''எம்முடைய தாயகமும் வடக்கே''

இலங்கையில் இன்று இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெறுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இம் முயற்சிகள் வெற்றியடைய வேண்டுமானால் இனப் பிரச்சினையின் உள்ளார்ந்த விடயங்கள் நன்கு அறியப் பட்டதான அணுகுமுறை அவசியம். இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட வடமாகாண முஸ்லீம் சிறுபான்மையினரின் அபிலாசைகள் இக்கட்டுரையில் முன்வைக்கப் படுகின்றன. இக்கட்டுரை, கட்டுரை ஆசிரியரால் வட மாகாண முஸ்லிம் அகதிகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை பல கட்டங்களாக உக்கிரம் பெற்று வந்துள்ளது. இனப் பிரச்சினை 70ம், 80ம் தாசப்தங்களில் சிங்கள தமிழ் பிரச்சினையாக இருந்து, 80ம், தசாப்தத்தின் கடைசிப் பகுதிகளில் இருந்து சிங்கள - தமிழ், தமிழ் - முஸ்லீம் பிரச்சினைகளாக விரிவடைந்து காணப்படுகின்றது. இவ்வினப பிரச்சினை மூவின மக்களுக்கும் உயிர், பொருள் இழப்புகளையும் சமூக, கலாசார, உளவியல் பாதிப்புக்களையும் ஏற்படுத்தி இருக்கின்றது. இன்று இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதில் சம்பந்தப்பட்ட எல்லாப் பகுதியினரும் முயன்று வருகின்றனர். 1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தின் இறுதி வாரத்தில் முஸ்லீம் சிறுபான்மையினர் வடமாகாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப் பட்டபோது இனப்பிரச்சினையின் புதியதொரு அத்தியாயம் ஆரம்பமாகிறது. இனப் பிரச்சினையில் வட மாகாண முஸ்லீம் சிறுபான்மையினரும், இழுக்கப்பட்டதானது இந் நாட்டின் இன நல்லுறவுப் பாரம்பரியத்தில் மிகவும் துரதிதுர்ஷ்டவசமான நிகழ்ச்சியாகும்.

1990ஆம் ஆண்டு வரை வட மாகாணம் முழுவதும் பரவலாக எழுபத்தையாயிரம் முஸ்லீம்கள் வாழ்ந்து வந்தார்கள். இம் மாகாணத்தில் வாழ்ந்த இச்சிறுபான்மை முஸ்லீம் மக்களுக்கும், பெரும்பான்மைத் தமிழ் மக்களுக்குமிடையில் அந்நியோன்யமான உறவும், பரஸ்பர ஒத்துழைப்பும், மரியாதையும் வரலாற்றுக் காலத்திலிருந்து வெளியேற்றப்படும் காலம் வரை காணப்பட்டதெனலாம்.

இக்கால கட்டத்தில் வட மாகாணத்தில் ஆயுதக் கலாசாரம் வேரூன்றிக் காணப்பட்டது. ஆயுத ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகள் (L.T.T.E) என்று அழைக்கப்படுகின்ற தமிழ்த் தீவிரவாதிகள் வடமாகாணத்தை தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். இவ்வாயுதக் குழுவினர் வட மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லீம் சிறுபான்மையினரை முற்று முழுதாக இம் மாகாணத்தை விட்டு வெளியேற்றுவதற்காகத் திட்டமிட்டு அதில் முழுமையான வெற்றியும் கண்டார்கள். 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதி வாரத்தில் வட மாகாணம் முழுவதும் காணப்பட்ட நூற்றுக் கணக்கான கிராமங்களில் வாழ்ந்த முஸ்லீம்கள் ஆயுத முனையில் புலிகளால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர். முஸ்லீம்கள் வெளியேறுவதற்கு முன்னர் அவர்களின் உடைமைகளும், சொத்துக்களும் இத்தீவிரவாதக் குழுவால் பறிக்கப்பட்டன. உயிரைப் பாதுகாப்பதற்காக முஸ்லீம் சிறுபான்மையினர் வட மாகாணத்திற்கு அப்பாலுள்ள எல்லை மாவட்டங்களில் தஞ்சம் அடைந்தனர்.

வட மாகாணத்தில் முஸ்லீம் சிறுபான்மையினர் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தார்கள். தமிழ்ப் பெரும்பான்மையினருடன் சிறந்த முறையில் இன உறவை வளர்த்திருந்தார்கள். தமிழ் ஆயுத குழுக்களின் நடவடிக்கைகளுக்கு இவர்கள் எதிராகவும் இருக்கவில்லை. இனப்பிரச்சினையில் தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை அடைவதற்குத் தடைக் கல்லாகவும் இருக்கவில்லை. ஆயினும் மேலே குறிப்பிட்ட காரணங்களுக்குப் புறம்பான ஒரு காரணத்திற்காக ஆயுதக் குழுக்களால் இவர்கள் வெளியேற்றப் பட்டிருக்கின்றார்கள்.

இம்மக்கள் வெளியேற்றப் பட்டமைக்குக் காரணம் இம்மக்கள் இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றும் 'முஸ்லீம்கள்' என்பதற்காகவேயாகும். எனவே முஸ்லீம்கள் என அடையாளப்படுத்தப்பட்ட அனைவரும் பலவந்தமான வெளியேற்றத்திற்கு உட்பட்டார்கள். ஆகவே இவ்வெளியேற்றம் வடமாகாணத்தில் முஸ்லீம் சிறுப்பான்மையினரின் வாழ்விட உரிமையை மறுப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.

வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லீம். சிறுபான்மையினர் இன்றுவரை அகதிகளாக, அரசாங்கத்தால் பரிபாலிக்கப்படும் சமூகநல நிலையங்களில் (அகதிமுகாம்களில்) வாழ்கின்றனர். இவ்வகதிகள் தமது அடிப்படைத் தேவைகளைக் கூட நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றனர். திரும்பவும் தமது பூர்வீக குடியிருப்புகளுக்கு உயிர்ப் பயத்தின் காரணமாகச் செல்ல முடியாதவர்களாகவும் இருக் கின்றார்கள்.

வடமாகாண முஸ்லீம் சிறுபான்மையினரின் வாழ்வுரிமை மறுக்கப்பட்டதால் ஏற்பட்ட பிரச்சினைகள் இனப் பிரச்சினைக் கலந்துரையாடல்களில் இன்றுவரை கருத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இம்மக்களின் பிரச்சினை மெல்ல மெல்ல தேசிய மட்டத்திலிருந்து மறக்கப்பட்ட நிலையில் சென்று கொண்டிருக்கின்றது.

இந்த ஆய்வுக் கட்டுரை வடமாகாண முஸ்லீம் சிறுபான்மையினரின் இனப் பிரச்சினையின் தனித்துவம் பற்றியும், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இம் மக்களின் நியாயமான கோரிக்கைகள் கருத்துக்கு எடுக்கப்பட வேண்டும் என்பதையும், அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படும் போது இச்சிறுப்பான்மையினரின் அபிலாசைகள் எவ்வாறு நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது பற்றியும் விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வடமாகாண முஸ்லீம் சிறுபான்மையினரின் தனித்துவமான பண்புகள்:

'பெரும்பான்மை', 'சிறுபான்மை' என்ற பதங்கள் எண்ணிக்கைரீதியாகவும், பண்புரீதியாகவும் மக்கள் குழுவினரை வேறுபடுத்துபவையாகும். சிறுபான்மையினர் தமது தனித்துவமான பண்புகளால் பெரும்பான்மையினரிடமிருந்து வேறுபடுகின்றார்கள். இவ் வேறுபாட்டிற்கு மொழி, சமயம், புவியியல், தேசம், கலாசாரத் தனித்துவங்கள் ஆகி யவை தனியாகவோ அல்லது கூட்டாகவோ காரணமாக இருக்கலாம்.

வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மொழி பேசுகின்ற இந்து, கிறிஸ்தவ சமயத்தவர்கள் பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றா ர்கள். இம்மக்கள் இன ரீதியாக 'தமிழர்' என்று அழைக்கப்படுகின்றார்கள். இத்தமிழ் இன மக்கள் தனித்துவமான வரலாற்றையும், கலை, கலாசாரப் பாரம்பரியங்களையும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இலங்கையில் முஸ்லீம்கள் (இலங்கைச் சோனகர்கள்) தனித்துவமான இனமாகக் கருதப்படுகின்றார்கள். இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லீம் களைப் போல வடமாகாணத்தில் வாழும் முஸ்லீம்களும் தம்மைப் பெரும்பான்மைத் தமிழ் இனமக்களில் இருந்து வேறுபட்ட இனமாகக் கருது கின்றார்கள். சமய அடிப்படையில் இஸ்லாம் மார்க்கத்தை பின்பற்றுகின்றார்கள். அதே வேளை மொழி அடிப்படையில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கின்றார்கள். இம்மக்கள் தமக்கென தனியான வரலாற்றுக் கலாசாரப் பாரம்பரியங்களைக் கொண்டிருப்பதோடு தமிழ் இன மக்களில் இருந்து இனக்கலப்பற்ற தூய இனமாக கருதி வருகின்றார்கள்.

வட மாகாணத்தில் முஸ்லீம் சிறுபான்மையினர்களுக்கு பல தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன. அவையாவன:

### தனித்துவமான சிறுபான் பான்மையினர்:

வடமாகாணம் தமிழ் மக்களை பெரும்பான்மையாகக் (92%) கொண்ட பிரதேசமாகும். இம்மாகாணத்தில் முஸ்லீம்களும் (5%), சிங்களவர்களும் (3%) சிறுபான்மையினர்களாகக் காணப்பட்டனர். (அட்டவணை 1) சிங்கள மக்களைப் பொறுத்தவரை வட மாகாணத்தில் பரவலாக வாழ் பவர்களல்லர். சிங்களவர்கள் வடமாகாணத்தின் தென் எல்லையின் ஒரு சிறு பகுதியிலும் (வவுனியா சிங்கள உதவி அரசாங்க பிரிவு) வட மாகாணத்தில் ஏனைய பிரதேசங்களில் அரசாங்க ஊழியர்களாகவும் இராணுவ, பொலிஸ் உத்தியோகஸ்தர்களாகவும் காணப் படுகின்றார்கள்.

மாறாக முஸ்லீம் சிறுபான்மையினர் வட மாகாணம் முழுவதும் பரவலாக தமிழ் மக்களுடன் கலந்து வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். வரலாற்றுரீதியாக தமிழ் மக்க ளுக்கு சமமான வரலாற்றுப் பாரம்பரியத்தினை இவர்கள் கொண்டிருக்கின்றார்கள்.

அட்டவணை 1

வடமாகாணத்தில் இனவிகிதாசாரம்

| இனம் | % |
|---|---|
| இலங்கைத் தமிழர் | 86.4 |
| இந்தியத் தமிழர் | 5.6 |
| சிங்களவர் | 3.0 |
| முஸலிம்கள் | 5.0 |
| மொத்தம் | 100.00 |

மூலம்: 1981 ம் ஆண்டு குடிசனக் கணிப்பீடு

வரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தத்தின் இன்னொரு முகம்-2

**சென்ற இதழ் தொடர்ச்சி**

**வயோதிபர்**

உள மருத்துவ சிகிச்சைக்கு வருபவர்களில் வயோதிப பருவத்தை அடைந்தவர்களின் தொகை அண்மைக்காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது. அறளை பெயர்தல் என்று பொதுவாக அழைக்கப்படும் உளக்கேடு, மன தடுமாற்ற நிலை ஆகியவை கூடுதலாக இக்காலகட்டத்தில் அவதானிக்கப்படுகின்றன. இந்நிலைக்கு இவ்வகையான நோயின் அதிகரிப்பிலும் பார்க்க வயோதிபருக்கு சமூக, குடும்ப மட்டத்தில் முன்னிருந்த ஆதரவும் கவனிப்பும் அற்றுப்போயிருப்பது முக்கிய காரணமாகிறது. முன் குறிப்பிட்டது போல் கூட்டு, கருக்குடும்பங்கள் பிரிந்து, சிதைந்து, அல்லது இடம்பெயர்ந்து வசதியற்ற அகதி முகாம்களில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியுள்ளது. சிலவேளைகளில், பிள்ளைகள் கொழும்பு அல்லது வெளிநாடுகளில் இருக்க அவர்களின் வயோதிபப் பெற்றோர் இங்கே தனிமையாக விடுபட்டிருக்கின்றனர். எனக்குத் தெரிந்த பல குடும்பங்களில் பிள்ளைகள் மருத்துவராகவும், வைத்திய நிபுணர்களாகவும், வயோதிபத் துறையில் விசேட பயிற்சி பெற்று அங்குள்ள வயோதிபருக்கு சிகிச்சை அளிக்கும் அதே வேளை அவர்களின் பெற்றோர் கவனிப்பாரின்றி இங்கே கஷ்டப்படுகின்றனர், குழந்தை சண்முகலிங்கத்தின் ''எந்தையும் தாயும்'' என்ற நாடகம் எமது இந்த சமூகப் பிரச்சினையை நன்கு சித்திரிக்கின்றது.

மேலும், இதைவிட, குடும்பங்கள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அவசர அவசரமாக இடம்பெயரும் பொழுது, பல வயோதிபர் அங்கேயே விடுபட்டனர். இன்னும், வயோதிபர் தாம் பழகிய சூழலில் இருந்து இடம் பெயர்ந்து, புதிய இடத்தில் வாழ நிர்ப்பந்திக்கப்படும் பொழுது, தமது முதிர்வு நிலையில் இயைந்து மாறி நடக்கமுடியாமல் மனத் தடுமாற்றம், அறளை பெயர்தல், அறிமுகமற்ற நிலை போன்றவற்றுக்கு ஆளாகின்றனர்.

ஆகவே வயோதிபரை பராமரிப்பதற்கு ஒழுங்குகளை செய்ய வேண்டிய கட்டத்துக்கு எங்களது சமூகம் வந்துவிட்டது. உலகப்போக்கை பார்த்தால் எதிர்காலத்தில் இவ்வயோதிபப் பிரச்சினை அதிகரிக்கும் என்றே சொல்லாம்.. இதற்கு மருந்து முறைகளின் முன்னேற்றத்தால் இறப்பு வயது கூடிக் கொண்டு போவது காரணமாகும். அதாவது மனிதனின் ஆயுள் நீடிக்கப்படுகின்றது. கைதடி, புத்தூர், இணுவில் உட்பட சில வயோதிப் இல்லங்கள் இங்கே இயங்கத் தொடங்கிவிட்டன. மேலும் சில திட்டங்களும் உள்ளன என்று அறிகின்றோம். ஆயினும் பூரண நோக்கில் வயோதிபர்களின் எல்லாத் தேவைகளை அதாவது அவர்களின் கௌரவம், தற்குறி, சுய அடையாளம் ஊக்கம் முதலியவை பேணப்பட்டு; உடலின் வெவ்வேறு அங்கங்களை உபயோகித்தல், ஒய்வு, செயற்பாடுகள், தேவைப்படின் சிகிச்சை வசதிகள்; மற்றும் அவர்களின் வீடுகளிலே ஆதரவு, பராமரிப்பு போன்றவற்றை பூர்த்தி செய்யக்கூடிய திட்டங்களை அமுல்படுத்தவேண்டும்.

**பிள்ளைகள் (சிறுவர், கட்டிளமைப் பருவத்தினர்)**

உள மருத்துவ பிரச்சினைகள் உள்ள சிறார்கள் அண்மைக்காலம் வரை மிக குறைவாகவே எங்களிடம் கொண்டுவரப்பட்டனர். இதற்கு இங்கே பிள்ளைகளுக்கான உளமருத்துவ சிகிச்சை வசதிகள் இன்மையும், மனநோய் பற்றி சமூகத்தில் நிலவும் களங்க மனப்பான்மையும் சிறார்களில் ஏற்படும் நடத்தை மாற்றங்கள் சம்பந்தமான அறியாமையும் அதைப் பொருட்படுத்தாமையும் மூல காரணமாகின்றன. இதைவிட விவேகக் குறைபாடு (Mental Handicap)உள்ள 3.5வீதமான பிள்ளைகளுக்கு வடக்கில் விஷேச கல்வி மற்றும் நடத்தை மாற்றத்துக்கான வசதிகளோ இல்லை. உடுவிலில் இயங்கும் (ARK)என்று அழைக்கப்படும் விவேகக் குறைபாடுள்ள சிறார்களுக்கான இல்லம் மட்டுமே வடக்கில் உள்ளது. இவ்வில்லம் கிட்டத்தட்ட ஐம்பது (வதிவிட, வெளி மாணவர் உட்பட) நடுத்தர விவேகக் குறைபாடுகள் உள்ளவர்களை பராமரித்து பயிற்றுவிக்கின்றது. பெரும்பாலான, அதாவது 85% சதவீமான விவேகக் குறைபாடு உடையவர்களில், மிதமான பாதிப்புத்தான் காணப்படும். இவ்வாறான பிள்ளைகள் எங்கள் பாடசாலைகளில் பின்வாங்குகளுக்கு தள்ளப்பட்டு ஒரு பயனும் பெறாமல் ஆண்டு முடியும் பொழுது அடுத்த வகுப்புக்கு உயர்த்தப்படுகின்றனர். இவர்களுக்கான விஷேசமான கல்வி வசதிகள் உருவாக்கப்பட்டால், இவர்கள் பயனுள்ள முறையில் சமூகத்துக்கு உழைத்து, வேலை செய்து, குடும்பத்துக்கும் தங்களுக்கும் பெறுமதி மிக்க நிறைவான வாழ்க்கையை நடத்த வழி சமைக்கப்படலாம். மற்றைய தீவிர நடுத்தர விவேகக் குறைபாடு உடையவர்கள் தற்பொழுது வீடுகளில் அவர்களின் குடும்பங்களுக்கு வர்ணிக்க முடியா சுமையாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கும் தகுந்த பராமரிப்பு வசதிகள் உருவாக்கப்படல் வேண்டும்.

அண்மைக்காலத்தில் வெளி, உள மனநோயாளர் பிரிவிற்கு சிகிச்சைக்காக கொண்டு வரப்படும் பிள்ளைகளின் தொகையும் விகிதாசாரமும் அதிகரித்து இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. போரால் சிறார்களில் ஏற்படும் உளத்தாக்கங்களே இதற்கு முக்கிய காரணமென்று சொல்லலாம். பாடசாலைகளில் நாம் நடத்திய ஆய்வுகள் மூலம் இப்பிரச்சினை மாணவர்களில் பரவலாக வெவ்வேறு கோலங்களில் பிரதிபலித்து இருப்பதை கண்டறியக் கூடியதாக இருந்தது. போர் சூழல் சிறார்களின் உள சமூக விருத்தியில் பின்னடைவுகளை ஏற்படுத்தி, பாரதூர விளைவுகளை தோற்றுவிக்கின்றது என்ற விழிப்புணர்வின் காரணமாக யூனிசெவ் (UNICEF)அனுசரணையுடன் சிறுவர்களுக்கான உளநல திட்டத்தை ஆராய கொழும்பில் ஒரு மேல்மட்ட கூட்டம் நடத்தப்பட இருந்தது. கனடாவில் இயங்கும் மக்மாஸ்ரர் (MacMaster) பல்கலைக்கழகம் ஈராக் யூகோசிலேவியா, பலஸ்தீன் (Yugoslavia, Palestine) போன்று போரால் கிழக்கிலங்கையிலும் சிறார்களில் ஏற்பட்ட உளத் தாக்கங்களை கண்டறிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய தேவையை கருத்தில் எடுத்து பிள்ளைகளுக்கான விசேட சிகிச்சை நிலையம் ஒவ்வொரு செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் 2 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடந்து வருகின்றது. பிள்ளைகளுக்கு உளச்சிகிச்சை அளிப்பதற்கான உபகரணங்கள், வசதிகள் போன்றவற்றை சிறிது சிறிதாக திரட்டி வருகின்றோம். குடும்ப சமூக அலகுகளை பேணி மீள்கட்டமைப்பதால் பிள்ளைகளின் முக்கிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது என்ற தத்துவ அடிப்படையில் குடும்ப சமூக சிகிச்சை முறைகளும் கையாளப்படுகின்றன. குழந்தைப்பருவம் தொடங்கி பாலர், மாணவர், கட்டிளம் பருவம் ஊடாக உளநடத்தைக் கோளாறுகள் அவர்களின் வயது, உள சமூக விருத்தி, சுபாவம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு விதமாகப் பிரதிபலிக்கின்றன. குறிப்பாக போரால் ஏற்படும் உள தாக்கங்கள் இவ்வாறு பிள்ளைகளின்



வளர்ச்சி பருவத்திற்கு ஏற்றவாறு வெளிப்படுவதை எமது ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக பாலர் பருவத்தினரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் காணப்பட்ட குணங்குறிகள் அட்டவணை 3ல் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மாணவர்கள் மத்தியிலும் கட்டிளம் பருவத்தினரிலும் கண்டறியப்பட்ட போர் சம்பந்தமான நெருக்கீடுகளும் அவற்றின் விளைவுகளும் பரவலாக, கணிசமான தொகையினால் காணப்படுகின்றன. நித்திரைக் குழப்பம், பயங்கரக்கனாக்கள், உறவுகளில் சிக்கல்கள், பதற்றம், பயம், கவலை, சோர்வு, ஆர்வக்குறைவு, ஒதுங்குதல், சிடுசிடுப்பு, பெரியோர்களை எதிர்த்தல் பலாத்காரம், செயலாற்றத்திறன் குன்றல் போன்ற பல குணங்குறிகளை வெளிப்படுத்துகின்றனர். எங்கள் பண்பாட்டைப் பொறுத்தளவில், மற்றும் நீண்ட கால நோக்கில் சிறார்களில் காணப்படும் வன்மைத்தன்மை, கவலை தரும் விஷயமாககின்றது. அவர்கள் இந்த போர்ச்சூழலில் பிறந்து வளர்ந்து வன்செயல்களைக் கண்டும் அனுபவித்தும் இருப்பதால், உதாரணமாக உறவினர் நண்பர்களின் மரணங்கள், சமூகக் கட்டமைப்புக்களின் பேரழிவுக் காட்சிகள், வலோற்காரமான இடம்பெயர்வு, அமைதியான முறையில் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதை காணாமை போன்றவை ஆழமாக மனத்தில் பதிந்து, நெகிழ்வான வளர்ச்சிப் பருவத்தில் அவர்களின் ஆளுமையை வன்மைப்படுத்தப்படுகின்றது. இதன் விளைவுகளை அவர்களின் அன்றாட சொற்பா அவர்களைத் திரும்பவும் அமைதியான குடும்ப, சமூக வாழ்க்கையில் இணைந்து ஈடுபடச் செய்வதும் பெரிய சவால்களாக அமையும்.

எங்கள் கலாசாரத்தில் முதன்மை பெறும் கல்வித்துறை சம்பந்தமான பிரச்சினைகள் (பல்கலைக் கழக அனுமதியில் தரப்படுத்தல் மற்றும் பாரபட்சங்கள் இவ்வினப்போரின் ஆரம்பத்திற்கு மூல காரணம் என்று சொல்லப்படுகின்றது) பாரிய சமூக விளைவுகளை ஏற்படுத்த வல்லன. உதாரணமாக இடம் பெயர்வதால் பாடசாலைகளில் மாற்றம், வசதியின்மை; பாடசாலைகளின் அழிப்பு, முகாம்களாக உபயோகிக்கப்படுவதால் வகுப்பறை கிடையாமை; தேசிய பரீட்சை நடைபெறுவது பற்றிய நிச்சயமற்ற நிலை; பாதுகாப்பு, அமைதி, வெளிச்சம் போன்றவை உள்ள படிப்பதற்கான தகுந்த சூழல் இன்மை, நாட்டுநிலைமை, போக்குவரத்துப் பிரச்சினைகளால் பாடசாலைக்கு வருகையில் ஒழுங்கீனம்; மாணவர் தடுத்து வைக்கப்படுதல், சுடுபடல், சேர்க்கப்படுதல், கருத்தூட்டப்படல்; அல்லது அரசியல் நடவடிக்கைகளில் பங்குபற்ற கட்டாயப்படுத்தப்படல்; சகமாணவர்கள் வெளியிடங்களுக்கு இடம்பெயர்வதைக் காணல், சுதந்திரப்போக்குவரத்து தடைகள்; கல்வியைத் தொடர்வதற்கா வாய்ப்பில்லாமை (உதாரணமாக உயர்படிப்பு, பயிற்சி; அப்பியாசப் புத்தகங்கள், சீருடைகள் இல்லாத அகதி மாணவர்கள்) போன்றவனை விளையாட்டுக்கள், உறவுகள், செயற்பாடுகள் முதலியவற்றில் அவதானிக்கலாம். இவ்வாறாக சமூகமட்டத்தில் பரவலான வன்மைப்படுத்தலை விட, தனிப்பட்ட முறையில் கட்டிளம் பருவத்தினர் இளம் வயதிலிருந்தே வன்செயல்களில் ஈடுபட்டிருப்பின், இவர்கள் பார்தூரமான உளப்பாதிப்புகளுடன் சிகிச்சைக்கு கொண்டுவரப்படுகின்றனர். கடுமையான நெருக்கீடு அனுபவங்களால், உதாரணமாக தம் தோழரின் கொடூரமான மரணங்கள், காயப்படுதலை காணுதல் தாம் காயப்பட்டு எடுக்கமுடியாத வெடிகுண்டுப்பகுதி (Piece) மூலையில் தொடர்ந்து இருப்பதுடன்; மற்றும் கொலை, சித்திரவதை போன்றவற்றிற்கு காரணமாகுதல் முதலியவற்றால் மனதில் மாறாத வடுக்கள் உள்ளவர்களாகக் காணப்பட்டனர். ஆங்கிலத்தில் இந்நிலையை Malignant PTSD என்று அழைத்துள்ளோம். இவ்வகையான உள நோய் காரணமாக முந்திய கொடிய நிகழ்ச்சிகளை திரும்பத் திரும்ப மனதால் அனுபவித்தல், அந் நிகழ்ச்சி திரும்பவும் கண் முன் நடப்பது போன்ற அனுபவமும் நடைமுறையும்; சிடுசிடுப்பு, கோபம், திடீரென வன்செயல்களில் ஈடுபடுதல், பயங்கர கனாக்கள், நித்திரையின்மை, மெய்ப்பாடு முறையீடுகள் முதலியவற்றை பிரதிபலித்தனர். இவர்களுக்கான சிகிச்சை மிகக் கடினமாக இருந்தது. போர் முடிந்து சமாதானம் வரும்பொழுது இவ்வாறு யுத்தம் புரிந்து திரும்புவரின் புனர்வாழ்வும், பலவிதமான பிரச்சினைகளை மாணவ சமூகம் தற்பொழுது எதிர்கொள்ள வேண்டிய நிலை தோன்றியுள்ளது. எதிர்காலம் நம்பிக்கையற்ற இருள்மயமாகக் காட்சியளிக்கின்றது. படித்து முன்னேறி மதிப்புள்ள உத்தியோகத்தை தேடிக்கொள்ள வேண்டும் என்ற முந்திய ஆர்வமும் உற்சாகமும் அற்றுப்போகின்றது. தப்பி வெளியேறல் அல்லது போராட்டத்தில் சேரல் கவர்ச்சியான மாற்று வழியாக அமைகின்றன. இவ்வாறான பல தரப்பட்ட பொது மற்றும் கல்வி சார் நெருக்கீடுகள் மாணவர்களின் அறிவாற்றல் தொகுதியில் பின்னடைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. யாழ்ப்பாண மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் குறிப்பாக க. பொ. த. சாதாரணதரம் (G.C.E. O/Level) மற்றும் க. பொ.த. உயர்தரம் (G.C.E A Level), பல்கலைக்கழக அனுமதியில் வீழ்ச்சி போன்ற தகவல்கள் கவலைக்குரியதாகும். — **வரும்**


தயா சோமசுந்தரம்

www.tamilarangam.net



# முஸ்லிம் காங்கிரஸின் 'அவுட் ஹவுஸ்' இலிருந்து ஒரு குரல்!

## மருதூர் பஷீத்தின் கட்டுரைக்கு ஒரு எதிர்வினை



''தென் கிழக்கு மாகாணம்: தேசத்தின் மீதான தூக்குக் கயிறு'' எனும் தலைப்பில் மருதூர் பஷீத் கடந்த சரிநிகர் இதழில் (ஒகஸ்ட் 10 - ஒகஸ்ட் 23, 1995) எழுதியிருந்த கட்டுரை வடிவிலான நீண்ட கடிதத்தை வாசித்தேன். ஆச்சரியமுற்றேன்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் 1974களிலிருந்தும், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1986ல் அரசியற் கட்சியாகப் பிரகடனப்படுத்தப்படமுன் 1982களில் இருந்து முஸ்லிம் காங்கிரஸுடனும் தொடர்புடையவன் (அண்மைக் காலங்களில் முழுமையாக இல்லாவிட்டாலும்) என்ற வகையிலும் ஆரம்ப காலங்களில் குறிப்பாக 1986, 87களில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வளர்த்தெடுப்பதில் அரும்பாடுபட்டவர்களுள் ஒருவன் என்கிற வகையிலும் சில தெளிவுகளை நான் முன்வைத்தாக வேண்டியுள்ளது.

1. ஏறத்தாழ எட்டு வருடங்களாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களாகிய நாமும் தாங்களும் (அஷ்ரபும்) வட - கிழக்கில் களுக்கு எனத் தனியான அரசியல் அதிகார அலகு அவசியம் என்று கோரிக்கை எழுப்பி வந்திருக்கிறோம்'' என்று கட்டுரையாளர் குறிப்பிடுகிறார். எட்டு வருடத்திற்கு முற்பட்ட அஷ்ரஃப்பின் வரலாறு கட்டுரையாளருக்குத் தெரியாது போலும். இனப் பிரச்சினை தீவிரமடைந்தபின் இலங்கையின் வரலாற்றில் முதன்முதலாக நடைபெற்ற சர்வகட்சி மகாநாட்டில் 1984ல் கலாநிதி பதியுதீன் மஹ்முதோடு பங்குபற்றி வட-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்படும்போது அங்கு வாழ்கின்ற கட்கும் ஒரு நியாயமான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் எனக் குரல் எழுப்பியவர் சிறீலங்கா காங்கிரஸ் தலைவர் என்பது கட்டுரையாளருக்குத் தெரியாத விடயம் போலும். எனவே முஸ்லிம்களின் பிரச்சினைகளைச் சந்திக்குக் கொண்டு வந்தவர்களில் முதன்மை வகிப்பவர்களில் ஒருவர் அஷ்ரஃப் என்பதை ஏன் கட்டுரையாளர் அறியக் கூடாது?

2. ''சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தென் கிழக்கு மாகாண சபையினை ஏற்றுக் கொண்டு விட்டதாகவும், தென் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழுகின்ற முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸிற்கும், தனியான முஸ்லிம் அலகுக் கோரிக்கைக்கும் தங்களுடைய ஆதரவைத் தீவிரமாகவும், அர்ப்பணிப்புடனும் வழங்கிவந்துள்ளதாகவும், இந்த முஸ்லிம்களை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கைவிட்டு தென்கிழக்கு மாகாணத்திற்கு உடன்பட்டிருப்பது முழு வட-கிழக்கு முஸ்லிம்கட்கும் இழைக்கும் துரோகமாகும்'' எனவும் குற்றம் சுமத்துகிறார் கட்டுரையாளர். இதுவரை உத்தியோகபூர்வமாக வெளியீடு செய்யப்பட்ட ஆவணங்களில் என்ன வகையான அதிகாரங்கள் பரவலாக்கப்படும்; அவை எவ்வாறு பரவலாக்கப்படும் என்பது குறிப் பிடப்பட்டுள்ளதேயொழிய அவற்றின் அலகுகள் இன்னும் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்படவில்லை.

ஆனால், அநுமானரீதியாக சில பத்திரிகைகள் சில செய்திகளை வெளியிட்டுக் குட்டையைக் குழப்பியுள்ளன. அவ்வாறு குழம்பியவர்களில் ஒருவர் மேற்படி கட்டுரையாளர் என்பது தெளிவாகின்றது. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அம்பாறை மாவட்டத்தினை மட்டும் கொண்ட முஸ்லிம் மாகாண சபையைத் தான் கேட்கிறார் என்பதற்கு அவரால் அல்லது அவரது கட்சியால் வெளியிடப்பட்ட எந்தவொரு உத்தியோகபூர்வமான ஆவணங்களாவது கட்டுரையாளரிடம் உண்டா? அதனை வெளியிடுவாரா?

3. ''முஸ்லிம்கள் உயிர்களையும், உடமைகளையும் இழப்பதற்கும் வடக்கில் இருந்து வெளியேற்றப்படுவதற்கும், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அல்லது சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு அவர்கள் ஆதரவு வழங்கியமை தான் காரணம்'' எனும் கருத்துப் படக் கட்டுரையாளர் சில கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார், இதன் ஆரம்பம் இதுவல்ல. 1984ல் ஆரம்பித்த சர்வகட்சி மாநாட்டில் இருந்து ''டிசம்பர் 19'' ஆலோசனைகள் வரை அத்தனை ஆலோசனைகளையும் நடைமுறைப்படுத்தாமல் தட்டிக் கழிக்க ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள் முன்வைத்த காரணம் என்னவெனில் ''முஸ்லிம்கள் விரும்புகின்றார்கள் இல்லை'' என்பதாகும். முஸ்லிம்களைச்சாட்டாக வைத்து ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வடகிழக்குப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைப்பதைத் தள்ளிப்போட்டு வந்தது. இதற்கு ஐ. தே. க. முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் (தலையாட்டி பொம்மைகள்) உடந்தையாக இருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் எம். பிக்கள் வடகிழக்கு இணைப்பை எதிர்த்து வந்ததுடன் ஒரு மாற்றுத் தீர்வை முஸ்லிம்கள் சார்பாக முன்வைக்கவும் தவறி விட்டனர். இதே நேரம் ஐ. தே. க. வின் நழுவலுக்கு இவர்கள் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டார்கள். இது தான் உண்மையாக இருப்பினும், வெளிப்படையாக தமிழ் மக்கள் இதனை நம்பினார்கள். முஸ்லிம்கள் தான் வடகிழக்குப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்று கிடைப்பதற்குத் தடையாக இருக்கின்றார்கள் என்று நினைத்தார்கள். இதன் விளைவு தமிழ்-முஸ்லிம் கசப்புணர்வு; இனக்கலவரம்; அதன் பின்பான வளர்ச்சிப்படியின் ஒரு கட்டம் தான் கட்டுரையாளர் சொல்கின்ற உயிர் இழப்புக்கள், உடமை இழப்புக்கள், வடக்கில் இருந்து முஸ்லிம்களை விரட்டல் முதலியனவாகும். காரைதீவு மாளிகைக்காட்டுப் பிரதேசத்தில் 1987 ல் ஏற்பட்ட இனக் கலவரத்தின் பின் , கண்ணகையம்மன் கோவில் உடைக்கப்பட்டு தமிழ் வீடுகள் தீ வைக்கப்பட்ட சம்பவத்தின் பின் இச்செயல்கட்கென கொழும்பு முஸ்லிம் ஐக்கிய தேசியக் கட்சி அடிவருடித் தலைவர்கள் சிலரால் இறக்குமதி செய்யப்பட்ட கூலிப் பட்டாளங்களின் அடையாள அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டமை கட்டுரையாளருக்குத் தெரியாதா? உண்மையில் அஷ்ரபைப் பாராட்ட வேண்டும். ஏனெனில் வடகிழக்கு இணைப்பை முதன் முதலில் வெளிப்படையாக ஆதரித்த முஸ்லிம் அவர்தான். கண்மூடித்தனமாக அல்ல; நிபந்தனையுடன். அதாவது முஸ்லிம்கள் வடகிழக்கு இணைப்புக்கு ஆதரவு வழங்க வேண்டுமானால், நிலத்தொடர்பற்ற முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்களையுள்ளடக்கிய முஸ்லிம் மாகாண சபைக்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்க வேண்டும்; இந்த உண்மை ஏன் கட்டுரையாளருக்குத் தெரியாமற் போனது?

**எம்.வை.எம்.சித்திக்**

4. ''முஸ்லிம் காங்கிரஸ் இவ்வளவு செல்வாக்குப் பெறுவதற்கு உங்களது சிந்தனையும் அறிவும் தான் காரணம் என்று நீங்கள் இறுமாப்புக் கொள்ளக்கூடாது'' என்று கட்டுரையாளர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரைச் சாடியுள்ளார். உண்மையில் அஷ்ரஃப்பின் சிந்தனையும் அறிவும் மட்டுமல்ல அவரது அர்ப்பணமும், தியாக உணர்வும்தான் இதற்குக் காரணம். அவரின் கல்முனை வீட்டை, அழகான புது வீட்டை நாசகாரர்கள் உடைத்து சுக்குநூறாக்கினார்கள்; பாண்டிருப்பில் வைத்து அவரைச் சுட்டுக் கொல்ல முனைந்தார்கள்; இன்றும் அவருக்கு நிறைய கொலைப் பயமுறுத்தல்கள் இருக்கின்றன. இருந்தும் இவர் இக்கட்சியைக் கொண்டு நடாத்துகின்றார் என்றால் அது அர்ப்பணம் அல்லாமல், தியாகம் அல்லாமல் வேறு என்ன? இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் எந்தத் தலைவரும் சாதிக்க முடியாத சில சாதனைகளை நிலை நாட்டியுள்ளமை அவரது சிந்தனையையும் அறிவுத் திறனும் அல்லாமல் வேறு என்ன? இலங்கையில் முஸ்லிம்கள் என்ற இனத்தவர்கள் இருக்கின்றார்கள் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டி, முஸ்லிம்களை ''இஸ்லாமியத் தமிழர்'' என்று கூறி முஸ்லிம்களின் தனிப்பட்ட விஷேட சமய, கலாசார, தேசிய அடையாளங்களை மறைக்க முனைந்த தமிழ் இயக்கங்களை, குறிப்பாக விடுதலைப் புலிகளை, ''முஸ்லிம்களின் குரல் முஸ்லிம் காங்கிரஸ்'' என அங்கீகரிக்கவைத்து, எந்த அரசு ஆட்சிக்கு வரவேண்டும் என்பதும் எவர் ஜனாதிபதியாக வரவேண்டும் (பிரேமதாஸா ஜனாதிபதியாக வந்தமை) என்பதும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் தீர்மானத்தில் தான் தங்கியுள்ளது என்ற நிலையை உருவாக்கி, முன்னர் தான் விரும்பாத நபர் (சிறீமாவோ பண்டார நாயக்கா) ஜனாதிபதியாக வருவதைத் தடுத்து, தற்போதுதான் விரும்பிய அரசை உருவாக்கியுள்ளமை அவரின் சிந்தனைத் திறனையும், ஆற்றலையும் காட்டவில்லையா? இது இலங்கையின் வரலாற்றில் எந்த முஸ்லிம் தலைவரும் சாதிக்காத ஒரு பெரும் சாதனை என்று கூறமுடியாதா? இன்று வடகிழக்குப் பிரச்சினை பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்த முஸ்லிம்களை ஓர் இனமாக இனங்காண வைத்தது, அவர்கட்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தது யார்? இன்று முஸ்லிம்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த விரும்பும் அரசும், தமிழ்க் கட்சிகளும் முஸ்லிம் காங்கிரஸுடன் ஏன் பேச்சுவார்த்தை நடாத்துகின்றன? முஸ்லிம் காங்கிரஸுடன் அல்லது முஸ்லிம்களுடன் கலந்தாலோசியாது ஒரு தீர்வை முன்வைக்க முடியாது என்ற நிலையை உருவாக்கியது யார்? சில தமிழ்க் கட்சிகளின் ஆயுத பலத்தைவிட அஷ்ரஃப்பின் அணுகல் முறை அற்புதம் அல்லவா?

5. ''1977 ல் பொதுத் தேர்தலின் போது சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முஸ்லிம் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி போட்டியிட்டதாகவும், அந்தத் தேர்தலில் அவர் பெற்ற வாக்குகள் எத்தனை என்றும், ஒரு விலாசமற்ற நபர் போல நீங்கள் தூக்கி எறியப்படவில்லையா?'' என்றும் கட்டுரையாளர் வினா எழுப்புகின்றார். கட்டுரையாளரின் அறிவு வங்குரோத்துத் தனத்திற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். அஷ்ரஃப் முஸ்லிம் ஐக்கிய முன்னணியில் அங்கத்தவராக இருந்தாரேயொழிய அவர் போட்டியிடவில்லை. கல்முனைத் தொகுதியில் போட்டியிட்டவர் ஏ. எம். சம்சுதீன். முஸ்லிம் ஐக்கிய முன்னணியில் கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்ட நான்கு முஸ்லிம்களும் தோல்வி அடைந்தமை முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் செல்வாக்கை வெளிப்படுத்தவில்லை; த.வி.கூ. மீது கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு இருந்த செல்வாக்கையே அது வெளிப்படுத்தியது. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஓர் அங்கமாகவே முஸ்லிம் ஐக்கிய முன்னணி போட்டியிட்டது என்பது கட்டுரையாளருக்குத் தெரியாதா?

6. இலங்கை-இந்திய ஒப்பந்தம் தோல்வியடைந்தமைக்கு வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் நலன்களைக் கவனத்திற் கொள்ளாததே ஒரு காரணம் என்றும் தென்கிழக்கு மாகாணம் என்ற ஒரு குறுகிய நிர்வாக எல்லைக்கு தலையாட்டியிருப்பதற்கு என்ன காரணம் கூறப்போகின்றீர்கள்'' எனவும் கட்டுரையாளர் கேட்கின்றார். கட்டுரையாளர் அஷரஃப்பின் அண்மைக்காலப் பேட்டிகள் எதையும் செவிமடுக்கவில்லை போலும். வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கட்கும் எல்லா வகையிலும் சம அந்தஸ்துள்ள அதிகார அலகு ஒன்று வழங்கப்பட வேண்டும் என்றும் இதில் அம்பாறை மாவட்டத்திற்கு அப்பால் வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும், முஸ்லிம்கட்கான ஒரு தனி அலகு வழங்கப்படாவிட்டால் முஸ்லிம் காங்கிரஸ், அரசின் ஆலோசனைகட்கு ஆதரவு வழங்கப்போவதில்லை என்றும், அவ்வாறாயின் அரசின் தீர்வு முயற்சிகள் தோல்வியில் முடியும் என்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூறியதை, கூறிக் கொண்டிருப்பதைக் கட்டுரையாளர் வாசிக்கவோ, கேட்கவோ பார்க்கவோ இல்லைப்போலும். இலங்கை முஸ்லிம்கள் வரலாற்றில் தான் சாரும் கட்சிக்கெதிராக தனது கருத்துக்களைத் துணிவுடன் வெளிப்படையாகக் கூறிய முஸ்லிம் தலைவர் யாரையாவது கூற முடியுமா? இந்தத் துணிவு அஷ்ரஃப்பிற்கு மட்டும் தான் உள்ளது. தொண்டமானின் வாய்கூட இன்று சில வேளைகளில் அடைத்து விடுகின்றது. முஸ்லிம் காங்கிரஸை அஷ்ரஃப் உருவாக்கியிருக்காவிட்டால் இன்றைக்கும் சேலைக்குப் பின்னால் தொங்குகின்ற முஸ்லிம் தலைவர்களைத்தான் நாம் கண்டிருக்க முடியும்!

→15

www.tamilarangam.net





# முழு நாட்டையுமே யுத்தத்திற்கு தயார் படுத்துகிறது வெள்ளைத் தாமரை இயக்கம்!

ச.பாலகிருஷ்ணன்

**சமாதானத்திற்காக வாக்குறுதியளித்த அரசு இன்று யுத்த முனைப்புடன் உள்ளது. கடந்த ஒரு வருட காலத்தில் பொ.ஐ.மு அரசின் நடவடிக்கைகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

அரசு வட பகுதி மக்கள் மீது விதித்திருந்த பொருளாதாரத் தடையை அகற்றித் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டாலும், துரதிர்ஷ்டவசமாக அச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன.

பேச்சுவார்த்தைகளில் ஆரம்பத்திலேயே முரண்பாடு ஏற்பட்டது. விசேடமாக அரசின் தூதுக் குழுவிற்குப் பேச்சுவார்த்தை நடாத்தும் அனுபவம் இல்லாமை பிரதானமாகப் பாதித்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தால் அதற்காக நடைமுறைப்படுத்த மாற்று யோசனைகள் அரசிற்கு இருக்கவில்லை. அவர்களின் ஒரே நடவடிக்கையானது ஐ.தே.க. காலத்தையும் விட அதிக மிலேச்சத்தனமான யுத்தமொன்றிற்கு இறங்குவதாயிருந்தது.

சந்திரிகா குமாரணதுங்க வட-கிழக்குப் பிரச்சினை பற்றிக் காட்டிய ஜனநாயக மனிதாபிமானத் தொலை நோக்கு ஸ்ரீ.ல.சு.க.யினுள் இல்லை. அவரின் அமைச்சரவையினுள்ளும் இல்லை. இவ்வாறான மட்டுப்பாடுகள் அரசினுள் ஆரம்பம் முதலே இருந்தது.

**சமாதானச் சுலோகத்தைப் பிரதானமாகக் கொண்டு அமைக்கப்பட்ட அரசு யுத்தம் ஆரம்பமானதும் இனவாத சக்திகளுடன் சமரசம் செய்து கொள்கின்றது போல் அல்லவா தெரிகிறது?**

ஆம். அது உண்மையே அரசு மிலேச்சத்தனமான அழிவு யுத்தமொன்றிற்குச் செல்ல வேண்டி ஏற்பட்டதும் இனவாதச் சக்திகளிற்கு அடிமைப்பட வேண்டி வந்தமையினாலேயே ஆகும்.

இராணுவத்தினுள்ளும் சிங்கள சமூகத்தின் தீவிரவாதிகளினுள்ளும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவது பற்றி பாரிய எதிர்ப்பொன்று இருந்தது. ஆனாலும் சமாதானத்திற்காக மக்களினுள் இருந்த மிகுந்த விருப்பும், சமாதான அமைப்புகளின் நிர்ப்பந்தமும் காரணமாக இனவாதிகளின் குரல் ஓங்க முடியாமலிருந்தது. யுத்தத்துடன் இந் நிலைமை தலைகீழானது.

யுத்தம் நடைபெற்ற சந்தர்ப்பத்திலும் கூட சமாதான நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்தி முன் கொண்டு செல்ல அரசுக்கு இயலுமாயிருந்தாலும் அப் பொறுப்பு நிறைவேற்றப்படவில்லை. யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அரசின் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் ஐ.தே.க. காலத்தை விடவும் மோசமாக மக்களை யுத்த மனநிலைக்கு இட்டுச் சென்றன.

**அரசின் சமாதான இயக்கமான "சுது நெலும்" (வெள்ளைத் தாமரை) எதிர்பார்க்கும் செய்தி மக்கள் மத்தியில் சென்றுள்ளதா?**

வெள்ளைத் தாமரை இயக்கம் கொழும்பில் வெளியிடும் சமாதானம் எனும் வேலைத் திட்டம் கிராமங்களிற்குச் செல்லவில்லை. யுத்தத்தை உயர்த்திக் காட்டியும் அதற்காகப் பணம் சேகரித்தும், எல்லைப் புறக் கிராமங்களைப் பாதுகாக்க யுத்தவாத ஒத்துழைப்பொன்றைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்தும், முழு நாட்டையுமே யுத்த மனநிலைக்குத் தயார்படுத்தும் இயக்கமொன்றாகவே நான் வெள்ளைத் தாமரை இயக்கத்தைக் காணுகிறேன்.

அரசியல் தீர்வொன்றை முன் வைக்க அரசு முயற்சி செய்யும் இவ்வாறான கணத்தில் அரசு கிராமியப் பிரதேசங்களிற்குக் கொண்டு போயுள்ள சுது நெலும் இயக்கம் காரணமாக அழிவு தான் நிகழ்கின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு, சிங்கள இனவாதிகளைத் தோற்கடிப்பது போன்ற செய்திகள் இதனூடாக சிங்கள மக்களுக்குச் செல்லவில்லை.

சில சந்தர்ப்பங்களில் எம்முடன் "அரச யாப்பு சீர்திருத்த இயக்கத்துடன்" கிராமங்களிற்குச் சென்ற அரசின் அரசியல்வாதிகள் இவ் வெள்ளைத் தாமரை இயக்கம் சார்பாகத் தெரிவித்தது யுத்தத்திற்கு இரையாகிப் பலியாகும் இராணுவத்தினரின்மரணச் சடங்குகளிற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன்வருமாறு மட்டுமே யாகும்.

காலிச் சம்பவத்தின் பின், களுத்துறை மாவட்டத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் நிரந்தரமாகவே தாக்கப்பட்டு வருகின்றனர். அவற்றில் "சுது நெலும்" தலையிடவில்லை. பிரச்சினையை இன்று தென்பகுதி இனவாதிகள் நோக்குவது எப்படியென்றால் யுத்தத்தில் வெற்றி பெறுவதனூடாக மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினை தீரும் எனும் மாயை ஆகும். இத்தகைய மாயையுடனேயே சுது நெலும் வளர்க்கப்படுகிறது.

**அரசு யுத்தத்திற்குச் செல்ல முன் அரசியல் தீர்வொன்றை முன் வைத்திருக்கலாம் அல்லவா?**

ஆம். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை, நடத்த முன் அரசு அரசியல் தீர்வை முன் வைத்திருக்க வேண்டும். அப்படி நடந்திருந்தால் பூநகரி போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. மறுபுறம் அரசிற்குத் தமிழ் மக்களை வென்றெடுக்கும் சந்தர்ப்பங்கள் இதனால் இல்லாது போனது. யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மக்களில் 80 வீதமானோர் அரசியல் தீர்வொன்றிற்கு உடன்பாடானவர்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

**அரசு இன்று முன் வைத்துள்ள யோசனைத் திட்டத்தை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

தற்போது அரசாங்கத்தின் யோசனைகள் வெளி வந்துள்ளது மிகச் சுருங்கிய வடிவிலேயாகும். இந்த யோசனைகளை நடைமுறைப்படுத்தும் போதுதான் நான் இதனை மிகவும் முற்போக்கான நடவடிக்கையாக நோக்குவேன். அரசியலமைப்பு மறுசீரமைப்பு இயக்கமாக நாம் முன் வைத்த யோசனைகளிற்குச் சமனான பாரிய விடயங்கள் அரசு முன் வைத்துள்ள யோசனைகளினுள்ளும் காணக் கிடைக்கிறது. இத் தீர்வுத் திட்டம் உண்மையிலேயே இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நல்ல முயற்சியாகும்.

இந்த யோசனைகளினால் அதிகாரப் பரவலாக்க வியூகம் மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிராந்தியங்களில் உள்ள மக்கள் தமது அபிவிருத்திக் குறிக்கோள்களிற்காகச் செல்ல அவசியமான அனைத்து அதிகாரமுமே இதனுள் அடங்கியுள்ளன. சட்டம், சமாதானம் உட்பட பொலீஸ் அதிகாரம் போன்றவற்றைப் பிராந்தியங்களுக்கு பகிர்ந்து கொடுக்க எதிர்ப்பொன்று உள்ளது. அதற்குப் பிரதான காரணமானது கடந்த ஒரு தசாப்த காலமாக பொலீஸ் இராணுவ மயப்படுத்தப்பட்டமையா [illegible] அல்லது நான்கு தசாப்தங்களிற்கு முன் ஆற்றிய பங்கு; அதாவது சிவில் சமூகத்தில் சிறு சிறு முரண்பாடுகளைத் தீர்க்கும் சமூக சேவை நிறுவனமொன்றின் நிலைமைக்கு ஆகுமென்றால் இப் பொய்ப் பீதி இல்லாது போகும்.

இந்த யோசனைகளின் பிரதானமான குறையாகத் தெரிவது பிராந்தியங்களிற்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் போது அப் பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரம் அவ் விதத்திலேயே வழங்கப்படுவதை உறுதி செய்யும் விதத்தில் எந்த நடுநிலைமை நிறுவன அமைப்பும் இல்லை. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளினால் எந்தவொரு சட்டத்தையும் நிறைவேற்றலாம். பிரஜைகள் சட்டம், மொழிச் சட்டம் இதற்கு நல்ல உதாரணங்கள். இவ்வாறான சட்ட வழங்கல்கள் செய்யும் அதிகாரத்தை மேலும் பாராளுமன்றத்தினுள் வைத்திருப்பது சமநிலையைப் பகிர்ந்தளிக்கும் கருத்திற்கு நேர் எதிரான நடவடிக்கையாக அமையும்.

**அரசின் யோசனைகளுடன் இனவாத சக்திகள் அரசியல் தீர்விற்கு எதிர்ப்பைக் காட்டுவதாகத் தெரிகிறது. இச் சக்திகளுடன் சமாதான சக்திகள் கொடுக்கல்வாங்கல் செய்ய வேண்டியது எவ்வாறு?**

இதற்காக முதலில் மக்களை அறிவூட்ட வேண்டும்.

அதற்கு அரசின் அச்சு மற்றும் இலெக்றோனிக் தொடர்பு சாதனங்களிற்கு முன்னுரிமை எடுக்க வேண்டியிருந்தாலும் அப் பொறுப்பு இதுவரையே நிறைவேற்றப்படவில்லை.


இனவாதத்தை நிராகரிக்கும் அரசியல் கட்சிகள், கலைஞர்கள், பிரஜைகள் அமைப்புகள், அமைப்புக்களாகி முதலில் அரசின் தீர்வை முன் வைக்க அரசிற்குச் சந்தர்ப்பத்தையும், உரிமையையும் வழங்க வேண்டும். இரண்டாவதாக இந்த யோசனைகள் பற்றி மக்கள் மத்தியில் கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இனப் பிரச்சினையைத் தீர்க்க இன்று உருவாகியுள்ள தீர்மானகரமான சந்தர்ப்பத்தைத் தம் வசமாக்கிக் கொள்ளத் தீவிரவாத, இனவாத அமைப்புகளிற்கு இடங்கொடாது அவர்களை இச் சந்தர்ப்பத்தில் தீர்மானகரமாகவே தோல்வியுறச் செய்ய வேண்டும்.

> **தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தால் அதற்காக நடைமுறைப்படுத்த மாற்று யோசனைகள் அரசிற்கு இருக்கவில்லை. அவர்களின் ஒரே நடவடிக்கையானது ஐ.தே.க. காலத்தையும் விட அதிக மிலேச்சத்தனமான யுத்தமொன்றிற்கு இறங்குவதாயிருந்தது. சந்திரிகா குமாரணதுங்க வட-கிழக்குப் பிரச்சினை பற்றிக் காட்டிய ஜனநாயக மனிதாபிமானத் தொலை நோக்கு ஸ்ரீ.ல.சு.க.யினுள் இல்லை. அவரின் அமைச்சரவையினுள்ளும் இல்லை.**

# தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வு!

வீரகேசரி ஆசிரியர் சிவநேசச்செல்வன்



இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததன் பின் உக்கிரமமடைந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வாகப் பல அரசாங்கங்கள் அவ்வப்போது பல்வேறு தீர்வுகளை முன் வைத்தாலும் இம்முறை முன் வைக்கப்பட்டுள்ள தீர்வு அவை அனைத்தையும் விடத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வொன்று என்பது எனது கருத்தாகும். இதுவரை இருந்த அநேக அரசியல் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளாத அநேக விடயங்களை இத் தீர்வை முன் வைத்ததனூடாக ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார். இது இந்நாட்டு அரசியல் வரலாற்றின் புதிய அத்தியாயமொன்றின் ஆரம்பமாகும் என நான் நினைக்கின்றேன். எவ்வாறெனினும், இத் தீர்வின் தலைவிதி தங்கியுள்ளது இப்பிரச்சினையை மிக உக்கிர நிலைமைக்கு உள்ளாக்கியதும் நீண்ட காலம் இந்நாட்டை ஆட்சி செய்ததுமான ஐ.தே.க.யின் ஆதரவிலாகும். அவர்களை இத் தீர்விற்கு இணங்வைப்பது முக்கிய தேவையாகும் என நான் நினைக்கிறேன்.

அடுத்த முக்கிய விடயம் ஜனாதிபதி தனது போர்த்தனமான பேச்[illegible] பதிலாக இந்நாட்டின் சமாதான எதிர்காலமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான பிரயத்தனத்திற்குச் சிங்கள மக்களை வென்றெடுக்க முயல்வதாகும்.

சின்னாபின்னமாய்ப் போயுள்ள நாட்டை மீண்டும் ஐக்கியப்படுத்தவும், நாட்டின் அபிவிருத்திக்காக அனைத்து இனக் குழுக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சிங்கள மக்களினுள் ஏற்படுத்தவும் ஜனாதிபதி முயற்சி செய்ய வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தத்தில் இறங்கியுள்ளது துரதிர்ஷ்டவசமான சம்பவமென்றாலும், இவ் அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்துவதானால், அவ் இயக்கத்தின் தலையீடும் அவசியமானதாகும். அதனால் அரசு அதற்காகத் தனது முயற்சியை எடுக்க வேண்டுமென்பதுடன் தமீழழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தனது வழமையான தீவிரவாதத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இன்று சாதாரண தமிழ் மக்கள் தமது எதிர்பார்ப்புகள் மீறப்பட்ட நிலையொன்றிலேயே உள்ளனர். சமாதானம் இல்லாவிடின் மீண்டும் சமாதானமே எனக் கூறிய ஜனாதிபதியின் இராணுவத் தாக்குதல்களிற்கு அம் மக்கள் உட்பட்டுள்ளனர். அதனால் அதனூடாக தமது எதிர்பார்ப்புகள் மீறப்பட்டுள்ளதாகவே அவர்கள் கருதுகிறார்கள். சாதாரண தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற வேண்டுமானால் அது இந்த அரசியல் தீர்வின் வெற்றியில்தான் தங்கியுள்ளது.

நன்றி: யுக்திய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தீர்வு யோசனைகள் : கட்சிகளின் நிலைப்பாடு; ஒரே பார்வையில்...

''இன, மத, அரசியல் பேதங்களுக்கு முடிவு கட்டி, பெருமை கொள்ளும் ஒரு எதிர்காலத்தை கட்டியெழுப்பவே பிராந்திய அதிகாரப் பரவலாக்கலைச் செய்ய முன்வந்துள்ளோம்'' என்று தீர்வு யோசனைகளை அதிகாரப்பூர்வமாக ஓகஸ்ட் 3ம் திகதி இரவு தொலைக்காட்சி மூலம் ஜனாதிபதி அறிவித்தார். அவர் தனதுரையில் இப்பரவலாக்க யோசனைகளில் சிங்களத்தையும், தமிழையும் அரச கரும மொழியாக அங்கீகரித்து சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிராந்தியமும் பரவலாக்கப்பட்ட அதிகாரத்துறைக்குள் சட்டவாக்க தகுதியை கொண்ட பிராந்திய சபையைப் பெற்றிருக்கும். அது போலவே பிராந்தியத்தின் நிறைவேற்று அதிகாரத்தை மேற்கொள்ளும்....







.... ஆளுனர் முதலமைச்சரின் இணக்கத்துடன் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்... அத்துடன் முதலமைச்சர் பிராந்திய சபையின் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருக்கும் வரை அவரை நீக்கி விடும் அதிகாரம் மத்திய அரசுக்குக் கிடையாது....

... தேசிய பாதுகாப்பு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாகச் சட்டத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தொல்பொருள்தளங்கள், பௌத்த சமயம்.... ஆகியவை தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருக்கும்... இராணுவ மார்க்கங்களின் மூலம் மாத்திரம் இலங்கை சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது. தற்போதைய நெருக்கடிக்கு நிலையான தீர்வுகாண வேண்டுமானால் நாம் அரசியல் தீர்வுகளை வகுத்தாக வேண்டும்....

எமது தற்போதைய இராணுவ நடவடிக்கை எந்தவகையிலும் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல. சமாதானத்தின் விரோதிகளுக்கு எதிராக மாத்திரமே நடத்தப்படும் சமாதானத்திற்கான யுத்தமாகும் என்று அறிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கைகளையும், திட்டங்களையும் எப்போதும் எதிர்ப்பதையே தன்மையாகக் கொண்ட, எதிர்க் கட்சியில் இம்முறை இருக்கும் ஐ.தே.க, தீர்வு யோசனைகள் வெளியானவுடன் அது தொடர்பான முடிவுகளைத் தெரிவிப்பதற்கு கால அவகாசம் கேட்டிருந்தது. சில நாட்களின் பின்பு, இலங்கையின் ஐக்கியத்தையும், இறைமையையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்த வேண்டும் என்ற கட்சிக் கொள்கைகளையும், நிலைமைகளையும் கவனத்திற் கொண்டு அதிகாரப்பரவலாக்கல் கொள்கைக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் பிரிவினையைத் தடுப்பதற்கு உறுதிப்பாடு அவசியம் எனவும் தெரிவித்துள்ளது.

ஆனால் தீர்வு யோசனைகள் தொடர்பாக, ஐ.தே.க மூன்று பிரிவாகப் பிரிந்துள்ளதாகவும், அநுராவின் பிரிவு ஆதரிப்பதாகவும், சுசில் முனசிங்கவின் பிரிவு எதிர்ப்பதாகவும், மற்றவர்கள் நடுநிலை வகிப்பதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஐ.ஐ.தே.க (லலித் பிரிவு) ஒற்றையாட்சி என்ற பதம் அரசியலமைப்பிலிருந்து நீக்கப்பட்டு பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற பதம் பாவிக்கப்படுவதையும், வட - கிழக்கு இணைக்கப்படுவதையும் ஆட்சேபித்திருக்கிறது. ஆனால் அதிகாரப்பரவலாக்கல் விடயத்தில் அரசுடன் ஒன்றிப்போக முன்வந்துள்ளதாக தெரிவிக்கிறது.

யுத்தமும், குரோதமும் நிறைந்த ஒரு சூழ்நிலைதான் இன்றும் தொடர்கின்றது....

முதலில் இந்த நிலைகளுக்கு முடிவு கட்டி சமாதான சூழ்நிலையொன்றை உருவாக்க வேண்டும். அதன் பின்பே தீர்வு யோசனைகள் பற்றிப் பேச வேண்டும் தமிழ் மக்களது உரிமைகள் வழங்கப்படத்தான் வேண்டும். ஆனால் ஏனைய இனங்களின் விருப்பு வெறுப்புக்களையும் அறிந்த பின்னர்தான் அதனை மேற்கொள்ள வேண்டும் என அறிக்கை விட்டனர் ஜே.வி.பியினர். பாராளுமன்றத்தில் இக் கட்சியின் உறுப்பினர், ''தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனை புலிகளின் ஈழம் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக உள்ளது. இந்த யோசனைகள் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் இதனை எதிர்க்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

இன நெருக்கடிக்கு தீர்வாக அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டிருக்கும் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் ஒற்றையாட்சியை நிர்மூலம் செய்து சமஷ்டி அரசொன்றை அமைப்பதன் மூலமாக தேசிய அனர்த்தம் ஒன்றுக்கு வழிவகுக்கக் கூடியதாக அமைந்திருக்கின்றன எனவே இந்த யோசனைகளை அரசாங்கம் உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்று எம்.ஈ.பி தலைவர் தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

இதைத் தவிர

★ யோசனைகளை அமுலாக்குவதற்கு முதல் புலிகளை ஒழித்துக் கட்ட வேண்டும்.

★ 30 சதவீத நிலப்பரப்பில் 6 வீத தமிழ் மக்களும், 60 சதவீதமான கரையோரமும் ஒப்படைக்கப்படுகிறது.

★ முடிக்குரிய காணிகள் ஆதிக்கம், வெளிநாட்டு உதவிகளை பெறும் உரிமை, பிராந்திய சபைகளை கலைக்கும் உரிமை ஆகியன வழங்கப்படக்கூடாது.

★ சிங்கள மக்களிடையே அதிருப்தி தோன்றும்.

★ எல்லைகளில் ஓயாத சச்சரவு ஏற்படும்.

★ வடக்கு கிழக்கை தமிழர்களுக்கு கொடுத்தால் இதனை நாடு முழுவதற்கும் விஸ்தரிப்பதற்கே முற்படுவார்கள்.

★ இவ் யோசனைகள் அமுலானால், பல விடயங்களில் பாதிப்பு ஏற்படும்

★ நாட்டினுடைய இறைமை, ஒருமைப்பாடு பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு தீவிர பாதிப்புகளை ஏற்படுத்தும்.

★ சிங்களவர்களுக்கும் பௌத்தத்திற்கும் எதிர்காலத்தில் கேடு விளைவிக்கும்.


இவ்வாறு தமது எதிர்ப்புகளை சிங்கள பௌத்த இனவாத அமைப்புகளைச் சேர்ந்த ஜாதிக்க சிந்தனையாளர்கள், பௌத்த அமைப்புகள், சங்கங்கள் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், தென்னிலங்கைக் கல்விமான்கள் குழு, சிங்கள சட்டத்தரணிகள் சங்கம், போன்ற அமைப்புகள்அறிக்கைகள் வெளியிட்டும், எதிர்ப் பிரச்சார கூட்டங்களையும் நடத்துகின்றனர்.


இவர்களுக்கு பதிலளிக்கும் வகையில் நீதி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் இறைமை, ஐக்கியத்தை பிராந்திய சபைகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படியின்றி பிராந்திய சபைகள் மத்திய அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியை மேற்கொள்ளும் நிலை ஒன்று தோன்றினால் அல்லது நாட்டின் இறைமைக்கு எதிரான காரியங்களில் ஈடுபட்டால் அவற்றைக் கலைத்து விடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு எனவும் வடக்கு கிழக்கு இணைப்பை அரசு எதிர்க்கிறது எனவும் கூறியுள்ளார்.

தீர்வு யோசனைகளில் இவ்வாறான இழுபறிகள் இருக்கும் போது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் ''ஒற்றையாட்சி முறை நீக்கப்படுவது, பிராந்திய சபைகளுக்கான சட்டமாக்கல் அதிகாரத்தில் பாராளுமன்றம் தலையிட முடியாமை, மற்றும் பிராந்திய சபைகளைக் கலைக்கும் உரிமை ஜனாதிபதிக்கோ, ஆறாண்டுக்கோ மறுக்கப்பட்டுள்ளமை போன்ற அம்சங்கள் தீர்வு யோசனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதால் நாம் அதனை வரவேற்கிறோம்'' எனக் கூறியுள்ளார்.

''தமிழர்களது நீண்டகால எதிர்பார்ப்புகளில் பெரும்பகுதியை பூர்த்தி செய்வதற்கு தேவையான அடிப்படைகளை இப் பிரேரணைகள் கொண்டுள்ளன என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்'' என அரசில் யாப்பு சீர்திருத்த இயக்கம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.







அரசின் தீர்வுத் திட்டத்திற்கு மக்கள் வரவேற்பு: அதிகாரப் பகிர்வே நிரந்தர அமைதியைத் தரும்! என புளொட் தெரிவித்துள்ளது.

''இலங்கை அரசாங்கம் ஒன்றினால் முதல் தடவையாக தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டதை வரவேற்கும் அதேவேளை வெளியிட்ட தீர்வுத் திட்டத்தில் இருக்கக் கூடிய அடிப்படை அம்சங்கள் தொடர்பான தெளிவற்ற தன்மை பற்றிச் சுட்டிக் காட்டினோம்'' என ஈ.பி.ஆர்.எல்.எப் கூறியுள்ளது.

''ஒரு மாற்றுத் தீர்வுத் திட்டத்திற்கான ஆரம்பமாகவும், அடிப்படையாகவும் இவ் யோசனைகளை எமது கட்சி கொள்கிறது'' என புதிய ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

''சமாதானத்தை ஏற்படுத்துவதாக கூறிய இன்றைய அரசாங்கம் யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளையெல்லாம் சிதைத்து விட்டது. தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதன் மூலம் புலிகள் அமைப்பை வேருடன் களைந்தெறிய முடியும் என அரசாங்கம் நம்புகிறது'' என நவசமசமாஜக் கட்சி கூறியுள்ளது.

''தீர்வுத் திட்டத்தில் வட கிழக்கில் ஒரேயொரு அலகுதான் இருக்குமென்றால் அதனை எமது கட்சி முழுமையாக எதிர்க்கும். வடக்கு - கிழக்கு முஸ்லீம் மக்களுக்கென அவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு முஸ்லிம் பெரும்பான்மை அரசியல் அலகு வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் விவகாரம் முழு அதிகாரப் பரவலாக்கலாக இருக்க வேண்டும்'' என முஸ்லீம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

''அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள ஆலோசனைக் கொத்தில் முஸ்லிம்களின் இதுகாலவரையான இழப்புகளை இனங்கண்டு, அவர்களின் அரசியல் ரீதியான போராட்டங்களைப் புரிந்து கொண்டு, முஸ்லீம்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து, அதிகாரப்பரவலாக்கத்தில் அவர்களுக்குரிய பங்கை வெளிப்படுத்தக் கூடிய அல்லது அடையாளங் காட்டக்கூடிய அழகான வாசகமும் இல்லாதது மிகுந்த வேதனையை அளிக்கிறது'' என சிறிலங்கா முஸ்லீம் கட்சி தெரிவித்துள்ளது.

''கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் சுமார் மூன்று இலட்சம் முஸ்லீம் மக்களுக்கும் அங்கு குடியேற்றப்பட்டுள்ள சுமார் இரண்டரை இலட்சம் சிங்கள மக்களுக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் எனக் கூறுபவர்கள், மத்திய மலையக நாட்டில் செறிந்து வாழும் சுமார் ஐந்து இலட்சம் மலையகத் தமிழ் மக்கள் நிலை தெரியாமல் இருக்க முடியாது. இத் தீர்வுத் திட்டத்தில் மலையக மக்களுக்கும் பங்களிப்பு செய்யுங்கள்'' என ஐ.தொ.கா அறிக்கை விடுத்துள்ளது.

... மலையக மக்களின் தேவைகளும், வேண்டுகோள்களும் அரசியல் தீர்வுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படும் என நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பதாக மலையக மக்கள் முன்னணி கூறியுள்ளது.

டெலோ இயக்கம் ''இந்த தீர்வு யோசனைகளில் சர்ச்சைக்குரிய சில விடயங்கள் இருப்பதாகவும், கட்டாயமாக இடம்பெற வேண்டிய அம்சங்கள் இடம்பெறத் தவறியுள்ளன எனவும், முழுமையான தீர்த் திட்டம் முன்வைக்கப்படாத நிலையில் இது பற்றி முடிவுக்கு வருவது இப்போது சாத்தியமில்லை'' எனக் கூறியுள்ளது.

அரசியல் தீர்வு யோசனைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையில் பங்காளிகளாக வரவேண்டும். அத்துடன் அதிகாரப்பகிர்வுப் பொறுப்பினை விடுதலைப் புலிகள் பொறுப்பில் விடுவதே நிர்வாகத்திற்கான இலக்காக அமையும் எனக் குறிப்பிட்டும், இலங்கையை நான்கு அதிகாரப் பகிர்வு அலகுகளாக பிரிக்குமாறும் இ.தொ.கா ஆலோசனை வழங்கியுள்ளது.

''இத் தீர்வு யோசனைகள் சிங்கள மக்களின் அதிகாரப் பகிர்வே அல்லாமல் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு அல்ல. தனி ஈழமே தமிழ் மக்களின் தீர்வாகும் '' என ஈழ தேசிய விடுதலை முன்னணி தனது பத்திரிகை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஒற்றையாட்சி முறை இல்லாதொழிக்கப்படுவது அரசியல் தீர்வு முயற்சியில் ஒரு முக்கியமானதொரு திருப்பம்... ஆனால் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தப்பட்ட விடயங்கள் போதுமானவையல்ல. அதில் சில விடயங்கள் திருத்தப்பட வேண்டியுள்ளன. சில விடயங்களில் மேலதிக விளக்கம் பெற வேண்டியுள்ளது.

... அடுத்தது ஒரு முக்கியமான விடயம் குடியேற்றங்கள் தொடர்பானவை. இது தொடர்பாக தெளிவான வரையறை வேண்டும். எம்மைப் பொறுத்தவரை வட -கிழக்குக்கு சுயாட்சி வழங்கும் சமஷ்டித் தீர்வாக இது இருக்க வேண்டும் என ஈ.பி.டி.பி வலியுறுத்தியுள்ளது.

''ஜனாதிபதி முன்வைத்திருக்கும் யோசனைகள் இராணுவத் தீர்வை நியாயப்படுத்துவதற்கு அணியப்பட்ட முகமூடியாகும், அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நிரந்தர சமாதானத்தை தரக்கூடிய தீர்வு யோசனைகளை முன்வைக்கவில்லை. யோசனைகளை பகிரங்கப்படுத்திய பின்னர் மறைமுகமாகத் தமிழ் மக்கள் மீதான யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது'' எனக் கூறி தீர்வு யோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளார்கள்.

'சிங்கள அரசுகள் எப்பொழுதும் தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வை வழங்கப்போவதில்லை. ஏனெனில் இலங்கை பல்லின பல மத நாடு என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதை விடுத்து பௌத்தத்திற்கு மீண்டும் முன்னுரிமை கொடுத்துள்ளது. ஆகவே, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வானது தமிழ் மக்களின் தேசம் வரையறுக்கப்பட்டு, அதனுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன் மூலம் நாடுகளுக்கிடையான ஒன்றியம் ஒன்றை உருவாக்கி ஒற்றுமையாக வாழலாம் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

வேறுசிலரோ இலங்கையில் தமிழ், முஸ்லீம், மலையக, சிங்கள மக்கள் தேசிய இனங்களாகக் கருதப்பட்டு அவர்களது தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாத கட்டத்தில் சமாதானம் என்பது வெறும் கேள்விக்குறியே என்று தெரிவிக்கின்றனர்.

எவ்வாறெனினும் இந்த அரசால் முன்வைக்கப்பட்டிருக்கும் இத் தீர்வு ஆலோசனைகள் பல விடயங்களில் தெளிவற்றதாகவே இருக்கிறது என்பது உண்மையே. அது தெளிவாகத் தெரிவித்திருக்கும் விடயங்களில் கூட அரசு தற்போது தடுமாறுவதாகத் தெரிகிறது. உதாரணமாக முதலமைச்சர் பதவிநீக்க விவகாரம் தொடர்பாக பொ.ஐ.முவுள் பலத்த கருத்து மோதல்கள் வெடித்துள்ளன. பொ.ஐ.முவின் முக்கியஸ்தர்களுள் ஒருவரான ரட்னசிறி விக்கிரமநாயக்க இந்தத் தீர்வை மறுதலித்து தான் ஒரு மாற்று தீர்வை முன்வைத்துள்ளார். எப்படியோ, யோசனைகளுக்கு மேலும் அர்த்தம் சேர்க்கும் விதத்தில் முழு விபரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை அரசு விரைவில் வெளியிடுதாக அறிவித்துள்ளது.

அது வெளியிடப்பட்ட பின்னரே உண்மையான தீர்வு யோசனைகளின் எதிர்காலம் பற்றி தெளியாக கூறமுடியும். அதுவரைக்கும் அரசாங்கமும், சந்திரிகா அவர்களும் முன்வைத்த காலைப் பின்வைக்காமல் இருப்பார்கள் என்று நம்புவோமாக!

தொகுப்பு- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும்~10

# லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்ட பிரஜாவுரிமை விண்ணப்பங்கள்!

### 1960-03-19 பொதுத் தேர்தல்

1949-ம் ஆண்டு 3ம் இலக்க இந்தியர் -பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி இலங்கை பிரஜாவுரிமை கோருவோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டது. இதில் தகுதி பெறுவதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் கெடுபிடிகளைப் போலவே மலையகத் தலைவர்களின் ஊசலாட்டமும் பிரஜாவுரிமை பெறுவதைத் தடுப்பதில் ஒரு முக்கிய பாத்திரம் வகித்தது. முக்கிய தலைவர்களும் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் முறைப்படி விண்ணப்பித்து விட்டு தோட்டத் தொழிலாளரை விண்ணப்பிக்காது பகிஷ்கரிக்குமாறு கோரினர். விண்ணப்பிப்பதற்கான கடைசித் திகதி (1951 ஆகஸ்ட் 5) நெருங்கிய போது முடிவை மாற்றி அனைவரையும் விண்ணப்பிக்குமாறு அவசர அறிவித்தல் கொடுத்தனர். இலங்கை -இந்திய காங்கிரஸ் காரியாலயங்கள் இரவு பக்லாக இயங்கின. கோரப்பட்ட விபரங்களை நிரப்புவதும் தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதும் எளிதான காரியமாக இருக்கவில்லை. எனவே அரைகுறையாக அவற்றை நிரப்பினர். விண்ணப்பங்களின் எண்ணிக்கை லட்சக் கணக்கில் இருந்தபடியால் அவற்றையும் ஆவணங்களையும் எண்ணிப் பார்த்து குறிப்பிட்ட தினத்தில் கையளிக்க முடியாமல் லொறிகளில் ஏற்றிக் கொண்டு போய் அந்தர் - இறாத்தல் கணக்கில் நிறுத்து் பாரம் கொடுத்தனர். பெருமளவு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதற்கு விண்ணப்பங்கள் முறையாக நிரப்பப் படாமையும் ஒரு காரணமாக அமைந்தது.

பீ.ஏ.காதர்

எப்படியோ 1960ஆம் ஆண்டாகும் போது சில ஆயிரக்கணக்கானோராவது பிரஜாவுரிமை பெற்று வாக்காளர் ஆகிவிட்டனர். (உண்மையில் 1962ம் வருடத்தில் கூட விண்ணப்பித்தவர்களில் 16.2% வீதத்தினரே இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றனர்.) இவர்களது வாக்கைப் பெற்று பாராளுமன்றம் சென்று விடலாம் என்ற சபலம் மலையகத் தலைவர்களின் மனதில் ஏற்பட்டு விட்டது. 1950களின் நடுப் பகுதியில் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைமையிலே ஒரு பிளவு ஏற்பட்டிருந்தது. அதிலிருந்து தொண்டமானுடன் முரண்பட்டுக் கொண்டு, வெளியேறிய அசீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸை அமைத்தார். 1960 தேர்தல் நெருங்கியதும் மலையக வாக்குகளை சிதறடிக்காமல் ஒன்றிணைக்கும் நோக்குடன் இவ்விரு தலைவர்களும் ஒன்றிணைந்து ''இலங்கை ஜனநாயக காங்கிரஸ்'' (Ceylon Democratic Congress) என்ற பெயரில் ஒரு பொது அமைப்பை உருவாக்கி இருவரும் போட்டியிட்டனர். தொண்டமான் நுவரெலியா தொகுதியிலும் அசீஸ் கொழும்பு மத்திய தொகுதியிலும் போட்டியிட்டு இருவருமே தோல்வி யடைந்தனர்.

நுவரெலியா தேர்தல் தொகுதி -1960 மார்ச்

| | | |
|---|---|---|
| வில்லியம் பெர்னாண்டோ | கை | 2,397 வாக் |
| பீட்டர் மெல்லமாராச்சி | யானை | 1,969 வாக். |
| எஸ்.தொண்டமான் | மரம் | 1900 வாக். |
| இ.வணிகசேகர | தராசு | 1,110 வாக். |
| யூ.கே.வில்பர்ட் | சாவி | 843 வாக் |
| கே.ஆர்.எ.பெல்பொல | குடை | 322 வாக் |
| ராஜா செனவிரத்ன | தையல் மெஷின் | 320 வாக் |
| டி.கே.டி.ஜினேந்ரபால | நட்சத்திரம் | 240 வாக் |
| ஹியூபர்ட் மெதகம | கடிகாரம் | 56 வாக் |

குறிப்பு: தொண்டமான் ஒருவரே இத்தொகுதியில் போட்டியிட்ட தமிழர். ( 8 சிங்களவர் போட்டியிட்டனர்.)

மத்திய - கொழும்பு (3 அங்கத்தவர்) தொகுதி

| | | |
|---|---|---|
| எம்.சி.எம்.கலீல் | தராசு | 33,121 வாக். |
| பீற்றர் கெனமன் | நட்சத்திரம் | 30,574 வாக். |
| ஆர்.பிரேமதாச | யானை | 29,828 வாக். |
| பி.எ.பாலதம்பு | சாவி | 22,228 வாக். |
| சேர் ராசிக் பரீத் | குடை | 21,033 வாக். |
| எம்.எஸ்.தேமிஸ் | வண்டிச்சில்லு | 19,093 வாக். |
| ஈ.எஸ்.ரட்ணவீர | கை | 11,859 வாக். |
| எ.அசீஸ் | மரம் | 4,635 வாக். |
| டி.ஜே.எஸ்.பரணயாப்பா | விளக்கு | 414 வாக். |
| வசந்தா அப்பாத்துரை | கப்பல் | 404 வாக். |
| சிசில் விக்ரமசிங்க | கண் | 397வாக். |
| ஏ.குமரசிங்க | பூ | 220 வாக். |
| பிரேமரஞ்சன் லோகேஸ்வரா | மேசை | 171 வாக். |
| ஏ.ஏ.முகமத் | குடம் | 166 வாக். |

### 1960-ஜூலை பொதுத் தேர்தல்

இத்தேர்தலில் தொண்டமான் - அசீஸ் இருவருமே போட்டியிடவில்லை. ஆயினும் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் தொண்டமான் நியமன உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.

### 1965 பொதுத் தேர்தல்

1964 நவம்பர் 26ல் ஏரிக்கரை (Lake House) பத்திரிகை நிறுவனத்தை சுவீகரிப்பதற்கான மசோதா பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டது. ஏரிக்கரை பத்திரிகை நிறுவனம் தனது முழுப்பலத்தோடும் சு.க. அரசுடன் மோதியது. நிறைய பணம் விளையாடியது. பாராளுமன்றில் சூடான விவாதங்கள் மூண்டன. இதன் பின்னணியில் 1964.12.03ந் திகதி கவர்னர் ஜெனரலின் சிங்காசன உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஒரு வாக்கினால் சு.க. அரசு தோல்வி கண்டது. பாராளுமன்றம் கலைக்கப் பட்டது. தொண்டமான் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. சபை முதல்வர், காணி நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் சி.பி.டி.சில்வா 13 அங்கத்தவருடன் கட்சி தாவினார்.

73:74 என்ற, ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்ற இப்பிரேரணை சு.கட்சியின் நியமன உறுப்பினரான தொண்மானின் வாக்கைப் பெற்றிருந்தால் வாக்குகள் சமமாக விழுந்திருக்கும்; அந் நிலையில் சபாநாயகர் தனது வாக்கை அளித்து பிரரேரணையை வெற்றி பெறச் செய்து அரசாங்கத்தைக் காப்பாற்றி இருக்க முடியும்.

பிற்காலத்தில் தனது ஒரு வாக்கினால் தான் சு.கட்சி அரசாங்கம் கவிழ்ந்தது என தொண்டமான் பெருமையாக மேடைகளிலும் பேசியுள்ளார். தொண்டமானின் இச்செயலின் சரி பிழைகள் எவ்வாறாயிருப்பினும் 60 - 65 கால சு.கட்சி அரசாங்கம் மலையக மக்களின் தலைவர்களுடன் கலந்தா

நுவரெலியா தொகுதி -1970

| | | |
|---|---|---|
| காமினி திசாநாயக்க- | யானை | 10,887 வாக்குகள் |
| ரி.வில்லியம் பெர்னாண்டோ | கை | 8,810 வாக்குகள் |
| சி.வி.வேலுப்பிள்ளை | விளக்கு | 170 வாக்குகள் |
| மொத்த வாக்குகள்: | | 24,027 வாக்குகள் |

லோசிக்காமலே மனிதாபிமானமற்ற ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தை செய்து கொண்டது. இவ்வொப்பந்தம் 60 சத வீதமான மலையக மக்கள் (6லட்சம் பேர்) இந்தியாவுக்கு நாடுகடத்தப்படுவதற்கு வழி வகுத்தது. தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் எதிர்த்தும் கூட இவ்வொப்பந்தத்தை தடுக்க முடியவில்லை.

சு.கட்சி அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு தொண்டமான் வழங்கிய நிர்ணயகரமான ஒத்துழைப்புக்கு பிரதிபலனாக 1965ல் பதவிக்கு வந்த ஐ.தே. கட்சி அரசாங்கம் அவரை நியமன உறுப்பினராக மீண்டும் நியமித்தது. அண்ணாமலையும் நியமன உறுப்பினரானார். இ.தொ.காவைச் சார்ந்த இருவர் செனட்டர்களாயினர்.

இந்த் யூ.என்.பி அரசாங்கத்தின் காலத்தில் தான் ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் பாராளுமன்ற சட்டவாக்கம் பெற்றது. 1967ம் ஆண்டு 14ம் இலக்க இலங்கை - இந்திய ஒப்பந்த -அமுலாக்கல் -சட்டத்தின் மூலமே அது நிறைவேறியது. இச்சட்டத்தை

தொண்டமானும் சரி தமிழரசு கட்சியும் சரி எதிர்க்கவில்லை. அப்போது இ.தொ.கா. சார்பில் செனெட்டர்களாக இருந்த எஸ்.நடேசன் ஆர்.ஜேசுதாசன் ஆகிய இருவரும் இச்சட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர். ஒப்பந்தப்படி இந்தியாவுக்கு அனுப்பப்படுகின்ற ஒவ்வொரு 7 பேருக்கும் 4 பேர் வீதம் இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படும். அதாவது 7பேர் இந்தியா சென்ற பின்னரே 4 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை கிடைக்கும். டட்லி அரசாங்கம் இதனைத் தளர்த்தி 7 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கப் பட்டால் 3 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்க இணங்கியது. இச்சிறிய சலுகையில் திருப்தி கண்டு தமிழ்

தலைமைகள் இச் சட்டத்தை ஆதரித்தன! பிரஜ்ஜாவுரிமைச் சட்டத்தை எதிர்த்து தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி தந்தை செல்வாவினால் உருவாக்கப்பட்ட தமிழரசு கட்சி கூட இச்சட்டத்தை ஆதரித்தே வாக்களித்தது.

### 1970 பொதுத் தேர்தல்

1970ல் மீண்டும் சுதந்திர கட்சி இடதுசாரி கட்சிகளின் ஆதரவுடன் அமோக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. மலையக பிரதிநிதிகள் எவரும் தெரிவாகவில்லை. இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ.அசீஸ் நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மலையகத்தின் பிரபல தொழிற் சங்கவாதிகளான சி.வி.வேலுப் பிள்ளை நுவரெலியா தொகுதியிலும், வி.கே.வெள்ளையன் மஸ்கெலியா தொகுதியிலும் போட்டியிட்டு தோல்வியடைந்தனர்.

மஸ்கெலியா தொகுதி -1970

| | | |
|---|---|---|
| பி.ஜி.ஆரியதிலக | கை | 10,788 வாக்குகள் |
| இ.விஜேசூரிய | யானை | 10,087 வாக்குகள் |
| வி.கே.வெள்ளையன் | குடை | 1,412லவாக்குகள் |
| டி.ரி.ரணவீர | வண்ணாத்தி | 1,289 வாக்குகள் |

### 1977 பொதுத் தேர்தல்

1950ம் ஆண்டு மஸ்கெலிய தேர்தல் தொகுதியில் இடைத் தேர்தல் ஒன்று நடைபெற்றது. ஜீ.ஆர்.மோத்தா காலமானதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக இவ் இடைத் தேர்தல் நடைபெற்றது. இதில் கை சின்னத்தில் இலங்கை இந்திய காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட ஜனாப் ஏ.அசீஸ் 11,343 வாக்குகள் பெற்று வெற்றியீட்டினார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜி.ஆர்ராசப்பிரிய (வண்டிச் சில்லு சின்னம்) 1,301 வாக்குகளை மாத்திரமே பெற்றார்.

1950ம் ஆண்டின் பின்னர் முதற்தடவையாக மலையக பிரதிநிதி ஒருவர் மலையக தேர்தல் தொகுதி ஒன்றிலிருந்து தெரிவானது 1977ம் ஆண்டிலேயேயாகும். நுவரெலியா - மஸ்கெலியா ஆகிய இரு தேர்தல் தொகுதிகளும் இணைக்கப்பட்டு மூவங்கத்தவர் தொகுதியாக மாற்றப்பட்டது. இதிலிருந்து மூன்றாவது உறுப் பினராக தொண்டமான் தெரிவானார். (இத் தொகுதியில் ஒருவருக்கு மூன்று வாக்குகள் இருந்தன. அவற்றை விரும்பிய ஒருவருக்கோ அல்லது மூவருக்கோ வழங்கலாம்). பெற்ற வாக்குகள் வருமாறு.

நுவரெலியா -மஸ்கெலியா தேர்தல் தொகுதி -1977

| | | |
|---|---|---|
| காமினி திசாநாயக்க | யானை | 65,903 வாக்குகள் |
| அனுரபண்டாரநாயக்க | கை | 48,776 வாக்குகள் |
| எஸ்.தொண்டமான் | சேவல் | 35,743 வாக்குகள் |
| ரி.ஐயாதுரை | ஏணி | 3,026 வாக்குகள் |
| பி.காமினி ஆரியதில | நட்சத்திரம் | 2,946 வாக்குகள் |
| ஏச்.எம்.அபேசிங்க | தராசு | 1,175 வாக்குகள் |
| ஏ.அசீஸ் | மரம் | 916 வாக்குகள் |
| கே.ஜி.ரட்ணபால | மணி | 691 வாக்குகள் |
| ரொபர்ட் பெரேரா | நாற்காலி | 604 வாக்குகள் |
| சி.ஆர்.தல்தேனா | முயல் | 556 வாக்குகள் |
| ஜி.பி.டபிள்யூ. பத்திரன | குடை | 94 வாக்குகள் |
| ஜே.கே.ஜி சாந்த சிறில் | கண் | 91 வாக்குகள் |
| அசோகா அத்தபத்து | மலர் | 87 வாக்குகள் |
| மொத்த வாக்குகள்: | | 64,407 X 3 |


மத்திய கொழும்பு தொகுதியில் போட்டியிட்ட இ.தொ.கா. பொது செயலாளர் எம்.எஸ், செல்லச்சாமி வெற்றி பெறவில்லை.

வரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# சுல்பிகா: ஒரு பெண்ணிலைக் கவிஞர்!

1970களின் பிற்பகுதியில் இருந்து ஈழத்துத்தமிழ்க்கவிதையின் உள்ளீடு பெரிதும் மாறியுள்ளது. குறிப்பாக எண்பதுகளில் சிங்கள பௌத்த பெருத்தேசிய வாதத்தின் இன ஒடுக்கல் உக்கிரம் பெற்றபோது தமிழ்த்தேசிய வாதம் ஈழத்தில் ஆயுதரீதியான வளர்ச்சியைப் பெற்றது. இதனால் புதுக்கவிதையாயினும் சரி மரபுக் கவிதையாயினும் சரி பொருளடக்கத்தில் மாறுபட்டது.

''இவ்வடிப்படையில் எண்பதுகளின் மையப்பகுதியிலிருந்து ஈழத்தில் பெண் கவிஞர்களின் வருகை குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டு வந்தது. பல்கலைக் கழகங்களிலிருந்து இவர்களில் பலர் வெளி வந்தனர் குறிப்பாக சிவரமணி, செல்வி சுல்பிகா போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

''விலங்கிடப்பட்ட மானுடம்'' என்ற கவிதைத் தொகுப்பின் தந்த சுல்பிகா யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறிய விஞ்ஞானப் பட்டதாரி. கவிதை கவிஞனின் சமூக அரசியல் பிரக்ஞையின் வெளிப்பாட்டுச் சாதனம் மட்டுமல்ல. அது அவனது முழுமையான உணர்வுலகையும் தழுவி நிற்பது. மொத்தமாக வாழ்க்கை அனுபவத்தின் ஒரு வெளிப்பாட்டுச் சாதனம். இரத்தமும் சதையும் உள்ள எல்லா மனிதர்களையும் போலவே கவிஞனும் பல்வேறு வகையான வாழ்க்கை அனுபவங்களுக்கு உள்ளாகின்றான்.

சமூகத்தின் பிரதிநிதியாக இருப்பதன் அடையாளம் அவன் தன் இருத்தலுக்கு பிரக்ஞையாக இருப்பதன் அடையாளமே.

சுல்பிகா அவர்களின் கவிதைத் தொகுப்பை நோக்கின் அதிகமான கவிதைகள் மேற்கூறிய கூற்றை உண்மைப்படுத்துகின்றன. இன்றைய ஈழத்தின் நாளாந்த வாழ்வின் அனுபவத்தில் இருந்தே இவை பிரசவித்தன என்று கூறலாம். ஈழத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக ஆயுதம் தான் அதிகாரத்தில் உள்ளது. ஆயுதம் அதிகாரத்தில் இருக்கும் போது மானுடம் விலங்கிடப்படுவதைத் தவிர வேறு ஒன்றும் நடக்க முடியாது. போர் இரவுகளின் சாட்சிகள் என்ற கவிதையில்

*இரவின் தொடக்கம்*
*போர் யுகத்தின் ஆரம்பம்*
*இரும்புப் பறவைகள் வானில் பறக்க*
*பதுங்கு குழிகளில் மனிதன் தவிக்க*
*தொடங்கிறது அந்த இரவு*
*மானிடத்தின் மரணத்திற்கு*
*இரத்தம் தோய்ந்த இந்த*
*இரவுகள் சாட்சி*

என்ற கவிதை வரிகளில் இன்றைய இரவுகளே எம் நினைவுகளுக்கு வருகின்றன. சுல்பிகா சமூகத்தின் சாதாரண பிரச்சினைகளையும் யதார்த்த வாழ்வினையுமே தன் கவிதை வரிகளில் காட்டியுள்ளார்.

விலங்கிடப்பட்ட மானுடம் இரு நிலை நோக்குடையது. ஒன்று. இன ஆதிக்க வெறியில் மானுடம் விலங்கிடப்பட்டது. ,மற்றையது; ஆணாதிக்க மேற்கிளம்புகையினால் பெண்கள் விலங்கிடப்பட்டது. இவ்விரு நோக்கில் இத் தொகுப்பின் இருபது கவிதைகளையும் நோக்கலாம்.

மனித சமூகம் நெடுங்காலமாக ஆணாதிக்க சமூகமாகவே இருந்து வந்துள்ளது. எல்லா நிலைகளிலும் ஆணாதிக்க கருத்து நிலையே மேற் கிளம்பியுள்ளது. ஆனால் நவீன சமூகத்தில் பெண்களும் கல்வியறிவு பெற்று சமூக வாழ்வில் முக்கியத்துவம் பெற்றனர். அதனால் பெண்களின் இருத்தல் முதன்மை பெற வேண்டி ஏற்பட்டது. இவ்வடிப்படையில் பெண்ணிலைச்சிந்தனை பெண் விடுதலை பெண்களின் தனித்துவக் கூறுகள் என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

இவரின் அரைவாசிக் கவிதைகள் ஆணாதிக்கத்தினால் விலக்கிடப்பட்ட மானுடத்தை விடுதலைப் பெறச் செய்தல் என்ற வகையில் அமைந்துள்ளன. குறிப்பாக காணாமல் போகும் பெண்களும் மண்ணின் மாந்தர்களும் எனும் கவிதையில்

*''நாமிந்த உலகிற்கு*
*நகரத்துளலவா வந்து பிறந்துள்ளோம்*
*சாகாத பிணங்களாய்*
*சதா வாழவ வந்தோம்.''*

*''இல்லவேயில்லை*
*புதை குழியிலிருந்து*
*புதிதாய்ப் பிறப்போம்*
*புதுமைகள் செய்வோம்''*
*''பலவீனர்களல்ல*
*பலத்தின் அடிப்படையே நாம்*
*நாமே இம் மண்ணின் மாந்தர்கள்*
*என்பதைப் பிரகடனம் செய்வோம்''*

இவ் வரிகளில் பெண்கள் விலங்கிடப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் விடுதலை அவர்களின் எழுச்சியிலே தானுண்டு என்றும் காட்டுகிறார் சுல்பிகா.

இன்னும் சமூகத்தில் பெண் தவறு செய்தால் அது அவளால் மட்டும் செய்யப்படுவதில்லை அக் குற்றத்திற்கும் ஆண்கள் காரணமாக யுள்ளனர் என்பதையும் கவிஞர் யதார்த்த பூர்வமாகக் காட்டியுள்ளார்.

''இது ஓர் மென் உணர்வு'' என்ற கவிதையில்

''என் முளைக் கலங்களிலும் பார்க்க
இங்கு பெறுமதி மிக்க அதை
என் உணர்வுகளை இவ்வுடன்
இழக்கும் வரை காப்பேன்
அது எனது சிருஷ்டி
முடிந்தால்
அதற்கப்பாலும்
அதை என்னால் காக்கவும் முடியும்''

என்ற வரிகளில் பெண்கள் வெறும் சடமல்ல, அவர்கள் ஆயிரம் மாயிரம் உணர்வுகளுடன் தோன்றியவர்கள் என்ற உண்மையைக் காட்டியுள்ளார். சுல்பிகாவின் கவிதைகளில் விஞ்ஞான உளவியல் சொல்லாட்சிகள் அதிகம் காணப்படுகின்றன. எனக்கோர் இடம் வேண்டும் எனும்கவிதையில்

*''கசைகள் குருதி என்பு*
*நரம்பு மன வெழுச்சிகள் கொண்ட*
*இவ்வுடல் நம்மை விட்டு .......*

என்பதில் அவரின் விஞ்ஞான உளவியல் புலமை வெளிப்பட்டு நிற்கின்றது. பாவம் மானுடன் என்ற கவிதையில் விஞ்ஞான வளர்ச்சியினால் சடம் போன்று மாறி விட்டான் என்பதைக் காட்ட

*''இப்போதெல்லாம்*
*புவிக்கிரகத்தில் பேனா பேப்பர்*
*குத்தும் முத்திரை*
*தொலை பேசி*
*தொடர்பு கொள்ள*
*நகர்வதற்கு வாகனம்*
*இவை கொண்ட மானுடச்சடம்*
*ஒன்று உருவாகிவருகிறது''*

என்று கூறும் போது இன்று மனிதனை மனிதனாக இவ்வுலகம் பார்க்கவில்லை என்பதையே காட்டுகின்றார். எனினும் சுல்பிகாவின் இக் கவிதைத் தொகுப்பின் பெண் நிலைச் சிந்தனை சார்பான கவிதைகளே அதிகம். வேகம் கொண்ட பெண் விடுதலைத் தன்மை காணப்படுகின்ற தெனலாம்.

*''இறந்தவர் அல்லர் நாம்*
*இதயம் துடிக்கும் ஏழைப் பெண்கள்*
*மண்ணின் குழந்தைகள்*
*மானிடப் பெண்கள் நாம்*
*இனியும் சகியோம்.......*
*வென்று வாழ்த்திட*
*இன்று பிறந்தோம் ''*

எனும் போது வேகம் கொண்ட எழுச்சிக்குரலாக அது தகிக்கின்றது.

எப்படியாயினும் பெண் கவிஞர்களின் கவிதைத்தொகுப்பு வெளிவருவது அதுவும் முஸ்லிம் பெண் கவிஞரின் கவிதைகள் தொகுப்பாக வருதல் மிகவும் வர வேற்கப்புட வேண்டிய தொன்றாகும். சுல்பிகாவின் கவிதை ஆற்றல் இன்னும் வளர்ந்திட வேண்டும் என்பதே ஏமது அவா.


**சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்.**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**
**மட்டக்களப்பு.**

# வரவு! வரவு!

தமிழ் நூல் வெளியீடும், விநியோகமும்

தமிழ் நூல் வெளியீட்டு-விநியோக அமையகம் (Tamil Publication and Distribution Network) எனும் ஒரு அமைப்பானது இலங்கையில் நூல்கள் பலவற்றை வெளியிட்டு விநியோகித்து வருகிறது. இலங்கையில் தேசிய கலை இலக்கியப் பேரவை, புதிய பூமி வெளியீட்டகம் இவற்றுடன் தமிழ் நாட்டிலுள்ள சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனமும் இணைந்து இலங்கைத் தமிழ் நூல்களை வெளியிட்டு விநியோகித்து வருகின்றது.

இவ்வமையமானது துரிதமான, பரவலான சீரான நூல் விநியோகக் கட்டமைப்பை உருவாக்க விரும்புகிறது. எழுத்தாளர், வெளியீட்டகம் வாசகர் மத்தியிலான முக்கூட்டு உறவினையே இவ்வமையம் பேண விரும்புகின்றது. இதனுடாக புத்தகப்பண்டாடொன்று வளர்கின்றது. இவ்வருடத்திற்குரிய பல நூல்களை இவ்வமையமானது வெளியிட்டுள்ளது. அவற்றில் சிலவற்றின் குறிப்புகளைக் கீழே தருகின்றோம்.






## சட்டநாதன் கதைகள்

- க. சட்டநாதன்

இலங்கையின் சிறப்பி டம் பெற்ற சிறுகதை ஆசிரியரான க. சட்டநாதனின் பதின்மூன்று சிறு கதை கள் தொகுக்கப்பட்டுள்ளது. நல்லூர் புராதன கட்ட முகப்பினை அட்டைப் படமாகத் தாங்கிய இச்சிறுகதைத் தொகுப்பு நூல் இலங்கையின் சிறந்த சிறுகதை நூலாகக் கொள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை.




## கதை முடியுமா?

- க. தணிகாசலம்

இதுவும் சிறுகதைத் தொகுதியே ஏற்கெனவே தணிகாசலத்தின் பிரம்படி சிறுகதைத் தொகுப்பு வெளியாகி இருந்தது. அன்றாட வாழ்வின் எளிமையான நிகழ்வுகள் மூலமும் அந்த நிகழ்வுகள் மனித மனங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களின் மூலமும் மிகவும் சிக்கலான ஒரு வாழ்க்கைச் சூழலைத் தெளிவுபடச் சித்திரிப்பது இவரது கதைகளின் சிறப்பான பண்பு என பேரா. சிவசேகரம் கூறுகிறார்.



## என்னுடையதும் அம்மாவினுடையதும்

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் திருச் செந்தி நாதனின் இரண்டாவது தொகுதி இது. ஏற்கனவே வெட்டுமுகம் எனும் சிறுகதைத் தொகுதி தேசிய கலை இலக்கியப் பேரவையால் வெளியிடப்பட்டு இருந்தது. இந்த ம்ண்ணில் நடைபெறும் வாழ்க்கைச் சிதறல்களுக்கு இதற்குள் நின்று கொண்டே முகங்கொடுக்க வேண்டும் என்ற ஒரு எண்ணத்துணிவு திருச்செந்திநாதனிடத்துத் துல்லியமாகக் காணப்படுகின்றது. என்று பேரா. சிவத்தம்பி குறிப்பிடுகின்றார்.




## பாப்பாப் பாடங்கள்

- கல்வயல் வே. குமாரசாமி
- படங்கள் கலைச்செல்வன்

நடப்பியல் நுணுக்கமும் நம்பகத் தன்மையும் கவிஞர் குமாரசாமியின் பாடல்களில் உள்ள சிறப்பியல்புகளாகும். பாப்பாக்களின் அனுபவத்தோடு மனித உறவாடலின் பாற்படும் அனுபவங்களையும் இணைத்துக் காட்டுகின்றார் கவிஞர். இவரது பாடல்கள் குழந்தைத் தமிழ்ப்பாடல் இலக்கியத்துக்கும் ஓர் உயரிய முன்னுதாரணமாகவும் சிறந்த பங்களிப்பாகவும் திகழ்கின்றது. என்கிறார் கவிஞர் முருகையன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வாழ்தல் என்பது...

கிட்டத்தட்ட ஐந்து வருடங்களுக்குப்பின் அண்ணாவைப் பார்த்தபோது ஒரு கணம் மனம் அறுந்து மீண்டது. நிறைய மாறியிருந்தான். எப்போதும் சிரித்தபடியே இருக்கும் தன்மையெல்லாம் தொலைந்து..... இறப்பதற்கு முன் எலும்புந்தோலுமாய், சொறியும் சிரங்குமாய் அழுந்திக் கிடந்த அவனுடைய பப்பியைப் போல் அவனும், ஒளிமின்னும் கண்ணில் ஒரு சிறு பொறி கூடத் தோன்றியதாய் தெரியவில்லை. அவனைப் பார்த்த கணமே விம்மி வந்த அழுகையை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. என்னடா இது சின்னப்பிள்ளை மாதிரி குளறிக்கொண்டு, ஏ.எல் படிக்கிற பெடியன், கவிதையெல்லம் எழுதிற பெடியன், இதுக்குப் போய் குளறிக்கொண்டு....'' அவன் என்னைத் தோளிலிருந்து நிமிர்த்திய போது மெதுவாய் நிமிர்ந்து பார்த்தேன். அவனையும் மீறி கன்னத்தில் கண்ணீரின் ஒழுகல். முதுகைத் தடவிக் கொடுத்தான்.

''அண்ணாச்சி வந்திற்றான் தானே இன்னும் என்னத்துக்கு குழறுகிறாய்'' பேச்சும் மிக நிதானமாய், சொற்களை எடுத்துத்துக் கோர்த்தது போல். முன்பெல்லாம் அவன் அப்படியிருக்கவில்லை. எப்போதும் எதையாவது பேசிக்கொண்டே இருப்பான். சம்பந்த சம்பந்தமில்லாமல் மூத்த அண்ணாமாருடன் விவாதித்துக் கொண்டிருப்பான். தேவையில்லாமல் பேச்சு நீண்டு போகும்.

''கனக்க அடிச்சவங்களோ'' விம்மி விம்மிக் கேட்டேன்.

''போடா மடயா ஆர்ரா சொன்னது எனக்கடிச்சதெண்டு. எனக்கொரு, அடியும் அடிக்கேல்ல'' அவனையும் அறியாமல் அவன் கைகள் நெஞ்சில் நீண்ட கோடாய்ப் புரையோடிப் போயிருந்த காயத்தை ஒருதரம் தொட்டு மீண்டது. நான் உற்றுப் பார்த்தேன். நெஞ்சில் மட்டுமில்லை, இன்னும் பல இடங்களில் வடுக்கள். ஒருதரம் மிகுந்த கோபத்தில் அவன் ஆலம் விழுதினால் விளாசிய போது என் அடித் தொடையில் ரெத்தம் தெறிக்க தோல் கிழிந்த காயம் போல.

''ஏன் அண்ணாச்சி பொய் சொல்றீங்க. இந்தா காயமெல்லாம் இருக்கு''

''சீச்சீ, அது அடிச்ச காயம் இல்லை. அங்க இருக்கக்குள்ள வேலை செய்த நேரம் ஒருக்கா இடறி விழுந்திற்றன்''

அவன் எதற்காகவோ பொய் சொல்கிறான் என்பது புரிந்தது. அதன் பின் அதைப்பற்றி நான் எதுவும் பேசவில்லை. விம்மலுடன் அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். கருநீல நிறமும், பழுப்பு நிறமும் கலந்தது போன்ற ஒரு கலரில் ஒரு படலம் அவன் இடக் கண்ணிலிருந்து விழுந்து விடுவது போல் தொங்கிக் கொண்டிருந்தது. அவன் இடக்கண் பார்வையற்றது என்பதைக் கூட சில நாட்களுக்கு முன்தான் நான் தெரிந்து கொண்டேன். முன்பெல்லாம் அவன் [illegible] தண்டிக்கும் போதோ 'குருட்டுக் கண்ணா, குருட்டுக்கண்ணா' என்று மனதிற்குள் திட்டுவதால் தான் என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வேன். என்னைப் பக்கத்தில் இருத்தி வைத்து அவன் கணிதம் சொல்லித் தருகையில் மொக்குத்தனமான என் விடைகளுக்கு குட்டுவைக்கும் போது 'குருட்டுக் கண்ணன், இடியுழுந்து போவான்' என்று பெரிதாய்க் கத்திவிட்டு ஓடிய நாட்களுமுண்டு. இந்த நேரங்களில் அவன் முகம் எப்படிவாடிப் போயிருக்கும் என்று இப்போதும் என்னால் உருக் கொண்டு வ்ரமுடியவில்லை.

உண்மையில் அவன் இடக்கண் பார்வையற்றது என்று தெரிந்திருந்தால் அப்போது அவன் மனதைக் காயப்படுத்தியிருக்க மாட்டேன் என்றே நம்புகின்றேன். என்னதான் அவன் எனக்கு எதிரிபோல் தோற்றமளித்து அவனை நான் வாடா, போடா என்று அழைத்தாலும், எல்லோரையும் விட அவனில் தான் கூடிய பாசம். அவனை 'அண்ணாச்சி' என்று மரியாதை கொடுத்துக் கூப்பிடவேண்டும் என்று அப்பா என்னிடம் அடிக்கடி சொல்வார். முக்கியமாய் அவன் கண்ணைப்பற்றி எதுவும் சொல்லக்கூடாது என்று கொஞ்சம் கண்டிப்பாய் சொல்வார். ஆனால் அண்ணா அதுபற்றி என்னிடம் எதுவுமே சொன்னதில்லை. 'நான் உனக்கு அண்ணன்' என்று கூட ஒரு தரமும் சொன்னதில்லை. (ஒருவேளை அப்போது அவனை நான் ஒருதரமாவது அண்ணாச்சியென்று கூப்பிட்டிருந்தால் வலுவாய் சந்தோஷப் பட்டிருப்பானோ தெரியாது) என்னைத் தண்டிக்கும் ஒவ்வொரு சமயங்களிலும், மூக்கால் வழிந்தபடியிருக்கும் என்னைக் கூட்டிச்சொன்று, குளிக்கவைத்து (குளிக்கும் போது புத்தி சொல்தல் நடக்கும்) துடைத்து, தலைவீசி, பவுடர் போட்டு சைக்கிளில் உட்கார வைத்து (அப்போது அவனிடம் அழகான ஒரு 'ஏசியா' சைக்கிள் இருந்தது. நீலக்கலர். அதற்கு என்ன நேர்ந்தது என்பதும் இப்போது சரியாக ஞாபகமில்லை) கோயிலுக்கு அல்லது விளையாட்டுப் பார்க்க கூட்டிப் போவான். மழைக்கால மென்றால், தண்ணீர் கரை புரண்டு ஓடி கடலுடன் கலக்கும் காட்சியைப் பார்க்க முகத்து வாரத்திற்குக் கூட்டிப் போவான். எனக்கு நேரே மூத்தவனுக்கு இதுபற்றி மிகுந்த பொறாமை, அல்லது வருத்தம். தன்னை ஒருபோதும் சைக்கிளில் ஏற்றுவதில்லை என்றும் தன்னை எல்லோரும் கழித்து நடப்பதாயும் அப்பாவிடம் அடிக்கடி முறைப்பாடு.

இந்தச் சிணுங்கல்களெல்லாம் அண்ணாவின் காதில் ஏறுவதில்லை. ஏனோ தெரியவில்லை, அவனுக்கு என்னைத் தவிர வேறு யாரையும் சைக்கிளில் உட்கார வைப்பதில் அதிகம் விருப்பமில்லை. ஆனாலொன்று, அண்ணாவின் சைக்கிளில் நான் ஏறுவதாயிருந்தால் மிகவும் சுத்தமாய் இருக்க வேண்டும். எந்தக் கெட்ட வாடையும் என்னிலிருந்து வீசக்கூடாது. எங்கள் குடும்பத்திலேயே அண்ணாதான் மிகவும் சுத்தமான பேர்வழி. ஊனப்பட்ட தன் கண்ணை மறைப்பதற்காக அநேகமாய் ஒரு கறுப்புக் கண்ணாடியை மாட்டிக் கொள்வான். அவனின் கூர்மூக்குக்கு அது இன்னும் எடுப்பாயிருக்கும். அண்ணாவைச் சுற்றி எப்போதுமே 'சென்ற்' வாசனை.

'மன்மதக்குஞ்சு, மன்மதக் குஞ்சு' என்று மூத்தண்ணமார் இருவரும் அவனைக் கேலி பண்ணுவார்கள். ''அவன்ட வயதில் நீங்கள் இதை விட மோசம்'' என்று அப்பா அவர்களின் முகங்களைக் கறுக்க வைப்பார். எப்போதும் எடுப்பாய் இருக்க வேண்டும் என்பது தான் அண்ணாவின் எண்ணம். அவனுடன் சைக்கிளில் போகும் போதே பல தடவைகள் ஒன்றைக் கவனித்திருக்கின்றேன். வழியில் யாரேனும் பருவப் பெண்கள் போனால் அண்ணாவின் சைக்கிள் வெட்டி வெட்டிப் போகும். மணி தேவையில்லாமல் ஒலிக்கும். ஒரு ஜேசுதாஸ் அல்லது. எஸ்.பி.அழகாகச் செத்துக் கொண்டிருப்பார். சுஜி மச்சாள் போனால் கேட்கத் தேவையில்லை. சீட்டிவேறு. மச்சாளை இலக்காகக் கொண்டு சைக்கிளை உழக்கிய சமயங்களில் அவனுடன் நானும் இருந்திருக்கின்றேன். நெஞ்சில் புத்தகத்தை அணைத்தபடி முகத்தைச் சரித்து அண்ணாவைக் கண்ணால் பார்ப்பாள். இதழ்கள் மெல்லப்பிரியும். பிறகு தோழிகளுடன் உரத்துக் கதைத்துச் சிரித்தபடி. சைக்கிள் காற்றில் பறக்கும்.'' ஹேண்டிலை'' நான் கெட்டியாய் பிடிக்க வேண்டி வரும். அவன் முகம் இறுகிப் போன் நாள் வரைக்கும் இப்படித்தான் வாழ்க்கை கழிந்து போயிற்று.

அதன் பின் அப்பா நீங்கலாக அண்ணாவின் போக்கு யாருக்கும் பிடிக்கவில்லை. அண்ணாவை வீட்டில் காண்பது அரிதாய்ப்போயிற்று. யாழ்ப்பாணம் சென்று படித்து வந்த 'நோட்ஸெல்லாம்' புழுதி படியத் தொடங்கிற்று.

அவன் வீட்டுக்கு வரும் போதெல்லாம் அம்மாவின் புறுபுறுப்புகள் அதிகமாயின. அண்ணாவின் நிமித்தம் அம்மாவுக்கு அப்பாவுக்கும் அடிக்கடி சண்டை மூளும். மூத்தண்ணர்மார் இருவரும் அம்மாவுக்கு பலத்த பின்னணி. தான் மிகக் கஷ்டப்பட்டுச் சேமித்தனுப்பிய பணத்தில் படித்த நோட்சுகளை கறையான் தின்பதில் ரெண்டாவதண்ணாவுக்கு மிகுந்த வருத்தம். ''அவன அங்க படிக்க அனுப்பியிருக்கக்கூடா, அங்க போய்த்தான் அவனிப்பிடிக் கெட்டுப் போய்த்தான்'' என்று அடிக்கடி குற்றச்சாட்டு.

எனக்கொன்றும் புரிந்திருக்கவில்லை. அண்ணா கெட்டுப் போனான் என்று சொல்லப் பட்டது வியப்பாய் இருந்தது. எப்படிக் கெட்டுப் போனான் என்று யோசித்துப் பார்த்தேன். யோசித்து பார்க்கையில் அண்ணாவின் மாற்றங்கள் தான் தெரிந்தன.

அவன் என்னைக் கவனிப்பதைக்கூட அடியோடு மறந்திருந்தான். நான் எத்தனை நாள் பள்ளிக்கூடம் போகாவிட்டாலும் அதைப் பற்றியெல்லாம் ஒரு கேள்வியில்லை. என்னை எதற்கும் கண்டிப்பதில்லை. தண்டிப்பதில்லை. எப்போதாவது ஒரு எண்ணம் வந்தால் வீட்டில் சாப்பிடுவான்.

குசினிக்குள் அழைத்துச் சென்று அம்மா புறுபுறுத்த படி சோறு போடுவாள். வெளியே சாய்மனக்கதிரையில் படுத்துக் கிடக்கும் அப்பா ஒரு கனைப்பு கனைக்க அம்மாவின் சத்தம் அடங்கிப் போகும். அண்ணா சாப்பிடுகையில், வீட்டில் எல்லோரும் குசினிக் கதவருகில் நின்று கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். சின்னக்காவின் சட்டையைப் பிடித்தபடி நானும் போய் நிற்பேன். சின்னக்காவின் கண்கள் கலங்கியது போலிருக்கும்.

''என்னடா இது, பால்குடிக்கிற பிள்ள மாதிரி அக்காட சட்டயப் புடிச்சுக் கொண்டு, இஞ்ச வாடா'' அண்ணா என்னையழைத்துச் சோற்றைப் பிசைந்து ஊட்டிவிடுவான். அது புதுப் பழக்கம். முன்பு, எல்லாம் செய்ததுண்டு. சோறு ஊட்டிவிடுவதில்லை. எனக்குப் புத்தி தெரியாத வயதில் செய்திருப்பானோ தெரியாது. அண்ணாக்குக் கிட்டே செல்லும்போது ஒரு வாடை வீசும். மூக்கைத் தொடுவேன். அண்ணாவின் முகம் இருண்டு போகும்.



www.tamilarangam.net



# வாழ்தல் என்பது...



## திருக்கோவில் கவியுவன்

அண்ணா, சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது வெளியே ஒழுங்கையில் வினோதமான சில சத்தங்கள் கேட்கும். பரபரப்பாவான். சாப்பாடு அப்படியே இருக்க கையை அவசரமாக அலம்பிக் கொண்டு எழுவான்.

''கோதாரி பிடிச்சதுகள், வந்திற்றுதுகள்'' அம்மா வாய்க்குள் முணுமுணுப்பாள். திரும்பி அம்மாவை நோக்கி ஒரு தீர்க்கமான பார்வை. வெளியே வந்து பேப்பர் படித்துக் கொணடிருக்கும் அப்பாவின் முன் தயங்கியபடியே நிற்பான். அப்பா, பேப்பரை தாழ்த்தி கால் மாட்டில் நிற்கும் அண்ணாவைப் பார்ப்பார். போ என்பது போல கண்கள் சுழலும். அண்ணா இருளில் பாய்வான். அப்பாவின் கண்கள் பேப்பரில் போகும். உள்ளே ஒரு குட்டி மந்திராலோசனை ரகசியமாய் நடக்கும்.

''அப்பாட சப்போட்டாலதான் அவனிப்பிடி''

''மற்றாக்களுக்கு இல்லாத அக்கறை அவருக்கென்னத் துக்கு''

''எங்க வேலையும் போயுடுமோ எண்டு பயமாயிருக்கு''

நான் குசினியினுள் நுழையும்போது இப்படி ஏதாவது ஒரு வசனம் என் காதில் விழும்.

அம்மா தீராத கோபத்தோடு அண்ணாவின் சாப்பாட்டுக் கோப்பையில் மிச்சமிருப்பதை கொட்டிவிட்டு கோப்பையை தண்ணிச் சட்டிக்குள் எறிவாள். மூத்தண்ணாவின் பிள்ளைகள் கொட்டாவி விட்டபடியிருக்கும். அண்ணி யாருக்கும் தெரியாமல் மூத்தண்ணாவைச் சுரண்டிக் கொண்டிருப்பாள்.

''சரியம்மா அவன்ட கதய விடுவம். அந்தக் கழுத எப்படிப் போனால்தான் என்ன''

அம்மாவின் பதிலுக்குக் காத்திராமல் மூத்தண்ண எழும்ப, அண்ணி மடியில் படுத்துறங்கும் செல்வியைத் தட்டி எழுப்பிக் கொண்டு அவரின் பின்னால் அவர்களின் அறைக்கு போவாள். அடுத்தண்ணாவை சின்னண்ணி அழைக்கும் சத்தம் அவர்களின் அறையிலிருந்து கேட்கும். அவன் மெதுவாக நழுவிப் போவான். எல்லோரும் கழன்று போக நானும் அம்மாவும் குசினிக்குள் தனித்தபடி.

''டேய் சின்னவா அப்பாவைச் சாப்பிடக் கூப்பிடு''

அப்பா பேப்பரை மடித்து வைத்துவிட்டு எழுந்து வருவார். அம்மா அப்பாவிற்குச் சோற்றை போட்டபடி எதையேனும் கதைக்கத் தொடங்குவாள். கதையெடுக்க முன் என்னை ஒருதரம் பார்ப்பாள்.

''டேய் சின்னவா நித்திர வரல்லயோ''

''வருது''

''அப்ப இங்க நிண்டு கொண்டென்ன செய்கிறாய், போய் நித்திரையைக் கொள்ளன்''

''தனியப்படுக்கப் பயமாயிருக்கம்மா''

''ஏன் சின்னண்ணையோடை போய்ப் படன்''

''அவன் உழுத்துவான்''

''அப்ப உன்ர கொண்ணன் போகக்குள்ள இழுத்துப் பிடிச்சிருக்கலாமே'' அம்மா எரிந்து விழுவாள். அப்பா முறைத்துப் பார்க்க அந்த இடம் மௌனமாகும்.

''இங்கேப்பா, இங்கேப்பா'' எச்சரிக்கையாய் அப்பாவை விழிப்பாள்.

''என்ன''

''இவள் அண்ணன்ட பெடிச்சி நல்ல குணமாம் எண்டு சொல்லிறாங்கள். ஆள் நல்ல வடிவும்தான்''

''அதுக்கிப்ப என்ன''

''இல்ல, இவன் கணேசனுக்கு ஒருக்காக் கேட்டுப் பார்த்தமெண்டால்...'

''ஏன், அவனுன்னட்டக் கலியாணம் செய்து வைக்கச் சொல்லிக் கேட்டவனே''

''அதுக்கில்லையப்பா, அவனுக்கொரு கால்கட்டைப் போட்டமெண்டால் பிறகு மத்த வழிகள்ள போகமாட்டான். அந்தப் பெடிச்சிக்கும் அவனில ஒரு விருப்பம் போலதான் கிடக்கு''

''அவன் எந்த வழியில போகோணுமெண்டு அவனுக்குத் தெரியும். நீ பேசாமல் உன்ர அலுவலப்பாரு'' அப்பா கோபமாய் கையை உதறிக் கொண்டு அழுவார். மூச்சு வாங்கும். இருமத் தொடங்குவார். துப்பல்ச் சிரட்டையை எடுத்துக் கொண்டு பிடிப்பேன்.

''டேய் சின்னவா நீ ஆம்பிளப் பெடியனெல்லோ, என்ன பயம். போய்த்தனிய படு பார்ப்பம், பயமாம் பயம்''

அப்பா என்னைக் கண்டித்ததன் அர்த்தத்தைப் புரிய வெகுகாலம் தேவைப்பட்டிருந்தது.

''இப்படித்தான் அண்ணனும் தம்பியும் ஆளையாள் பார்த்துக் கொண்டு குளறிக் கொண்டிருங்கோ, அங்க பார்க்க வந்தாக்கள் எல்லாம் வெளியில காத்துக் கொண்டு நிக்கட்டும்'' அக்காவின் குரலில் என் நினைவுகள் கலைந்தன. அண்ணாவைப் பார்த்தேன்.

அவன் பாழ்விழுந்து போய்க்கிடக்கும் எங்கள் பழைய வளவையும் அதற்குள் இடிந்த குறையில் கிடக்கும் எங்கள் பெரிய வீட்டையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். வளவு முழுவதையும் அடம்பன் கொடி ஆக்கிரமித்திருந்தது. அடம்பன் விட்டுக் கொடுத்த இடங்களிலுள்ள புற்களை மேய்ந்தபடி நாலைந்து மாடுகள். நெற்றியில் வெள்ளைப் பொட்டுடன் நின்ற சிவலை எங்களுடையது. இல்லை எங்களுடையதாயிருந்தது. அப்பாவின் வருத்தம் சாப்பிட்ட கடைசிச் சொத்து.

''ஆருக்கு சின்னவா வளவ வித்தனீங்க''

''விதானையாரப்பச்சிக்கு''

''அப்பாட சவத்தயும் இந்தக் குடிசையிலதானோ வெச்சிருந்த''

''இல்லண்ணாச்சி, அப்பா செத்த பிறகுதான் இங்க வந்தம். அதுக்குப் பிறகுதான் அண்ணாச்சிமாரும் தனியப் போய்த் தாங்க- படிக்கிறத்துக்காக வண்டி நானும் மூத்தண்ணாட்டப் போயித்தன்''

''சின்னக்காவுக்கு எப்ப கலியாணம் நடந்தது''?

''அதுகும் அப்பா செத்த பிறகுதான்''

''இப்படிக் குடிக்கிற ஆள் தானோ கிடைச்ச''

''ஓ! இஞ்ச உழச்சிக் கொட்டிக் கிடக்கிற சீதனத்துக்கு பெரிய உத்தியோகக்காரன்தான் வரப் போகிறான்'' உள்ள சலிப்பையெல்லாம் அக்கா கொட்டித் தீர்த்தாள்.

''டேய் உன்னப் பாக்கிறதுக்கு ஆக்கள் வந்திருக்கென்ன நீ இஞ்ச கதைச்சுக் கொண்டிருக்கன்ன''. அம்மா பேச்சின் திசையை மாற்றினாள். அண்ணாவும் நானும் அலுப்புடன் எழுந்தோம். வெளியில் ஒரு கூட்டம். இறந்து மீண்டவனைப் பார்க்கும் வியப்பு கண்களில். கிட்டச் செல்ல அண்ணா கூச்சப்பட்டான். தோளில் குழந்தையுடன் சுகி மச்சாளும் நின்றாள். மச்சாளைப் பார்த்து அண்ணா தடுமாறுவது புரிந்தது.

''மச்சான் உன்னப் பாப்பமெண்டு நாங்க கனவிலயும் நினைக்கல்லடா?'' அண்ணாவின் பால்ய சினேகிதன் ஒருத்தன் மனம் கசிந்து சொன்னான். (அவன் தோளிலும் அழகானதோர் குழந்தை) எல்லோர் கண்களும் மெதுவாய்க் கசிந்தபடி.

''எப்படி எல்லோரும் சுகமாயிருக்க....'' சொல்லி முடிக்கு முன் அண்ணா இருமத் தொடங்கினான். கை நெஞ்சை இறுக்கப்பொத்த அப்படியே சுருண்டு விழுந்தான். ஒவ்வொரு இருமலுக்கும் நெஞ்சு எகிறி எகிறி மீண்டது. வாயில் நுரையும் இரத்தமும் ஒன்றும் தெரியாது கொஞ்ச நேரம் மலைத்து நின்றேன். உணர்வு திரும்ப அண்ணாவை மடியினில் போட்டேன். இருமும் போது அவனை அமுக்கிப் பிடிக்க இயலாது போயிற்று. கொஞ்சம் கொஞ்சமாய் இருமல் அடங்க அண்ணா மெதுவாய்க் கண்களைத் திறந்தான்.

''பாடையில போறவங்கள் என்னமாப் போட்டு அடிச்சி வச்சிருக்காங்கள்'' முகம் தெரியாத யாரையோ திட்டிக் கொண்டு அக்கா ஓடி வந்தாள். பின்னால் அம்மா. வந்திருந்தவர்களிடையே மெல்லிய சலசலப்பு. ஆளாளுக்கு வாய்த்தபடி அண்ணாவைப் பற்றி வதந்திகள் கிளம்பிற்று.

''காக்கை வலிப்பாம்''

''இல்லயாம் பெடியன் நல்ல அடிபட்டுத்தானாம், அது ஒரு புது வருத்தமாம். ஆள் இன்னங்கொஞ்ச நாளைக்குத் தானாம்''

''அதெல்லாமில்லை, அது மற்றதிரவேல. கடிச்ச உடனேயே செத்திருக்க வேண்டியது. இப்பத்தான் வேலையக் காட்டுதுபோல''

ஊரில் பொழுது போகாத நேரங்களில் எடுத்துப்போட அண்ணா ஒரு தனிக்கதையானான்.

★ ★ ★

உச்சி வெயில் பரந்து விரிந்த மாமரத்துக்குக் கீழே மேசையைப் போட்டுக் கொண்டு படித்துக் கொண்டிருந்தேன். பரீட்சைக்கு இன்னும் ஐந்தே மாதங்கள். (அண்ணா மீண்டு வந்து ஆறுமாதங்கள்) மேசையின் பெரும் பகுதியை நிரப்பியிருந்தது அண்ணாவின் யாழ்ப்பாணத்து நோட்சுகள். யாரோ பின்னால் நிற்கும் அசைவு.

''வாங்கண்ணாச்சி, என்ன படிக்க வருவன் எண்டு சொன்னீங்கள் ரெண்டு மூண்டு நாளா இங்காலப் பக்கமே காணயில்ல?

இந்த எறியக் கணக்க எப்படிச் செய்யிறதெண்டே தெரியாமல் கிடக்கு ஒரு ஐடியாவும் வரமாட்டனெண்டுது.''

வாங்கிப் பார்த்தான். சில நிமிடங்களில் விடை. எனக்கு வெட்கமாயிருந்தது.

''அப்ப உங்களுக்கு ''ரச்'' விட்டுப்போகல்லத்தானே நீங்களும் வடிவா இந்த முறை எக்ஸாம் எடுக்கலாம்''

''பாப்பம், இருந்தால் எடுப்பம்'' வேண்டா வெறுப்பாய் பதில் வந்தது.

''சரி சரி, படிக்கிற உன்னக் குழப்பல்ல, நான் போறன் பின்னேரம் ஒரிடமும் போகாமல் நில்லு; நாம ஒரிடத்த போகோணும்'' படலையைச் சத்தமாய் சாத்திவிட்டு விரைந்து சென்றான்.

சொன்ன படியே கருக்கலுக்குச் சற்றுமுன் வந்தான்.

யாரோவின் ''லுமாலா'' சைக்கிள், அதே நீலக்கலர். ஓடிச்சென்று 'வாரில்'ஏறிக் கொண்டேன். எதுவும் கேட்கவில்லை. அவனும் சொல்லவில்லை. சைக்கிளை உழக்க மூச்சு வாங்கினான். நான் மாறி உழக்கியிருக்கலாம். எனக்குச் சந்தோஷமாயிருந்தது. நீண்ட காலத்தின் பின் அண்ணாவின் சைக்கிளில் உட்கார்ந்து சென்றது சின்ன வயதை ஞாபகப்படுத்தியது. அப்பாவை ஞாபகப் படுத்தியது. ஆளுக்கொரு திசையில் பிரிந்து சென்ற எங்கள் முழுக்குடும்பமுமே நிலவில் வாசலில் கூடியிருப்பதும் , அம்மம்மா கதை சொல்வதும், ஞாபகம் வந்தது. அண்ணாவின் மடிக்குள் சுருண்டு கிடக்கும் பப்பியைப் பற்றியும் ஞாபகம் வந்தது. அந்த ஞாபகங்கள் என்னைச் சந்தோசப்படுத்தின.

என்னை உட்கார வைத்து உழக்குவது அண்ணாவுக்கு அதிகம் கஸ்டமாயிருக்காது என்று எண்ண முயன்றேன்.

சைக்கிள் அநேகமாக ஊரின் எல்லா வீதிகளிலும் சென்றிருக்கும். கடைசியில் கடற்கரை பக்கம் வந்தபோது கனமான எதிர்காத்து. என் தலைமுடி கலைந்தது. அண்ணா பெரிதாய் மூச்சு வாங்கினான். என்றுமேயில்லாதபடி அவன் வாயிலிருந்து சாராய நெடி. தலையை நிமிர்த்தி அண்ணாந்து பார்த்தேன். வலக்கண் சிவந்து கிடந்தது. இடக்கண் எப்போதும் போலவே பழுப்பும் கருநீலமும் கலந்த நிறத்தில் விழுந்துவிடப் போவது போல் ஒரு படலத்தைக் கொண்டதாய்.....

மீன்வாடிக்கு அருகிலுள்ள மதகில் சைக்கிளைச் சாத்திவிட்டு இருவரும் அதில் குந்திக் கொண்டோம். கடற்கரை மணலில் சிரட்டைகளை அடுக்கி விளையாடிக் கொண்டு கூச்சலிட்டபடி நாலைந்து வாலுகள். புதிதாய்க் கல்யாணமான ஜோடியொன்று, கடல்நுரை கால் கழுவ கை கோர்த்து நடந்தபடி.

அண்ணா எதுவும் பேசவில்லை. நாலைந்து கற்களைப் பொறுக்கியெடுத்துக் கொண்டான். மதகோடு சேர்ந்தாற்போல் இருக்கும் குட்டைக்குள் தண்ணீர் தெறிக்க எறிந்து கொண்டிருந்தான். பின்னால் போடியாரின் தென்னந் தோப்பில் ஓர் ஓலை விழுந்த சத்தம். திரும்பிப் பார்த்தான். ஒரு வகைச்சிரிப்பு. கொஞ்ச தூரத்தில் தோணிகள் பெரிய வலைக்காய் கடலுக்குள் சென்றபடி. மோட்டார்ச் சத்தம் தனியாய்க் கேட்டது.

''அங்க பாருங்கண்ணாச்சி அந்தா, அந்தா, சவக்காலப் பக்கம் அண்ணாச்சிர தோணி போகுது''. நான் சொன்னது அவன் காதில் விழுந்ததாய் தெரியவில்லை.

''சின்னவா ஒழுங்காய் படிக்கிறா தானே''

''ஓமண்ணாச்சி''

''கவனமாய் படி கட்டாயம் பாஸ்பண்ணி 'கெம்பஸ்' போக வேணும். நான் படிச்சது வீணாகிப் போச்சுதெண்டு எல்லாரும் நினைக்கிறாங்க. நீயாவது ஒழுங்காப்படி''

''ஏன் வீணாப் போக, நீங்களும் இந்தமுறை எக்ஸாம் எடுக்கிறதுதானே''

''இல்லடா சின்னவா, நான் இன்னங்கன நாளைக்கு இருக்க மாட்டன்.''

''இதென்ன பைத்தியக்கத வருத்தம் எல்லாருக்கும்தானே வாற அது சுகமாகப் போயிரும்''

இல்லடா வாழவேணுமெண்டு எனக்குக் கொஞ்சமும் எண்ணமில்ல.

இந்தக் கண்மட்டும் ஒழுங்காத் தெரிந்திருந்தால் அண்டைக்கே செத்திருக்கலாம். அவங்கள் வந்தது தெரியாமல் போயித்து! அப்ப செத்திருந்தா இப்ப

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தீர்வுத்திட்டத்தின் சாதனை: ஜனாதிபதியின் துணிச்சல் மட்டுமே?

ஏ.ராஜசிங்கம்(சட்டத்தரணி)



பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டிருக்கும் சமாதானத் திட்டம் பற்றிய ஒரு கூர்மையான பரிசீலனை செய்யப்பட வேண்டுமானால் அது 13வது திருத்தச் சட்டம் அமெரிக்க அரசியல் சட்டம் என்பவற்றுடன் ஒப்புநோக்கிச் செய்யப்படுவது அவசியமாகும். ஏனென்றால் இத்திட்டம், சனத்தொகை, மொழி, கருத்தமைவு என்பவற்றால் வேறுபட்ட மாகாணங்களைக் கொண்ட மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டின் அரசியல் சட்டத்துடன் இணைக்கப்பட வேண்டியதொன்றாகும். தவிரவும் இம்மாகாணங்கள் அவற்றின் இயற்கை வளங்கள், தொழிற்துறை சிறப்பனுபவங்கள், பிரிவுகள் என்பவற்றிலும் கூட வேறுபடுகின்றன. எனவே ஆளுபவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையிலான உறவை சீர்ப்படுத்தும் வகையிலான ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்குவது அரசாங்கத் தரப்பினரின் ஒரு கடமையாம். ஆகவே இத்தகைய ஒரு சட்டம் ஒருபோதும் அடிக்கடி மாறுகின்ற, தனிநபர்களதோ அரசியல் கட்சிகளதோ நலன்களை அடிப்படையாகக் கொண்டதாக அமையாமல் இருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

அரசு தனது அதிகாரத்தைப் பிரயோகிக்கையில் மக்கள் மத்தியில் பாகுபாடற்ற முறையில், அதாவது அவர்களது மதம் மொழி அரசியல் நிலைப்பாடு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டதாக அல்லாமல் இயல்பான முறையில் பிரயோகிக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். ஒரு அரசாங்கம் ''தவிர்த்தலும் அங்கீகரித்தலும்'' என்ற கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். அதாவது அது மோதலை உருவாக்கக்கூடிய விடயங்களை தவிர்ப்பதும் மக்களின் உரிமைகளை அங்கீகரிப்பதும் என்ற கோட்பாட்டின் படி ஒழுக வேண்டும். இலங்கை எல்லா மத, மொழிவாரி சிறுபான்மையினரதும் ஆதரவுடன் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்ட போது இந்த நிலை தான் இருந்தது.

இலங்கை சுதந்திரம் அடைந்த போது, இலங்கையின் எல்லாப் பிரஜைகளும் அவர்களது இனமத மொழி வேறுபாடுகட்கு அப்பாற்பட்டு தமது சகல உரிமைகளையும் அனுபவிக்க முடியும் என்றே கருதினர். மக்களுக்கு எல்லா உரிமைகளையும் வழங்குதல் என்ற நிலை அன்றைய அரசியல் சட்டமும் பாராளுமன்றமும் உருவாக்கப்பட்ட போது உணரப்படவில்லை. உண்மையில் உரிமைகளும் சலுகைகளும் எல்லா மக்களுக்கும் நியாயமான முறையில் கிடைப்பதற்கு, சுதந்திரத்தின் காத்திரத்தன்மை புரிந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அமெரிக்காவிலோ அல்லது இந்தியாவிலோ நடந்தது போன்ற சுதந்திரத்திற்கான தீவிரமான போராட்டம் எதுவும் எமது நாட்டில் நடக்கவில்லை. அன்று நடந்தது எல்லாம் வெறும் கிளர்ச்சிகள் மட்டுமே. அவையும் கூட காலனிக்ளுக்கு ஆதரவான அரசியல் போக்கை கொண்டிருந்த தொழிற்கட்சி ஒன்று பிரித்தானியாவில் ஆட்சியிலிருந்ததால் தீவிரமாக இருக்கவில்லை. அரசியலில் தொழிற்பட விரும்பும் பொறுப்புள்ள பிரஜைகளும் மதத் தலைவர்களும் இந்த உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். ஒரேமாதிரியான தன்மையற்ற மாகாணங்களைக் கொண்ட எங்களைப் போன்ற நாட்டில் இந்த நிலைமைகள் இருப்பதால் மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுக்கும் இடையிலான ஒரு இணைப்புச் சங்கிலியாக ஒரு சக்தி வாய்ந்த ''மேற்சபை'' (Upper House) அவசியமாகும்.

இப்போது வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம் இதற்கு முன்னைய திட்டங்களை விட முன்னேற்றகரமானது என்ற போதும் கூட பிராந்திய அலகுகளின் சுதந்திரமானது, குறிப்பாக ''தேசியக் கொள்கை'' (National Policy) பற்றி ஆராயும் போது மிகவும் தெளிவற்ற ஒரு நிலை காணப்படுகின்றது.

இந்தத் தேசியக் கொள்கையினூடாகவே மத்திய அரசு நாட்டினை ஆட்சி செலுத்துகிறது. ஆயினும் இது இந்தத் தீர்வுத் திட்டத்தில் தெளிவுபடுத்தப்படவில்லை. விரிவான பரவலாக்கம் என்று சொல்லுகின்ற போதும் அது நிச்சயமாக பிராந்திய சபைகளின் (Regional Councils) பரந்த அதிகாரத்தைக் கொண்டிருக்கும் என்று அர்த்தப்படுத்திக் கொள்ளப்பட முடியாது. பிராந்திய சபைகள் என்று சொல்லும் போது அவை, மத்தியின் ''தேசியக் கொள்கை'' யை உருவாக்குகின்ற ஒரு கூட்டான தீர்மானிக்கும் உரிமையைக் கொண்டவையாக அமைய வேண்டும்.' ஆனால் அரசாங்கத்தின் ஒதுக்கப்பட்ட பட்டியல் வெறுமனே சொற்களால் நிரப்பப்பட்டுள்ளது. ''தேசிய நியமங்கள்'', ''தேசியப் பாதுகாப்பு'', ''தேசிய பல்கலைக்கழகங்கள்'', ''தேசிய பொது சேவைகள்'', ''தேசிய பொது சேவைகள் ஆணைக்குழு'', ''தேசிய சுவடிகள் திணைக்களம்'' 'என்று அது சொற்களைச் சுருக்குகிறது. இந்தத் தேசியக் கொள்கைகள், மத்திய அரசுகள் உத்தேசப் பிராந்திய சபைகள் என்பவற்றினால் உருவாக்கப்படும் ஒரு மேற்சபையில் உருவாக்கப்பட வேண்டும். அப்போது அந்த மேற்சபை மத்திய அரசின் கடப்பாடான அதன் தேசியக் கொள்கைகள் பிராந்திய சபைகளின் அதிகாரங்களை மீறாவண்ணமும் கவனித்துக் கொள்ள 'முடியும். எனவே உத்தேச பிராந்திய சபைகள், அதிகாரப் பகிர்வைக் கொண்டிருக்க வேண்டுமானால், மத்திய அரசுக்கு அத்தகையதொரு கடப்பாடு அவசியமாகும். சுருக்கமாகச் சொல்வதானால் மேல் சபை பிராந்திய சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் சுதந்திரம் உள்ளவையாக இருப்பதற்கு ஒரு பாதுகாப்பாளாக அமைதல் அவசியமாகும்.

உதாரணமாக, முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தின்படி கல்வியும் கல்விச் சேவையும் பிராந்திய சபைகளின் கீழ் வரும். ஆனால் அவை தேசியப் பாடசாலைகளையும், தேசிய பல்கலைக்கழகங்களையும் தமக்குக் கீழ் கொண்டிருக்கா. பயிற்சி நெறிகளுக்கான நியமங்களை வரையறை செய்வது, பரீட்சைகள் ஆசிரியர் பதவிக்கான தகுதிகள் போன்றவற்றையும் அவை தீர்மானிக்க மாட்டா. இந்த இடத்தில் ''தேசிய'' என்ற அம்சத்திற்கு தெளிவான வரையறை தேவை. இத்தகைய ஒரு தேசிய கொள்கை, பிராந்திய சபைகளின் கூட்டுத் தீர்மானமாக எடுக்கப்படாத பட்சத்தில், இந்த சபைகளுக்கு எஞ்சியுள்ள அதிகாரங்கள் மிகவும் மேலோட்டமானவையும் குறிப்பாக தர நிர்ணயம் பற்றிய விடயத்தில் தெளிவற்றவையுமாகும். உதாரணமாக, வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள், மத்திய அரசின் கீழ் வராத ஒரு கல்விக் கழகத்தை, தர நிர்ணயம் அமுலிலிருக்கும் காலத்தில் அங்கீகரிக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தை எடுப்போம். சர்வதேச நிதி போன்ற உதவிகளும் அந்த குறிப்பிட்ட கல்விக் கழகத்தை வளம்படுத்த கிடைக்கின்றது எனவும் கொள்வோம். இத்தகைய சந்தர்ப்பத்தில், அதை பிற்போடவோ அல்லது நிராகரிக்கவோ முடியும். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் அந்தப் பிராந்தியம் மட்டமல்ல, முழு நாடுமே பாதிக்கப்படும் நிலைமை உருவாகும். அரசாங்கம், பிரச்சினைகள் மோதி -வெடிக்கும் ஒரு நிலைமையை கடைப்பிடிக்கப் போகிறதா அல்லது, இந்த அதிகாரங்களை வழங்குவதன் மூலமாக அப்படியான பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளப் போகிறதா?

தனிச்சிங்கள சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டமையே, 'தவிர்த்தலும் அங்கீகரித்தலும்' என்ற கோட்பாட்டுக்கு எதிராகப்போக வழிவகுத்தது என்பது, இது இலங்கையின் அரசியல் ஈர்ப்பு மையத்தினை இடமாற்றியது என்பதும் மறக்கப்பட முடியாதவை. அதன் பின் வந்த அனைத்து அரசாங்கங்களும் தமிழ் பேசும் மக்களுடன் தமது அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள தயாரற்றவை என்பதையே காட்டின. அதுமட்டுமல்லாமல் தமது தேசியக் கொள்கைகளை தீவிரமாக நடைமுறைப்படுத்தியதன் மூலமாக தமிழ் சமூகத்தை இலங்கையின் மற்றெல்லாப் பாகங்களிலுமிருந்தும் வடக்கு கிழக்கு நோக்கி விரட்டின. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களை எல்லா விடயங்களிலுமிருந்தும் அந்நியப்படும் நடவடிக்கைலேயே ஈடுபட்டு வந்தன. அவற்றின் கல்வி மற்றும் மொழிக் கொள்கையானது சிறுபான்மை சமூகங்களை பெரும்பான்மை மக்களிடமிருந்து முற்று முழுதாக பிரித்து விட்டதுடன், ஒரு ஐக்கிய இலங்கைக்கான எல்லா முயற்சிகளையும் தவிர்த்து விட்டன.

எல்லா சமூகங்களையும் ஒன்றாக கொண்டுவர வல்ல மாகாண அலகுகட்கு சுயாதீனத்தை வழங்குவதன் மூலமாக நாட்டின் ஐக்கியத்தை காப்பாற்றலாம் என்று தொடர்ச்சியாக வந்த எந்த அரசாங்கமும் ஒருபோதும் கருதியதில்லை. எந்த ஒரு அரசியல் வாதியும் தமிழ் மக்கள் முன் தமது தீர்வை முன்வைத்தில்லை. அவர்கள் செய்ததெல்லாம் 'ஏற்றுக் கொள்ளக் கூடியவை'' ''ஏற்றுக் கொள்ளப்பட முடியாவை''

இப்போது முன்வைக்கப்பட்டுள்ள இந்த உத்தேச பிராந்திய சபைகள் தீர்விலும், மத்திய அரசாங்கத்தின் கடப்பாடுகள் தெளிவாக விளக்கப்படாமல் உள்ளமை இந்த அரசாங்கமும், 'தவிர்த்தலும் அங்கீகரித்தலும்' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை என்பதையே காட்டுகிறது. அரசாங்கம், இதற்குப் பதிலாக, முன்னைய அரசாங்கங்கள் போலவே உத்தேச பிராந்திய சபைகளுக்கான அதிகாரங்களை உறுதி செய்யாமல், பிரச்சினைகள் மோதி வெடிப்பதைக் காணவே விரும்புகிறது. தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன என்று ஜனாதிபதி சொன்ன போதும் இதுதான் உண்மை. இது, மத்திய அரசு பிராந்திய சபைகளின் அதிகாரத்தில் தலையிடாது என்று கூறப் போதுமான ஒன்றல்ல.

இன்றைய நிலையில், ''ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது, ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது' என்ற மந்திரச் சொற்கள் மூலமாக நிச்சயமாக பிராந்தியங்களின் முன்னேற்றத்துக்கான முயற்சிகளை மத்திய அரசு தடை செய்யவோ அல்லது இழுத்தடிக்கவோ வாய்ப்புண்டு என்று துணிந்து சொல்லலாம். எனவே மத்திய அரசின் நியாயத்தன்மை, அதிகாரமுள்ள மேற்சபை ஒன்று அமைக்கப்படுவதன் மூலமே கண்காணிக்கப்படவும் பிராந்திய சபைகளின் நலன்களைப் பாதுகாக்கவும் முடியும்.

நாட்டின் பொருளாதார நிலைமைகள் பற்றி எந்த அரசியல்வாதிகளும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. பதிலாக அவர்கள் இந்த எரியும் பிரச்சினையில் தம்மை வளர்த்துக் கொள்ளவே பார்க்கின்றனர். மக்கள் பெருமளவு நம்பிக்கை வைத்துள்ள இன்றைய ஜனாதிபதி, தானும் அவ்வாறான ஒரு நிலைப்பாட்டை எடுத்து விடாமல் இருக்க வேண்டும். இன்றைய சமூக பொருளாதார நிலைமையை கணக்கிலெடுத்து அவர் விட்டுக் கொடுத்து பெற்றுக் கொள்ளும் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தயாராக இருக்க வேண்டும். அமெரிக்காவில், பிராந்திய அலகுகளின் சுயாதீனத்தினை திருப்திப்படுத்தும் விதத்தில் அங்குள்ள சமஷ்டிமுறை இருந்து வருகிறது. எனவே, பிராந்திய சபைகள் தொடர்பான தனது கடப்பாடுகளை அரசாங்கம் எந்தப் பயமுமின்றி அறிவிப்பதற்குத் தயங்கவேண்டியதில்லை.

ஒரு அரசியலமைப்பு சட்டம் எவ்வாறு அழைக்கப்படுகிறது என்பது முக்கியமல்ல. அது மக்களின் எல்லாப் பிரிவுகளதும் உரிமைகளையும் பாதுகாக்கிறதா என்பதே முக்கியமானது. சிறுபான்மையினர்கட்கு சம உரிமைகள் வழங்கப்படுவது என்பது பிராந்திய ஒருமைப்பாட்டை பாதிக்கும் என்ற ஒரு தவறான அபிப்பிராயம் பலரிடம் காணப்படுகிறது. எனவே மத்திய அரசின் பிராந்திய சபைகள் குறித்த கடப்பாடுக்ள் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டு அவை மேற்சபை ஒன்றினூடாகக் கண்காணிக்கப்பட வேண்டும். மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகட்கும் கிடையிலான அதிகாரங்கள் தெளிவாக வரையறை செய்யப்படாத பட்சத்தில் அது நிலைமையை பழைய நிலைக்கே இட்டுச் சென்றுவிடும்.

மாகாணசபைகள் தோல்வியுற்றதனால், இப்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம், 13வது திருத்தச் சட்டத்தை பிரதியீடு செய்வதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை - இந்திய ஒப்பந்த அடிப்படையில் கொண்டுவரப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தில் சொல்லப்பட்ட விடயங்கள் கூட சரியாக அமுல் படுத்தப்பட முடியாத விதத்தில் அன்றைய ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட பல விடயங்களை வேண்டுமென்றே தாமதப்படுத்தியது அன்றைய அரசாங்கம். அரசியல்வாதிகள் தமது சொந்த நலன்களுக்காக, இவற்றை வேண்டுமென்றே தாமதப்படுத்தினார்கள். நிதி ஒதுக்கல் மற்றும் அதிகாரப் பகிர்வில் அவர்கள் கடைப்பிடித்த கொள்கை பிரச்சினைகளை மோதவிடுவதை நோக்கமாகக் கொண்டதாகவே அமைந்தது. இந்த 13வது திருத்தம் போன்றே, இன்றையதும் சமஷ்டித் தன்மையைக் கொண்டிருக்கிறது. மிக நுணுக்கமாக அவதானித்தால், இந்தப் புதிய தீர்வு நடப்பிலுள்ள அரசியலமைப்பின் நிறத்தையும் முகத்தையும் மட்டுமே மாற்றியுள்ளது விளங்கும். 13வது திருத்தத்தின் குறைகளை திருத்த எந்த அரசாங்கங்களும் எத்தகைய முயற்சிகளையும் எடுக்கவில்லை என்பது மிகவும் துர்ப்பாக்கியமானதாகும்.

இரண்டு அரசுகளால் கையொப்பமிடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் இன்னமும் நடைமுறையில் உள்ளது. இத்தகைய ஒரு நிலையில் இந்த ஒப்பந்தத்தை ஒரு நாடு நிராகரிக்குமானால் என்ன நடக்கும்? இலங்கையுடன் கூட்டாக இந்தியா இந்த ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகிவிட்டது என்று அறிவிக்குமா? என்பது ஒரு முக்கியமான கேள்வி. ஏற்கனவே உள்ள ஒப்பந்தம் தொடர்பான முடிவுகள் இன்றியே இப்போதைய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது வழமையான நடைமுறைக்கு மாறான ஒரு விடயமாகும். இந்த நிலையில் வடக்கு கிழக்கில் இன்னொரு யுத்தத்தை நடாத்துவதற்கான ஒருகால அவகாசத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் ஒரு விடயமாக இது அமைந்து விடக்கூடாது என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

மாகாண சபைகள் அமைக்கப்பட்டது வட-கிழக்கு மாகாணத்திலுள்ள சிறுபான்மை சமூகங்களுடைய எதிர்பார்ப்புகளை தீர்க்கவாகும். ஆனால் இரு அரசாங்கங்களும் வடகிழக்கு மாகாணசபை தவிர்ந்த பிற மாகாண சபைகளுக்கே அதிகாரங்களை வழங்குவதில் அக்கறையாக இருந்தன.13வது திருத்தம் தமிழ் சமூகத்தின் கடந்த 35 வருடகால தொடர்ச்சியான யுத்தத்தின் ஒரு விளைவாகும். இது, பல்வேறு குறைபாடுகள் இருந்த போதும், மத்தியின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிய, அதிகாரம் பரவலாக்கப்படும் முயற்சியின் ஒரு தொடக்கமாக இருந்தது.

13வது திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்தபின், ஒரு இரண்டாவது சபையொன்று (அமெரிக்க மாதிரி) உருவாக்கப்பட்டிருக்குமானால் - சில இன்றைய நெருக்கடி நிலை பெருமளவுக்கு குறைக்கப்பட்டிருக்கும்.

இப்போது வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம், மட்டுப்படுத்தப்பட்ட உரிமைகளை - நடைமுறைத் தடைகளை குறைப்பதன் மூலமாக வழங்க முயல்கிறது. இது அரசின் நியாயத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறது. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், இத் தீர்வு திட்டத்தால் சிங்கள சமூகம் எத்தகைய பாதிப்புக்கும் உள்ளாக்கப்படவில்லை. ஆனால், சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன என்று அக்கறை கொள்ள வேண்டிய ஒரு கடப்பாடு இருக்கின்றது. இலங்கையின் சுதந்திரம் தனியே சிங்கள மக்களால் மட்டும் பெறப்பட்ட ஒன்றல்ல என்பதை அவர்கள் மறந்திடக் கூடாது.

இந்த தீர்வுத்திட்டத்தின் ஒரேயொரு சாதனை அம்சம் என்னவென்றால், ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்காக ஒரு துணிவானதும் உறுதியானதுமான அடியை எடுத்து வைத்துள்ளார் என்பதும், அது பாராளுமன்றத்தில் அல்லது சர்வஜன வாக்கெடுப்பில் தோல்வியுறுமானால் அவர் பென்சன் எடுத்துக்கொண்டு பதவியை விட்டு விலகுவார் என்பது மட்டுமே. எவ்வாறாயினும் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருப்பதாக அறிவித்தமைக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவையிட்டு ஒவ்வொரு சிங்களவரும் பெருமைப்படலாம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முஸ்லிம்...

7. "1987ல் இந்திய -இலங்கை ஒப்பந்தம் அமுல் செய்யப்பட்ட போது அதனை எதிர்த்ததாகவும், ஆனால் அந்த ஒப்பந்தத்தின் கீழ் நடாத்தப்பட்ட தேர்தல்களில் போட்டியிட்டதாகவும்" கட்டுரையாளர் குற்றம் சாட்டுகின்றார். இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அஷ்ரஃப் ஏன் எதிர்த்தார்? கட்டுரையாளர் ஏன் இன்று அஷ்ரஃப்பை மிக் கடுமையாக அநுமானித்த சில பத்திரிகைச் செய்திகளை வைத்து விமர்சிக்கின்றார்? ஏனெனில், முஸ்லிம்கட்கு நியாயமான தீர்வை வைக்காத மக்கள் முன்னணியின் தீர்வு ஆலோசனைகளை (வெறும் தென்மாகாண சபையுடன்) ஏற்றுக் கொண்டதற்காக. இன்று மக்கள் முன்னணி அரசு முன்வைத்த தீர்வுகளில் முஸ்லிம்கட்கு நியாயமான தீர்வு இல்லையெனக் கற்பனைசெய்து அதனை விமர்சிக்கும் கட்டுரையாளர் அன்று முஸ்லிம்கட்கு நியாயமான தீர்வு முன்வைக்கப்படவில்லை என்று இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அஷ்ரஃப் எதிர்த்ததை ஏன் விமர்சிக்கின்றார்? உண்மையில் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தது வேறு; மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டது வேறு. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தது முஸ்லிம்கட்கு நியாயம் கிடைக்கவில்லை என்பதை வெளிப்படுத்துவதற்கு. ஆனால், மாகாணசபைத் தேர்தல்களில் 1988 ல் போட்டியிட்டது அஷ்ப்பின் அரசியல் சாணக்கியமும் தீர்க்கத்ரிசனமுமாகும். அஷ்ரஃப்பின் தீர்க்கரிசனத்திற்கு வெள்ளிடை மலையாக அமைவது இன்று முஸ்லிம்கள் எந்த அரசியற் பேச்சுவார்த்தைகளிலும் எல்லாக் கட்சிகளினாலும் ஒருதனி இனமாக அங்கீகரிக்கப்பட்டமையும், முஸ்லிம் காங்கிரஸ் இல்லாவிட்டால் மக்கள் முன்னணி அரசு இல்லை என்பதை கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் உலகுக்கு எடுத்துக்காட்டியமையுமாகும். 1988ல் மாகாணசபையில் போட்டியிருக்காவிட்டால் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த நிலைக்கு வந்திருக்குமா? கட்டுரையாளர் கற்பனை செய்வது போல தென்மாகாண சபைதான் கிடைக்கும் என்றால், முஸ்லிம் காங்கிரஸ் இல்லாவிட்டால் அதுதான் கிடைக்குமா?

8. "அஷ்ரஃப் - தொண்டா ஒப்பந்தம் குறித்து பரபரப்பான அறிக்கைகளை அஷ்ரஃப் கொடுத்ததாகவும், அந்த ஒப்பந்தத்திற்கு என்ன நடந்தது என்று இன்றுவரை யாருக்கும் தெரியவில்லை" என்றும் கட்டுரையாளர் சாடுகின்றார். கட்டுரையாளருக்குத் தெரியாதவிடயமாக இது இருக்கலாம். ஆனால் அது எவ்வாறு யாருக்கும் தெரியாத விடயமாகப் போகும்? அஷ்ரஃப் - தொண்டா ஒப்பந்தத்தின்படி கோரப்படுவது வடகிழக்கில் ஒரு உப -பிராந்திய சபையாகும். ஆனால் இன்று அஷ்ரஃப் கோருவது இதைவிட அதிகமானதாகும். அதாவது சம அந்தஸ்துள்ள பிராந்திய சபை. அஷ்ரஃப் - தொண்டா ஒப்பந்தத்தின் வேறு பல அம்சங்களையும் இது உள்ளடக்கியிருக்கின்றது.

9. சந்திரிகா - அஷ்ரஃப் ஒப்பந்தத்தை பற்றியும் கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். இவ்வொப்பந்தத்தின் பிரதான அம்சங்களில் ஒன்று என்னவெனில் முஸ்லிம் காங்கிரஸைக் கலந்தாலோசியாது வடகிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வொன்று முன்வைக்கப்படக்கூடாது என்பதாகும். இதைத்தான் அரசு கடந்த சில வாரங்களாகச் செய்து கொண்டிருக்கிறது. பாராளுமன்ற தெரிவுக்குழுவும் செய்யப்போகின்றது. அதன் பின்புதான் அதிகார அலகு தீர்மானிக்கப்படும். இதைவிட்டு கட்டுரையாளரின் நிலை முந்திரிகைக்கொட்டைக்கு ஒப்பானதாகும்.

10. தீர்வுத் திட்டத்தை அஷ்ரஃப் பூரணமாக ஆதரிப்பதாக வானொலியில் அறிக்கை வெளியிட்டதாகக் குறிப்பிடுகின்றார். அஷ்ரஃப் இதன் மூலம் கருதியது என்னவென்று அதைக் கேட்டவர்கள் அறிவர். அஷ்ரஃப் ஆதரிப்பதாகக் கூறியது தீர்வு ஆலோசனைகளில் குறிப்பிடப்பட்ட அம்சங்களையாகும். அதிகாரத்தைப் பெருமளவு பகிர்ந்து கொள்ள அரசு முன்வந்தமையினாலாகும். அதிகார அலகுகளை அல்ல. அதிகார அலகுகள், எல்லைகள் இன்னும் அரசினால் தீர்மானிக்கப்படவில்லை என்பதையும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை என்பதையும் கட்டுரையாளர் ஏன் அறியவில்லை?

11. "உத்தேசிக்கப்பட்ட "பிராந்தியங்களின் ஒன்றியம்" என்ற அமைப்பில் எட்டு பிராந்தியங்கள் மட்டுமே அடங்குவதாகவும், அப்படியாயின் ஒன்பதாவதாக இருக்கின்ற தென்கிழக்கு மாகாணத்தின் கதி என்ன என்பதை விளக்குவீர்களா" என்றும் கட்டுரையாளர் கேட்கின்றார். அரசாங்கத்தினால் தீர்வு சம்பந்தமாக வெளியிடப்பட்ட எந்த உத்தியோகபூர்வமான ஆவணங்களிலும் எட்டுப் பிராந்திய சபைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா? கற்பனைக்கும் ஓர் எல்லை கிடையாதா? யாரோ குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பவனின் கதையைக்கேட்டு கட்டுரை எழுதலாமா? விமர்சனம் எழுதலாமா?

12. "உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தின்படி, ஒலுவில் துறைமுகம் சிங்கள ஆதிக்கத்திற்குட்படுவதையும், துறைமுகத்தைச் சூழ சிங்களக் குடியேற்றங்களும் கடற்படைத்தளமும், அமைவதையும் உங்களால் தடுக்க முடியுமா" என்று கட்டுரையாளர் இன்னொரு வினா எழுப்புகின்றார். கட்டுரையாளர் அரசின் தீர்வுத் திட்டத்தை முழுமையாகப் படிக்கவில்லை போலும். உத்தேச தீர்வுத் திட்டத்தின் பிராந்திய நிரலின் 24 வது விடயத்தின்படி அரச காணியும், அதன் பராதீனமும், அல்லது கையுதிர்ப்பும் பிராந்திய சபைகட்கு கீழ் வரும் என்பது கட்டுரையாளக்குத் தெரியாதா? மத்திய அரசுக்குக் காணி தேவைப்பட்டால் பிராந்திய சபையின் இணக்கமின்றிப் பெற முடியாது. அரசகாணி பிராந்திய சபையின் உரித்தாக்கப்பட்ட விடயமாகும். மேலும் குடியேற்றங்களைப் பொறுத்தவரையில் முதலில் மாவட்டத்தில் உள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும். இதேபோல் பிராந்திய நிரலின் 11வது அம்சத்தின்படி சிறிய துறை முகங்கள் பிராந்திய சபைகளின் நிர்வாகத்திற்குள் வரும். கட்டுரையாளர் கொழும்புத் துறைமுகத்திற்கு ஒப்பான துறைமுகம் ஒலுவிலுக்கு வரப்போகின்றது என்று கற்பனை பண்ணுகின்றாரோ? அவரின் கற்பனைத் திறன் அமோகம்!

13. கடைசியாக, கட்டுரையாளர் முஸ்லீம்களின் தேசிய உணர்வினையும் அரசியல் முதிர்ச்சியையும் பற்றிப் பேசுகின்றார். இந்தத் தேசிய உணர்வை வலுப்படுத்தியதும், அரசியல் முதிர்ச்சியை இந்தளவுக்கு முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தியதும் யார்? அது முஸ்லிம் காங்கிரஸும், அஷ்ரஃப் என்ற தனி மனிதனும் தான். எந்த முஸ்லிம் தலைவரும் துணியாத ஒரு துணிச்சலான காரியத்தைச் செய்து முஸ்லிம்கட்கு இந்த நாட்டில் கௌரவத்தைக் கொண்டு வந்த பெருமை இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் அஷ்ரஃப்பைத்தான் சாரும். தமது குறுகிய சொந்த கோபதாபங்கட்காக கண்ணை மூடிக்கொண்டு எழுதுவதைக் கட்டுரையாளர் நிறுத்த வேண்டும்! அடுத்த பல தசாப்தங்கட்கு முஸ்லிம் காங்கிரஸை முஸ்லிம்கள் மத்தியில் இருந்து அகற்ற முடியாது என்ற யதார்த்தத்தைக் கட்டுரையாளர் உணர வேண்டும்!! மருதமுனை பஷீத் கற்பனைக் கதைகள் எழுதினால் இன்னும் ரசிக்கக் கூடியதாக இருக்கும்!!!.

## வாழ்தல் என்பது...

இப்பிடிக் கவலப்படத் தேவையில்ல."

"உனக்கொண்டும் தெரியாது சின்னவா. சொன்னாலும் விளங்குமோ எண்டும் தெரியல்ல. எல்லாருக்கும் என்னில நல்லா மனம் விட்டுப் போச்சி. படிக்கக் கொட்டினது காணாதெண்டு இப்ப வருத்தத்திற்கும் கொட்ட வேண்டிக்கிடக்குதெண்டு அண்ணாச்சி யோசிக்குது. மூத்தண்ணாச்சி வீட்ட போனா ஒரு தொழு நோய்க்காரனைப் பார்க்கிற மாதிரி எல்லாரும் அருவருத்துப் பார்க்கிறாங்க. பிள்ளைகள் கிட்ட வந்தா மச்சாள் உறுக்கிக் கூப்பிடுறா. கடசி, அக்காச்சிக்குக் கூட என்னில சலிப்பு வந்திற்றுது. பாவம் அம்மா. அவள்தான் என்ன செய்வாள். அவளே அக்காவோட ஒட்டின மாதிரி, அத்தான்ட குத்தல் கதைகளையும் கேட்டுக் கொண்டு."

"அதுக்கு செத்தா எல்லாம் சரியாப் போயிருமோ, எக்ஸாம் எடுத்துப் போட்டு ஒரு வேலையில கொளுவிற்றால் எல்லாம் சரியா வரும்."

"அதுமட்டும் வருத்தம் விட்டு வைக்குதோ தெரியா. நேற்றும் சந்தையடியில றோட்டில விழுந்து கிடந்தனாம். மாமா தூக்கிக் கொண்டோய் அவங்கட வீட்டில போட்டிருக்காரு. சுகி பார்த்துப்போட்டு ஒவெண்டு கத்தினாளாம். அவ்வளவு சத்தமாம்."

நீ இதுகள யோசியாமல் நீ கவனமாகப்படி எடு போவம்"

திரும்பி வரும்போது கடற்கரை யாருமில்லாமல் வெறிச்சோடியபடி, தோணிகளெல்லாம் தூரத்தே புள்ளிகளாய்த் தெரிந்தன. சிறுவர்கள் விளையாடிய் சிரட்டைகள் நாலாபக்கமும் சிதறிக் கிடந்தன. பட்டமரமொன்றிலிருந்து அண்டங்காக்கை ஒன்று இடைவிடாது கத்திக் கொண்டிருந்தது. பொழுது கருக்கலை நோக்கி..... முதலும் கடைசியுமாய் அண்ணாவை ஏற்றி சைக்கிளை உழக்கிக் கொண்டு வந்தேன். அண்ணா கனமாய்த் தெரிந்தான். அதைவிட இதயம் கனத்துக் கொண்டிருந்தது. மறுநாளின் துக்கத்தையும் சேர்த்து.

★ ★ ★

பின்வந்த காலங்களில் எப்போதாவது அண்ணா நினைவில் வருவான்.

யாரேனும் ஒருத்தர் இறக்கும்போது, மனதை நெருடும் கவிதையொன்றைப் படிக்கும் போது, தூக்கம் வராத நள்ளிரவுகளின் போது... இப்படி எப்போதாவது அண்ணா நினைவில் வருவான். நேற்றிரவு என் சுட்டி மகனைத் தோளில் போட்டு உலாத்தும் போதும் ஒரு கவிதையாய் வந்தான்.

"மன்னித்துக்கொள் அண்ணா!<br>
உன் போல்<br>
வாழ்வின் கனத்தை<br>
காற்றில் எரிக்க<br>
இன்னும் நான் கை<br>
விரிக்கவில்லை.

என் வீட்டின் ஓலைகள்<br>
சடசடத்துக் கிளம்பும் வரை<br>
புயலைப் பார்க்கவும்<br>
விரும்பவில்லை.

எனக்குத் தெரியுமண்ணா!<br>
முகம் இறுகிப் போன<br>
நாளிலிருந்து<br>
உன் அசைவுகளெல்லாம்<br>
அர்த்தம் நிறைந்தவை.

ரெத்த வரிகளிடையே<br>
பிரிந்து கிடந்த<br>
உன் உதடுகள் கூட<br>
ஒரு கல்வெட்டுப் போன்றது<br>
இருந்துமென்ன<br>
ஒரு கல்லறை கூட<br>
உனக்குக் கட்டப்படாமலே<br>
போயிற்று.

வெட்கமாய்த்தான் இருக்கிறது!<br>
மழைக்கால நாட்களில் பறவைகள்<br>
தாழத் தாழத் தாழப்<br>
பறப்பதுபோல்<br>
வாழ்வைக் குறுக்கிக்<br>
கொண்டே போவது<br>
வெட்கமாய்த்தான் இருக்கிறது.<br>
என்ன செய்ய எனக்கொரு<br>
மனைவியும் குழந்தையும்<br>
வீடும்."

கவிதையை திரும்பத் திரும்ப படித்துப் பார்த்தேன். நன்றாக வந்திருக்கின்றது என்று மனம் சொல்லிக் கொண்டது.

## திட்டமிட்டுப்...

களையும் அரசியல் ரீதியாக மிகவும் அபாயகரமான ஒரு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதுடன் தமிழர்களின் அரசியல் ரீதியான இருப்பை சூனியமாக்கியுமுள்ளது.

குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் மாவட்டத்தின் தென்மேற்குப் பிரதேசத்தில் தமிழர்களால் பெருமளவு கால்நடைகள் வளர்க்கப்பட்டு வந்தன. இதற்குப் போதுமான பெருமளவு மேய்ச்சல் நிலங்களும் அப்போது காணப்பட்டன. இந்தத் தொழிலானது தமிழர்களுக்கு பொருளாதாரரீதியாகப் பெரும் வருவாயை ஈட்டிக் கொடுத்து வந்தது. ஆனால் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பெருமளவு காட்டு நிலங்களும், தரிசு நிலங்களும் அழிக்கப்பட்டு கிராமங்களும் வயல் நிலங்களும் உருவாக்கப்பட்டன. இதனால் கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலங்கள் அறவே இல்லாமல் போயின. இவ்வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் மேய்ச்சல் நிலங்களுக்கென சுமார் 4,000 ஏக்கர்களை ஒதுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் அரசாங்கம் இதனைப் புறக் கணித்தது. இதன் காரணமாக தமிழர்களின் வருமானம் ஈட்டும் தொழிலாக இருந்து வந்த கால்நடை வளர்ப்புத் தொழில் நாளடைவில் அழிந்து போனது. இது தமிழர்கள் சார்பாக பெரும் பொருளாதாரப் பின்னடைவைப் பிரதேசத்தில் ஏற்படுத்தியது.

மேலும் அண்மைக்காலங்களில் தீவிரம் அடைந்துள்ள போர் நிலைமைகளால் தமிழர்கள் எல்லைப் பிரதேசங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இதனை 1990ம் ஆண்டின் பின்னர் முழுமையாக அவதானிக்கமுடியும். இந்த வகையில், கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் அமைந்த 6ம், 7ம், 11ம், 35ம், 38ம், 39ம், 40ம் கிராமங்களை எல்லைப்புறக் கிராமங்களை விட்டுத் தமிழ்க்குடியேற்ற வாசிகள் 1990ம் ஆண்டின் பின்னர் வெளியே விட்டனர். இதன் காரணமாக இவர்களுக்குச் சொந்தமான வயல் நிலங்கள் தரிசு நிலங்களாக மாறி வருகின்றன. இவ்வேளையில் நிலவுடமையாளர்களான தமிழர்கள் தமக்குத் தெரிந்த அயல் கிராமவாசிகளான சிங்களவர்களுக்கு நிலங்களைக் குத்தகைக்கு விடுகின்றனர். இவை இரண்டுக்கும் முரணான வகையில் பொலிஸ், இராணுவம் என்பவற்றின் உதவியுடன் சிங்களவர்கள் தமிழர்களின் நிலங்களில் அத்துமீறல் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். சிலகாலங்களின் பின்னர் இந்நிலங்கள் சிங்களவருக்கு சொந்தமாகப் போகும் அபாயம் உள்ளது. இதற்கு ஓர் முன்னேற்பாடாகவே மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லைப்புறத்திலுள்ள 33ம், 37ம், 38ம், 39ம், 40ம் கிராமங்களுடன் காக்காச்சிவட்டை, பாலையடி வட்டை வக்கி எல்லை, வெல்லாவெளி போன்ற கிராமங்களும் இராணுவ நிர்வாகத்திற்காக இன்று அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கிராமங்கள் காலப்போக்கில் நிர்வாக ரீதியாக அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்படும் அபாயமும் உள்ளது.

எனவே இந்த அபாயகரமான சூழ்நிலையினை தமிழர்களின் அரசியல் தலைவர்கள் என தங்களைத் தாங்களே கூறிக் கொண்டு தலைநகர வாழ்க்கை நடத்துபவர்கள் தீர்க்கதரிசனமான அரசியல் அணுகுமுறைகளினூடாக தடுத்து நிறுத்த முன் வர வேண்டும்.

www.tamilarangam.net

சரிநிகர்

## சந்திரிகா அரசாங்கத்துக்கு...

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வுப் பொதி தொடர்பாகப் பல தளங்களிலும் கருத்தாடல்களும், விவாதங்களும் ஆரோக்கியமான முறையில் இடம் பெறுவது எப்போதும் நல்ல அம்சம். எனினும் பத்திரிகைகளைப் பொறுத்தவரை 'சுதந்திரமான' பத்திரிகைகள் என்று வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகைகளான சண்டே ரைம்ஸ், த சண்டே லீடர், மற்றும் உபாலி நிறுவனப் பத்திரிகைகள் அரசியல் தீர்வுக்கு எதிராகப் பயங்கரமான பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன. இவர்கள் தீர்வுத் திட்டத்துக்கு மட்டும் எதிரானவர்கள் என்பதல்ல. இனப் பிரச்சினைக்கான எந்த ஆரோக்கியமான தீர்வுக்குமே இவர்கள் எதிரானவர்களாகத் தான் இருந்து வந்திருக்கிறார்கள். இலங்கை அரசாங்கங்களும் கடந் காலங்களில் சிங்கள மக்களை ஒரு அரசியல் தீர்வுக்காக முனைப்பாகத் தயார்படுத்தாமையும் இந்த நிலைமைக்கு ஒரு முக்கியமான காரணம் என்பதையும் நாம் குறிப்பிடத்தான் வேண்டும். லேக் ஹவுஸ் பத்திரிகைகளே தீர்வுக்கு ஆதரவாக அரசாங்கத்தின் பணிப்பின் பேரில் செயல்படுவது தான் ஒரு முரண்நகை. சிங்கள மாற்றுப் பத்திரிகைகளான ராவய, யுக்திய போன்றவையும் தீர்வுத் திட்டத்துக்கு ஆதரவாகவும் வெளிப்படையாகவும் இயங்கி வருகின்றன. தீர்வுத் திட்டத்துக்கு ஆதரவாக சிங்கள மக்களின் கருத்துக்களை வளர்த்தெடுப்பதில் பங்காற்றி வருகிற அனைவரும் புத்திஜீவிகளாகவும், கல்விமான்களாகவும், பத்திரிகையாளர்களாகவுமே உள்ளனர். அரசாங்கக் கட்சிப் பா.உக்களோ அல்லது அமைச்சர்களோ இதுபற்றி எவ்வகையான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. மறுபுறத்தில் சிங்கள இனவாத சக்திகள் பலமற்ற முறையிலானாலும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட முயல்கிறார்கள்.

இந்தப் பலமற்ற எதிர்ப்பைக் கூடப் பிரசாரத்தினால் எதிர்க்கப் பொ.ஜ.மு அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு முடியவில்லை. இந்த நிலையில் அரசாங்கத்துக்கும் குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் முக்கியமான கடப்பாடுகள் உள்ளன.

முதலாவது, முன்னேற்றகரமாக முன்வைத்த காலடியில் இருந்து பின் வாங்கக் கூடாது. இரண்டாவது, இனவாத சக்திகளது கூச்சல்களுக்குச் சமரசம் கொண்டு, எல்லாத் தரப்பாரையும் திருப்திப்படுத்த வேண்டுமென்ற மலினத்துவமான யோசனையால் தீர்வுத் திட்ட யோசனைகளை ஐதாக்கக் கூடாது. மூன்றாவது, தீர்வு ஆலோசனைகள் நிரந்தரமான தீர்வுக்குரிய ஒரு அடிப்படை முன்னெடுப்பு என்பதை வலியுறுத்தி யுத்தத்தை நிறுத்த வேண்டும். மறுபடியும் ''முன்னோக்கிப் பாய'' முற்படுவது ஓரடி முன்னே எடுத்த அடி; அடுத்த அடிக்குக் கண்ணிவெடி என்ற நிலைக்குத் தான் அரசாங்கத்தைத் தள்ளிவிடும். வடக்கில் மறுபடியும் பாரிய யுத்த நடவடிக்கையில் ஈடுபடுவது என்பது,(இதற்கான எல்லாத் தயாரிப்புகளும் முடிந்து விட்டன என்று சொல்லப்படுகிறது) தீர்வுப் பொதியைப் புதைகுழிக்கு அனுப்புவதாகும். நான்காவது, தீர்வு ஆலோசனைகளை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும். (கொழும்புப் பிரபல தமிழ்ப் புத்திசீவிகளில் சிலர் அரசாங்கம் தீர்வு ஆலோசனைகளைப் புலிகளுக்கு அனுப்ப வேண்டியதில்லை எனவும் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் முயற்சிகளை ஜனாதிபதி எடுக்க வேண்டியதில்லை என்றும் சிங்களத்தில் சொல்கிறார்கள் என்பது சிரிப்புக்கிடமானது.)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதிச் சந்தர்ப்பம் இது என்பதை ஜனாதிபதி சந்திரிகா தெளிவாகவே உணர்ந்திருக்கிறார் என்பதை அவரது அண்மைக்காலப் பேச்சுக்களும் சண்டே ஒப்சேவருக்கு அவர் வழங்கிய நேர்முகமும் காட்டுகின்றன. இரத்தக் கறைபடியாத கரங்களுடன் அவர் இருந்த போது வந்த வாய்ப்புகள் கை நழுவிப் போயிற்று. எனினும் காலந்தாழ்த்தியாவது இன்னொரு வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது. வடக்கு கிழக்கு மக்களின் யதார்த்தத்தில் வேர் கொள்ளாத ஆலோசனை நிபுணர்களாலும் இடைக்கால நிர்வாகம் எனும் கற்பனார்த்த ராச்சியத்தைப் பற்றிய கனவுகளோடு இருக்கும் தமிழ்க் குழுக்களாலும் திசைகெடாது இருப்பாரானால், தனது அரசாங்கத்தின் அமைச்சர்களையும் அங்கம் வகிக்கும் கட்சிகளையும் தீர்வுக்கு ஆதரவாக முனைப்பாக இயங்க வைப்பாரானால் சமத்துவ சமாதானத் தீர்வுக்காக இன்னொரு காலடியை எடுத்து வைக்கும் வகையில் அவர் செயலாற்ற முடியும்!

## தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு..

தீர்வுக்காகவும் சமாதானத்துக்காவும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயார் என்று அறிவிக்கிற விடுதலைப் புலிகள் கடந்தகால அனுபவங்களிலிருந்து இலங்கை அரசுகளைச் சந்தேகிப்பதைப் புரிந்து கொள்ள முடியும். பொ.ஜ.முன்னணிக்குள் இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வு காண்பதற்குரிய வழிவகைகளிலொன்றாகத் தீர்வுத் திட்டம் முன்வைத்து அதற்காகப் பாடுபடுபவர்கள் உள்ளனர். அதற்காகப் பல்வேறு தரப்பிலும் சிங்கள இனவாதிகளோடு அவர்கள் பொருதுகிறார்கள்.

அறிவிக்கப்பட்டுள்ள தீர்வு ஆலோசனைகள் முன்னேற்றகரமானவை என்பதாலும், நிரந்தரத் தீர்வு தொடர்பாக இருபகுதியினரும் மறுபடி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஒரு நல்லவழி மூலம் என்பதாலும் விடுதலைப் புலிகள் தீர்வு ஆலோசனைகள் தொடர்பாகவும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஏப்ரல் 19இல் யுத்த நிறுத்தத்தை மீறியதன் மூலம் சர்வதேச அரங்கிலும், ஏனைய தரப்புகளிலும் எழுந்த விமர்சனங்களைக் கருத்திற் கொண்டு ஒருதலைப் பட்சமாக வேனும் ஆரம்ப யுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவிக்க வேண்டும். இத்தகையதொரு குறி காட்டும் அறிவிப்பொன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு சுமுகமான ஆரம்பத்தை ஏற்படுத்தலாம் என்று நாம் கருதுகிறோம். தென்னிலங்கையில் தீர்வுக்குச் சாதகமாகத் தொழிற்படும் சக்திகளைப் பலப்படுத்துவதாக அமையும் வகையில் தமது செயற்பாடுகளை அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். இனப் பிரச்சினைக்கான ஆக்கபூர்வமான தீர்வு இரு தரப்பாரதும் பரஸ்பர நம்பிக்கையிலும் தங்கியுள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். ஆங்காங்கு கிளம்பும் சிங்கள இனவாதக் கூச்சல்களும் கருத்துக்களும் மழுங்கடிக்கப்படுவதற்கும் சம்பந்தப்பட்ட இரு தரப்பாரும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்கும் இதன் விளைவாக ஏற்படக் கூடிய சுமுகமாக சூழலை மேலும் செழிப்பாக்கவும் விடுதலைப் புலிகள் உதவ முடியும்.

இன்னொரு தளத்தில் தீர்வு ஆலோசனைகள் பற்றிய திறந்த கருத்தாடல்களையும் விவாதங்களையும் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இடம்பெறும் வகையில் அரசியல் சூழலை அவர்கள் மாற்ற வேண்டும்.

# முகத்துவாரம் கடற்கரையில் இன்னுமொரு சடலம்

கொழும்பு முகத்துவாரம் கடற்கரையில் இம்மாதம் 14,15, 16ம் திகதிகளில் ஒரு (தமிழ்?) இளைஞரின் சடலம் கரையொதுங்கிக் காணப்பட்டது.

25-30க்கும் இடைப்பட்ட வயதையுடைய இவ்விளைஞனின் உடம்பெங்கும் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்ட பல தழும்புகள் காணப்பட்டன. இத்துடன் இடது பக்க கையில் வெட்டுக்காயமும் தலையில் பின்புறம் துப்பாக்கியால் (பிஸ்ரலால்) சுடப்பட்டதிற்கான அடையாளமும் காணப்பட்டது.

கைகள் கயிற்றினால் இறுக்கிப் பிணைக்கப்பட்டிருந்தது. நிர்வாணமாகவே இச்சடலம் கிடந்தது. இவ்விளைஞனின் சடலம் வெள்ளைவான் ஒன்றில் வந்தவர்களால் களனி ஆற்றில் வீசப்பட்டு முகத்துவாரம் கடற்கரையில் கரையொதுங்கியிருக்கலாமென இப்பகுதியிலுள்ளோர் பேசிக் கொள்கிறார்கள்.

மூன்று நான்கு நாட்களாக இச்சடலம் கடற்கரையோரத்திலே தான் கிடந்தது. பொலிசாரோ அல்லது வேறு எவருமோ இவ்விளைஞனின் சடலத்தை பொறுப்பேற்க முன்வரவில்லை. இது யாருடைய சடலம், என்பதற்கான வேறு எந்த விபரங்களையும் இதுவரை பெறமுடியவில்லை.

இந்தச் சடலத்தை இறுதியாக பார்த்த போது அதன்மீது மண்மூடப்பட்டு யாரோ தடிகளால் கட்டப்படிருந்த சிலுவை ஒன்றை நாட்டியிருந்ததாகவும் அங்கிருந்தவர்கள் கூறினர். 17ம் திகதிக்குப் பின் இச்சடலம் காணப்படவில்லை. இதுபற்றி அங்கிருந்த மீனவர்களை விசாரித்த போது, பொலிஸ்காரர்கள் கூட இதைச் செய்திருக்கலாம் என்ற பயத்தில் தாங்கள் யாரும் பொலிசுக்கு அறிவிக்கவில்லை என்றும் தெரிவித்தார்கள்.

இரவும் பகலும் சந்திக்குச் சந்தி வீதித்தடைகளைப் போட்டு பொலிசாரும் இராணுவத்தினரும் கண்காணிப்பில் ஈடுபடும் கொழும்பு நகருக்குள்ளும் அதனை அண்டிய பகுதிகளிலும் இவ்வாறான சம்பவங்கள் நடந்து கொண்டிருப்பது எல்லோருக்கும் அரசின் மீதே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தமிழர்களுக்கு எதிரான அரச படைகளின் நடவடிக்கைகள் கொஞ்சமும் குறைந்தபாடில்லை.

கொட்டாஞ்சேனை பொலிசில் வாசலில் காவலில் நிற்கும் பொலிசார் பிடிபட்டிருக்கும் உறவினர்களைப் பார்க்கச் செல்பவர்களை உங்களையும் விசாரிக்க வேண்டும் எனக் கூறி ஒவ்வொருவரிடமும் பணம் கறந்துவிட்டே பார்ப்பதற்கு அனுமதிக்கிறார்கள். இது இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இதனால் குழந்தைகளையும் தாய்மார்களையும் விசாரணைக்கென அழைத்துச் செல்வதனையும் காணக் கூடியதாக உள்ளது. புறக்கோட்டைப் புகையிரத நிலையத்திலும் காவலில் நிற்கும் பொலிசார் வவுனியா மட்டக்களப்பு ரெயினில் வருவோர் போவோரை தனித்தனியே அழைத்து விசாரிக்க வேண்டும் எனக் கூறி பணம் வாங்கி விட்டே அனுப்புகிறார்கள். இதற்கு உடந்தையாக ரயில்வே ஊழியர்களும் அதிகாரிகளும் ஒத்தாசை வழங்குவதையும் காணக் கூடியதாக இருக்கிறது.

முகத்துவாரம் பொலிசில் குற்றப் புலனாய்வுப் பிரிவில் (சி.டி.பி.) பணிபுரியும் டின் ஜாகோப் எனும் இரு பொலிஸ்காரர்கள் இங்குள்ள தமிழர்கள் வீடுகளுக்கு தனியாகச் சென்று நீங்கள் புலி உங்களைக் கொண்டுபோய் விசாரிக்க வேண்டும் எனக்கூறி, ஆயிரக்கணக்கில் பணம் பறிப்பதை ஒரு தொழிலாகக் கொண்டுள்ளார்கள் என்றும் தெரியவருகின்றது.

இதையெல்லாம் விட முன்னர் கண்தோன்றிய கப்டன் எனப் புகழப்பட்ட முனாசின் குழுவில் இருந்த குட்டி என்பவர் இராணுவத்தைச் சேர்ந்து சிலருடன் சேர்ந்து கனகலிங்கம் (யோசப் (இவர் முன்னர் ஈ. பி. ஆர். எல். எப் இல் இருந்தவர்) என்ற கிளிநொச்சியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒரு இளைஞரை ஆமர் வீதி ஸ்டார் லொஜ்ஜுக்கு முன்பாக வைத்தே கடத்திச் சென்றுள்ளார் என்றும், இவர் கடத்திச் செல்லப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகிய போதும் இவர் எங்குள்ளார் இவருக்கு என்ன நடந்தது என்று இதுவரை யாருக்குமே தெரிய வரவில்லை என்றும் கூறப்படுகின்றது. இவரை கடத்திச் செல்லும் போது ஒரு பஜிரோவும் ஒரு வெள்ளை வானுமே வந்ததாக அறிய முடிகிறது.

விசேட அதிரடிப் படையால் கைது செய்யப்படுபவர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்படாமல் அவர்கள் ஜீப் உள்ளே ஜீப்புக்குக் கீழே குப்புறப்படுக்க வைத்தவாறு கடவத்தையிலுள்ள அவர்களின் முகாமிற்கே கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிய வருகிறது. இம்முகாமில் பல தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாகவும் பரவலாகப் பேசப்படுகிறது.

-குருஜேந்திரன்

## பனை அபிவிருத்திச் சபை:

# ஊழல்கள் பற்றிய விசாரணை

### தற்போதைய தலைவரின் அறிக்கை இது!

பனை அபிவிருத்திச் சபையின் கடந்த காலத் தலைவர் க. நடராஜா அவர்கள் கடமையாற்றிய 13 வருட காலப்பகுதியில் நடைபெற்ற நிர்வாக, நிதி ஊழல்களை விசாரிக்க வேண்டும் என கடந்த மாதம் நடைபெற்ற பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கௌரவ பொதுநிர்வாக, பாராளுமன்ற அலுவல்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு, ஒரு தனி நபர் கொண்ட விசாரணை உத்தியோகத்தரை நியமிக்கும்படி மேற்படி அமைச்சின் செயலாளர் அவர்களை பதில் அமைச்சர் கௌரவ அத்தாவுட செனிவிரட்ன அவர்கள் பணித்துள்ளார்கள்.

மேலும் கடந்த 1994ம் ஆண்டு சபையின் தேவைக்காகப் பெறப்பட்ட ஒரு கட்டிடத்திற்கு கொடுக்கப்பட்ட முற்பணம் ரூபா 90,000/-த்தினை இச்சபையின் பழைய தலைவர் க. நடராசா அவர்கள் தன்னிச்சையாக பெற்றுக்கொண்டதாகவும், இது பனை அபிவிருத்திச் சபையின் கணக்கு எதிலும் காட்டப்படவில்லை எனவும், அதனைத் திருப்பி பெற்றுக் கொடுக்கும் படியும் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒரு மோசடி முறைப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. இதன் புலன் விசாரணை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இவற்றைவிட தற்போது நடைபெற்றுவரும் தற்காலிக வேலை நீக்கம் சம்பந்தமான ஒரு விசாரணைக்கு சாட்சியாக வரும்படி விசாரணை உத்தியோகத்தர் க. நடராசா அவர்களுக்கு அறிவித்திருந்தார். இவ்விசாரணை ஒகஸ்ட் மாதம் 11ம் திகதி நடைபெற இருந்தது. இது தொடர்பாக ஒகஸ்ட் 04ம் திகதி தொலைபேசி மூலம் விசாரணை உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்ட க. நடராசா அவர்கள் தான் ஒகஸ்ட் 11ம் திகதி நடைபெறும் விசாரணைக்கு வருவதாக உறுதியளித்திருந்தார். பின்பு ஒகஸ்ட் 05ம் திகதி விசாரணை உத்தியோகத்தருக்கு அனுப்பிய குறிப்பு ஒன்றில் தனக்கு சிறிய இருதய நோய் இருப்பதாகவும், அதனால் டாக்டர் இரண்டு மாதங்கள் படுக்கையில் ஓய்வு எடுக்கும்படி கூறியதனால் தான் இந்தியா சென்று சிகிச்சை பெற இருப்பதாகவும் கூறியிருந்தார்.

ஒகஸ்ட் 06ம் திகதி வீரகேசரிப் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையின்படி இவர் தனது இளைப்பாறும் காலத்தில் ஓய்வெடுக்க அவுஸ்திரேலியா செல்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைகளின் மூடு மந்திரத்தை யாரும் அறிய முடியாததாகவுள்ளது.

வீரகேசரிப் பத்திரிகையில் வெளியான கட்டுரையில் 'கற்பகம்' என்று எமது வியாபார நிறுவனத்தின் மூலம் அக்கட்டுரை எழுதப்பட்டதாக ஒரு பிரேமையை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கட்டுரைக்கு எமது ''கற்பகம்'' நிறுவனம் எந்த விதத்திலும் பொறுப்பல்ல.

பிரதம ஆசிரியர்:- சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல.4, ஜெயரட்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 593615
வெளியீட்டாசிரியர்: ச.பாலகிருஷ்ணன், மேர்ஜ் 18/2 அலோசாலை, கொழும்பு -03. அச்சுப்பதிவு: நவமக அச்சகம்.334 காலி வீதி இரத்மலானை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்